සරිනිහර්
SARINIHAR

# சரிநிகர்


சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி


## ஹர்த்தால்!


மக்கட்காய்ப் போராடி மரணித்தாற் தியாகியந்த
மக்களே மக்களுக்காய் மரித்தாலோ — மக்கள்
போராட்ட ம:.தென்பீர் என்னென்பீர் புளொட்டுக்காய்
போராட்டம் அவர்நடத்தப் புகின்?

— ஈழமோகம்



இதழ் - 153 ஓக. 20 - செப் 03, 1998 விலை ரூபா.10.00

## மட்டக்களப்பு: கொலையுதிர் காலம்!



## விடுவிக்கப்பட்ட பயங்கரவாதி!




## மலையகக் கைது!



## பொ.ஐ.மு. நான்காண்டுகள் பூர்த்தி:

# புதைகுழியிலிருந்து புதைகுழிகளை நோக்கி...

## தொடரும் தணிக்கை 77 வது நாள்



# முல்லைத் தீவில் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்! கடலில் பின் தொடர்ந்த அரசு?

கடந்த 14ம் திகதி முல்லைத் தீவுக்கடலில் அரச விமானங்களால் குண்டு வீசி மூழ்கடிக்கப்பட்ட கப்பல் சம்பவத்தின் உண்மை நிலைவரம் இன்னும் தெளிவடையவில்லை, அரசாங்க தரப்பு ஒரு கருத்தையும், கப்பலில் இருந்து புலிகளால் கடலில் வைத்து அழைத்துச் செல்லப்பட்டிருக்கும் மாலுமிகள் இன்னொருபுறமாக முரண்பட்ட கருத்தையுமே தெரிவிக்கின்றனர்.

84ஆயிரம் பக்கெற் சீமெந்து, ஆயிரம் மோட்டார் சைக்கிள்கள், 15 டிரக்டர்கள், 1500 பெரல் டீசல் எண்ணை, உணவு மற்றும் சாமான்களுடன் இந்தக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

"எம்.வி.பிறின்ஸ்' கேஸ்' என்ற பெயர் தாங்கிய கொழும்பு துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட இக்கப்பல் உண்மையில் பொருட்களை ஏற்றி இறக்கும் பணியில் விடுதலைப் புலிகளுக்கு தேவையான சீமெந்து ட்ரக்டர்கள், டீசல், மோட்டார் சைக்கிள்களை கப்பலில் ஏற்றி விடுதலைப் புலிகளிடம் கொண்டு சேர்க்கும் நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டதா என்ற சந்தேகம் அரச மட்டத்தில் கிளப்பப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் இராணுவ மூளையின் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு தேவையான பொருட்களை தருவித்துக்கொள்ள எடுக்கப்பட்ட ஒரு தீவிர நடவடிக்கையே இது என அரசாங்க தரப்பு கூறிவருகிறது. மேலும் அரசு கொழும்பு துறைமுகத்தில் பொருட்கள் ஏற்ற தரித்து நின்ற வேளையிருந்து இக் கப்பல் கண்காணிக்கப்பட்டதாகவும் பொருட்களை ஏற்றிக் கொண்டு கொழும்பு-பருத்தித்துறை பிரதான கடல் வழியால் அக்கப்பல் செல்லாது முல்லைத் தீவினை நோக்கி நகர்ந்த போதே குண்டு வீசி மூழ்கடிக்கப்பட்டதாகவும் அமைச்சு வட்டாரங்களினது செய்திகள் தெரிவிக்கின்றன.

கப்பலில் வைத்து புலிகளால் அழைத்துச் செல்லப்பட்ட 22 மாலுமிகளில் இந்தியாவைச் சார்ந்த 19 மாலுமிகளும் விடுவிக்கப்பட்டதும், உள்ளூர் 4 மாலுமிகளும் (3சிங்களவர், 1முஸ்லீம்) விடுதலைப்புலிகளால் விடுதலை செய்யப்படாததும் அரசின் சந்தேகத்தை வலுப்படுத்துவதாகவும் அமைச்சின் உள் வட்டாரங்கள் தெரிவிப்பதாக அறியமுடிகிறது. இக்கப்பலில் ஏற்றப்பட்ட பொருட்களுக்கு சொந்தமான வர்த்தகர்கள் விடுதலைப்புலிகளின் ஏற்பாட்டின் பேரிலேயே பொருட்களை இக்கப்பலில் ஏற்றி அனுப்பினார்கள் என்ற அடிப்படையில் விசாரணை செய்வதற்காக கைது செய்யப்படவிருப்பதாகவும் வேறு சில தகவல்கள் இருந்து தெரிவிக்கின்றன.

# புளொட்டின் கண் திறந்திட வேண்டும்!

ஞாயிறு தொடங்கி செவ்வாய் வரை தொடர்ந்த வவுனியா ஹர்த்தால் புதன்கிழமை ஒரு நாளைக்கு தளர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்தி பெர்மிட் முறையை அறிமுகப்படுத்திய அரசின் நடவடிக்கையைக் கண்டித்து நடந்து வரும் இந்த ஹர்த்தாலை நடாத்தி வரும் புளொட் இயக்கம் இவ் அறிவித்தலை விடுத்துள்ளது. பொது மக்கள் பொருட்களை வாங்குவதற்கு வசதி செய்யுமுகமாக இந்த ஒரு நாள் இடைவெளி விடப்பட்டுள்ளதாகக் கூறும் துண்டுப்பிரசுரமொன்றை புளொட் வெளியிட்டுள்ளது. அரசாங்கம் தனது முடிவை மாற்றுவதாகத் தெரியவில்லை நாமும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்று தெரிவிக்கும் இப்பிரசுரம், வியாழன் முதல் ஹர்த்தால் இன்னும் தீவிரமாக நடாத்தப்படும் என்று தெரிவித்துள்ளது.

தமிழ் முஸ்லிம் மக்கள் மட்டுமல்லாது சிங்கள மக்களையும் பாதித்துள்ளது இந்தப் பெர்மிட் முறை என்று குற்றம் சாட்டும் புளொட் தனது நடவடிக்கை அரசாங்கம் இம்முறையை நீக்கும் வரை தொடரும் என்று தெரிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் கல்விக் கந்தோர் என்பவற்றுக்கு க.பொ.த-உயர்தர பரீட்சை காரணமாக இந்த ஹர்த்தாலில் இருந்து விடுப்பு அளித்துள்ள புளொட் ஏனைய அரசாங்க தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த அனைத்து ஊழியர்களையும் இதனை அனுஷ்டிக்க வேண்டுமென்று கோரியுள்ளது.

இதே வேளை ஒரு சில சுவையான ஹர்த்தால் சம்பவங்களும் நடந்துள்ளன.

இறம்பைக்குளம் (மக்களை தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறுமாறு புளொட் மிரட்டிய கிராமம்) பகுதியில் இராணுவத்தினரின் உத்தரவின் பேரில் போக்குவரத்தில் ஈடுபட்ட இ.போ.ச. பஸ் வண்டியொன்றை வழிமறித்த புளொட் இயக்கத்தினர் அதன் ரயர்களின் காற்றை திறந்து விட எத்தனித்துள்ளனர். ஆயினும் இராணுவம் அவர்களை துரத்தவே அவர்கள் ஓட்டமெடுத்துள்ளனர். அவர்களில் இருவரை துரத்திப் பிடித்த இராணுவத்தினர், இருவரையும் கைது செய்து கொண்டு போயுள்ளனர். அவர்கள் விடுவிக்கப்பட்டு விட்டார்களா என்பது தெரியவில்லை.

இதே வேளை வைரவப் புளியங்குளப் பகுதியில் இ.போ.ச.வுக்குச் சொந்தமான 'பிரேக்டவுன்' பஸ் ஒன்று மறித்த புளொட் இயக்கத்தினர் அதன் ரயர்களது காற்றையும் திறந்துவிட்டு விட்டு சாரதியை ஓட்டிச் செல்லுமாறு பணித்துள்ளனர். சாரதி மறுத்த போதும் ஓட்டிச் செல்லுமாறு அவரை மிரட்டவே, அவர் வண்டியை வீதியை பிளந்தபடி 'ரிம்'மில் ஓட்டிச் சென்றுள்ளார்.

எவ்வாறாயினும் புளொட்டின் இந்த ஹர்த்தால் நடவடிக்கை அவர்களது கட்டுப்பாட்டில் இருக்கும் நகரசபை மற்றும் பொதுநூல் நிலையம் என்பவற்றில் வெற்றியளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. காலையிலேயே அலுவலகத்தைத் திறக்குமாறு பணித்து அது தொடர்ந்து இயங்குவதை உறுதி செய்யுமுகமாக நகரசபையின் முன்னால் ஒரு சில படையினரை கடமையில் ஈடுபடுத்தியும் விட்டிருக்கிறார்கள் படையினர்.

நகராட்சி அலுவலக அதிகாரம் மட்டும் தான் அவர்களுக்கு. அதை மூடித் திறக்கும் அதிகாரம் அவர்களிடம் இல்லையே என்று அங்கலாய்க்கிறார் ஒரு அன்பர்.

எவ்வாறாயினும் புளொட்டின் இந்த ஹர்த்தால் நடவடிக்கையில் மக்களின் நலனும் இணைந்திருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடும் இறம்பைக்குளவாசியொருவர், இந்த நிகழ்ச்சியாவது புளொட்டின் கண்களைத் திறக்க வேண்டும்! தமது அதிகாரம் அப்பாவிப் பொது மக்களை மிரட்டுவதற்கு மட்டும் தான் என்று அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் அப்போது தான் அவர்கள் மக்கள் இயக்கமாக மாற முடியும் என்று கருத்து தெரிவித்தார்.

## பாதை மூடச் சண்டை?

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஒரு வயோதிபப் பெண்மணியும், இளைஞர் ஒருவரும் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் வந்த பாதையில் இராணுவத்தினரால் முட்கம்பி வேலி அடைக்கப்பட்டு தடை செய்யப்பட்டிருந்தது. அப்போது அந்த மூதாட்டி சொன்னார். அங்கே பாதை திறப்பதற்குச் சண்டை பிடிக்கிறார்கள். இங்கே பாதையை அடைத்து வைத்திருக்கிறார்கள் என்றாராம்.

## கும்பிட்ட பலன்!

மருதனார் மடம் சந்தியில் சைக்கிள் நிறுத்துவதற்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது. இந்தச்சந்தியில் ஒரு வைரவர் கோயிலும் உள்ளது. தற்செயலாக யாராவது சைக்கிளை நிறுத்திவிட்டு வைரவரைக் கும்பிட்டால் கும்பிட்ட பலன் உடனே கிடைத்து விடுகிறது. பிறகென்ன இங்குள்ள படையதிகாரி ஜெயசேன வின் உத்தரவுப்படி சைக்கிளைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு நடையைக் கட்ட வேண்டியது தான். சிலசமயங்களில் தர்மமும் (உதை) கிடைக்கிறது!

## புதிய வரவு

கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் சங்கிலியன் வீதியில் வைத்து இரு புலிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக படையினர் அறிவித்தனர். அதாவது இரண்டு ஆண் புலிகள். ஆனால், இந்த புலி உறுப்பினர்களிருவரினதும் சடலங்கள் எரிக்கப்பட்ட போது ஒரு ஆணின் சடலமும் ஒரு பெண்ணின் சடலமும் எரிக்கப்பட்டதாக நேரில் பார்த்தவர்கள் கூறுகின்றனர். அப்படி யானால் அந்தப் பெண்ணின் சடலம் எங்கிருந்து வந்தது?

## ஓடோ ஒரு!

தீவுப்பகுதியில் ஆட்களில்லாத வீடுகளில் படையினர் நுழைந்து கதவுகள், ஜன்னல்கள், ஓடு, மரம் என்பவற்றைப் பிடுங்கிச் செல கின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர்ப் பகுதி செல்பவர்களை காரை நகர்ப்பகுதி கிராமசேவகர்கள் வந்து இவர்கள் காரைநகர் வாசிகள் தான், எமது பிரிவைச் சேர்ந்தவர்கள் தான் என பொன்னாலைப் பாலத்தில் வைத்து பொறுப்பேற்றுச் செல்ல வேண்டும் என கடற்படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

## பேயாய் அறையும் உண்மை!

உயிராகவும், உணர்வாகவும் கலந்து நின்ற உறவு ஒன்று திடீரெனக் காணாமல் போய் விடுதல் பெரிய சோகம். அதுவும் மரணங்களின் நிழல் கவிந்து நிற்கும் பிரதேசத்தில் அம் மண்ணினுடைய மக்களின் வாழ்வு அந்நியர்களால் நிராகரிக்கப்பட்டும், அச்சுறுத்தப்பட்டும் வரும் நாளில் தன் உறவை இழந்து தவிக்கும் சோகம் மகா பெரியது. ஆயினும், ஒற்றை வரி நம்பிக்கையில் இழந்த உறவு மீள என்றாவது வரும். வந்து வாசலில் நிழலாடும், ஆரத் தழுவிப் பிரிவுத் துயர் நீங்க அழுது தீர்க்கும் எனும் நம்பிக்கையில் அவர்கள் இருப்பர். ஆனால் அந்த உறவின் உடல் மலக்குழியிலும், புதை மணலிலும் இருந்து எலும்புக் கூடாகவும் சிதைந்த பகுதிகளாகவும் மீட்கப்பட்டதைக் காணும்போது எழும் அந்த மாபெரும் துயரை என்னவென்று சொல்வது? எப்படி விவரிப்பது? ஆனால், இத்துயரே மக்களின் வாழ்வாக இன்று வடக்கு கிழக்கு எங்கும் விரிகையில் அதை என்னவென்பது? இறுதியாக யாழ்ப்பாணத்தில், புன்னாலைக் கட்டுவனில் உள்ள பயன்படுத்தப்படாத மலக்குழியில் இருந்து மேலும் ஒரு எலும்புக்கூடு எடுக்கப்பட்டுள்ளது. காணாமல் போன ஒருவரின் உடல் அது. இதுதான் உண்மை. முகத்தில் வந்து பேயாக அறையும் உண்மை. காணாமல் போனவரின் உடல்கள் இத்தகைய குழிகளில் இருந்தே இனித் தோண்டப்படும் எனும் உண்மை. சமாதானத்திற்கான யுத்தத்தினை நடாத்தும் படையினரின் அடாவடித்தனங்களால் உருவான உண்மை. செம்மணியில் புதைக்கப்பட்டிருக்கும் உடல்களைத் தோண்டுமாறு கோரிக்கை விடும்போது, மேலும் பயன்படுத்தப்படாமலும் கைவிடப்பட்ட இராணுவ முகாம்களில் உள்ள குழிகள் அனைத்தையும் தோண்டிப் பார்க்குமாறு கோரிக்கை விட வைக்கும் உண்மை. ஆனால், சோகம் என்ன? இந்தக் கோரிக்கையை விட இங்குள்ள எந்த ஒரு தமிழ்க் கட்சிகளுக்கும் வலுவான குரலும் இல்லை. அக்கறையும் இல்லை. பிழைப்புவாத அரசியலினுள் ஊறி ஊறி ஈற்றில் தன் இனமக்களையே ஊரை விட்டுத் துரத்தி அடிக்க வரும் மாண்புமிகு கட்சிகள் தானே இவை? சரி இவை தான் பிழைப்புவாத அரசியல் கட்சிகள் என்றால், இங்குள்ள மனித உரிமைப் போர்வழிகள் என்ன செய்கின்றனர்? சூரியகந்தையின் போது ஆக்ரோஷமாய் ஒலித்த இவர்களின் குரல்கள் அடங்கிப் போனதன் மர்மம் என்ன? இன்னும் இந்த அரசு சமாதானத்திற்காகத் தான் இவ்வளவையும் செய்கின்றது என நம்புகின்றனரா? அல்லது அரசின் மொழியில் கூறப்படும் ''உலகின் குரூர பயங்கரவாதிகளுடன்'' போர்புரிந்து சமாதானம் பெறுகையில் இத்தகைய காணாமல் போகுதலும், புதைகுழிகளும் சர்வசாதாரண நிகழ்வு தான் என்கின்றனரா? அல்லது தென்னிலங்கையில் அறுபதினாயிரம் பேர் காணாமல் போன வரலாறு இருக்கையில், இங்கு ஆக அறுநூறு பேர்தான் காணாமல் போயுள்ளனர் எனும் எண்ணிக்கைக் கணக்கில் மனித உரிமைகளைக் கணக்கிடுகின்றனரா? இவர்கள் காக்கும் நீண்ட மௌனம் இந்தக் கேள்விகளை எழுப்புகிறது?

## மிக்க நன்றியுள்ள...

இலங்கை அரசின் தகவல் தொடர்பு பற்றிய பிரக்ஞையும், அதனைக் கையாளும் முறையின் மூலம் தன் இன அழிப்பு விவரங்களை வெளியில் விடாமல் வைத்திருக்கும் அதன் செயல்களும், முற்றிலும் இனவாதம் கொண்டவையாகவும், அதன் சிங்கள பௌத்த பேரினவாதக் கட்டமைப்பைத் தொடர்ந்து தக்க வைக்க உதவுவனவாகவும் எக்காலத்திலும் இருக்கின்றன. இன்று வரையுமான இன அழிப்பு நடவடிக்கைகளை மூடி மறைத்து, அதனைப் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையாகப் பிரகடனப்படுத்துவதும் இதன் மூலம் தான். அத்தகைய ஒரு துறைக்கு அமைச்சராக இருப்பவர் இம் முறைமையின் ஒரு குறியீட்டுப் பொருளாக அல்லது குறியீடாகவே இருப்பார். அவர் ''இன்னார்'' எனும் தனி மனிதர் அல்ல. ஒட்டுமொத்த அளவின் குறியீடு அவர். அத்தகைய ஒருவர் தான் மங்கள சமரவீர. அவர் மீதான நம்பிக்கை இல்லாப் பிரேரணையின் போது இவற்றை எல்லாம் உணராத எம் தமிழ்ப் பாராளுமன்றப் புத்திஜீவிகள் அவரை இனவாதி அல்ல, மகாபுருஷர் எனக்கொண்டாடி உள்ளனர். தலையில் தூக்கி வைத்துக் கூத்தாடியுள்ளனர். அதுவும் தமிழர் தேசியத்தைச் சிதைத்து நிலத்தொடர்புகளை அறுத்தெடுக்கும் தீர்வுப் பொதிக்காவது வக்காலத்து வாங்கினார் எனும் நன்றிப் பெருக்கால் தான் இவற்றைச் செய்தார்களாம். 'கிரடிட் காட்' விடயம் தொடர்பான இந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணையில் இன்பிரச்சினை தொடர்பாகக் கதைக்கும் தேவை இல்லை என இவர்கள் கூறுகின்றனர். ஆனால், அவரை அது சார்பாக உத்தமர் எனப் புகழுகின்றனர். சுதந்திரபுரப் படுகொலைகள் போன்ற மிக அண்மைய இன அழிப்பைக்கூட இங்கு உள்ள தொடர்புசாதன முறைமை இருட்டடிப்புச் செய்த பின்னும் கூட அவரின் எந்த நல்ல செயலிற்காக நம்பிக்கை கொள்ள வேண்டி உள்ளது எனத்தெரியவில்லை. அத்தகைய படுகொலைகளை ஒரேயடியாக மறுக்கும் ஒருவரைத் தான் தமிழ் மக்களின் தோழனாக இக்கட்சிகள் கருதுகின்றன. அவரை நம்புகின்றன. பேஷ்.பேஷ் நன்றாக நம்புங்கள். அந்த இருட்டடிப்பு முறைமையின்கீழ்தான் உங்கள் கப்பம் கேட்டலும் படுகொலைகளும் கூட மறைக்கப்படுகின்றன என்ற நன்றிக் கடனிற்காகவேனும் நம்பித் தொலைக்க வேண்டாமா என்ன?

## போய்ச் சேரும் கடைசி இடம்

எனக்கு இப்போதெல்லாம் வாசுதேவநாணயக்காரவையும், பட்டிவீரக்கோனை யும் காணும் போது சிரிப்புச் சிரிப்பாக வருகிறது. பாவம் அவர்கள். மாகாண சபைத்தேர்தலை ஒத்திவைக்க முதல் சொன்ன சொல்லும், இப்போது அவர்கள் காக்கும் மௌனத்தையும் பார்க்கும் போது ''ஏன் அப்படி முதல் சொன்னோம்'' என நினைத்துக் கொள்கிறார்கள் போலிருக்கிறது. பட்டிவீரக்கோன் ஒரு சமயம் ''தேர்தல் அவசரகாலச் சட்டம் மூலம் பின்போடப்பட்டால் தாம் கடுமையாக எதிர்ப்போம்'' எனக் கூறியிருந்தார். ஆனால், அவரின் எதிர்ப்பு என்பது அந்நேரத்தில் பாராளுமன்றத்தில் பங்கு பற்றாமல் விலகி இருப்பது என்பதையே காட்டியது. உயர்ந்த இடதுசாரிக் கொள்கையில் வளர்ந்தவர்களாகத் தம்மைக் கூறிக்கொள்பவர்களின் முற்போக்கான செயல் தான் இது. ஆனால் அரசு தேர்தலை ஒத்தி வைத்த பின் எதிர்ப்புப் பற்றிய மூச்சும் இல்லை. வாசுவின் நிலையோ அதைவிடப் பரிதாபம். அம்மணியாரிற்கும் அவரின் கட்சியினரிற்கும் தற்போது வாசுவின் உட்கட்சிப் போராட்டங்கள்(?) திருப்தி கொடுக்கவில்லை. ''அரசை விட்டுவிட்டு விரும்பினால் வெளியேறலாம்'' என அவரிடமே நேரில் கூறும் அளவிற்கு அத் திருப்தியின்மை வளர்ந்திருக்கிறது. ஆனால் இப்படியான முற்போக்காளரிற்குக் கிடைக்கும் கடைசி நிலை இதுவாகத்தான் இருக்கும் என்பதை இன்னும் கூடப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

நா. சுந்தரன்

### மட்டக்களப்பு:

# கொலையுதிர் காலம்

## தொடரும் கொலைகள் பற்றி ஓர் அறிக்கை

- சற்குரு

மட்டக்களப்பில் அண்மைக் காலமாக 90இனை ஒத்த நிலைமை தென்படுவதினை காணக் கூடியதாக இருக்கின்றது. 90களில் நடைபெற்ற கொலைகளுக்கும், ஆட் கடத்தலுக்கும் 'முனாஸ்'ஸும் புளொட் மோகனுமே காரண கர்த் தாக்களாக இருந்து செயற்பட்டு வந் தார்கள். ஆனால், தற்போது நடை பெற்றுவரும் மர்மக் கொலைகளுக்கு 'ஷக்கியா', 'ராசிக்கா' சூத்திரதாரிகள் என்பது தான் இன்று அனைவரிடமும் கேள்விக் குறியாக இருந்து வருகின் றது. மட்டக்களப்பில் கடந்த இரு மாதகாலத்தில் ஐந்து மர்மமான கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன.

இந்த ஐந்து கொலைகளும் ஒரே பாணியில் செய்யப்பட்டதுமல் லாமல், இக்கொலைகளுக்குப் பாவிக் கப்பட்ட துப்பாக்கி ரவைகளும் ஒரே இனத்தைச் (எம்.9 பிஸ்டல்) சேர்ந்த வையாகவே இருக்கின்றன. எனவே இந்த ஐந்து கொலைகளையும் செய் தது ஒரே குழுவைச் சேர்ந்தவர்கள் என்பது நிரூபணமாகின்றது. இந்த ஒரே குழு எது என்பது தான் அடுத்த கேள்வி? இந்த ஐந்து கொலைகளிலும் சம்பந்தப்பட்ட கொலையாளிகள் தமிழ் பேசியிருக்கிறார்கள். இந்த ஒரேயொரு காரணத்தாலேயே கொலையாளிகள் ராசிக்கினுடைய ஆட்கள் என்ற சந்தேகங்கள் எழ ஆரம்பித்தன. உண்மையில் இந்தக் கொலைகளைச் செய்தவர்கள் ராசிக் குழுவினரல்ல என்பது தான் புதிய செய்தியாக இருக்கிறது.

'புச்சான்' என்பவரே இந்தக் கொலை களின் சூத்திரதாரி என்பதுபுதுத் தகவல். ராசிக்குழுவில் இவர் ஆரம்பத்தில் செயற்பட்டு வந்தார். தற்போது அதில் இருந்து விலகி இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் சேர்ந்து செயற்பட்டு வருகின்றார். இவர் மட்டக்களப்பு கூழாவடி, கிராமத்தைச் சேர்ந்தவர். தனது பாது காப்புக் காரணம் கருதி ஜெயந்திபுர பொலிஸ் காவலரணுக்கு அருகில் மனைவியுடன் குடித்தனம் நடத்துகின் றார். இவருடன் புன்னைச்சோலை யைச் சேர்ந்த 'தங்கன்' என்பவரும் சேர்ந்தே இக்கொலைகளை செய்து வருகின்றார் எனத்தெரியவருகின் றது.

இவர்கள் இருக்கின்ற பகுதிகளில் யாருடைய குடும்பத்திலாவது புலி யோடு சம்பந்தப்பட்டவர்கள் இருப் பின் அவர்கள் பற்றிய தகவலை இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கி, அத்தோடு தங்களது குடும்ப எதிரிகளையும், புலிச்சாயம் பூசி அவர்களையும் காட்டிக்கொடுப்பதே இவர்களின் வேலயாக இருக்கின்றது. இராணுவப் புலனாய்வுப் பிரிவின ரும், இராணுவ அதிகாரிகளும் இவர்களைப் பயன்படுத்தி இக் கொலைகளைச் செய்து வருகின்றனர். இந்த ஐந்து கொலைகளில் உதயசேகர், அருளானந்தம் ஆகியோரின் கொலை கள் தனிப்பட்ட விரோதத்தை வைத்துச் செய்யப்பட்டவை எனத் தெரிய வருகிறது.

சம்பவதினம் இரவு 7.20 மணியளவில் புச்சான், தங்கன் ஆகியோர் உதய னின் வருகைக்காக புகையிரதக் கடவை அருகில் காத்து நின்றதை பலரும் அவதானித்திருக்கிறார்கள். இவர்களின் நடமாட்டம் பற்றியும், உதயனின் வருகைக்காகத் தான் காத்து நிற்கிறார்கள் என்பதையும் இவர்களுடைய கதைகளில் இருந்து அவதானித்திருக்கிறார்கள். இவர்கள் நின்ற இடத்திலிருந்தே உதயன் சுடப்பட்ட சத்தம் கேட்டதும், அவரது சடலம் அவ்விடத்திலேயே கிடந்ததும் இதனை உறுதிப்படுத்துகின்றது.

இதேபோன்று சத்துருக்கொண்டானில் நடைபெற்ற கணவன், மனைவி இரட்டைக் கொலையிலும் இவர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். சம்பவம் நடப்பதற்கு இரண்டு மணித்தியாலங் களுக்கு முன் இவர்கள் இராசரத்தினம் அவர்களின் வீட்டு வேலியோரத்தில் பதுங்கியிருக்கிறார்கள். இவர்களுக்கு



பரிச்சயமான ஒருவரை இவர்கள் கண்டதும் மரத்துக்குப் பின்னால் இவர்கள் ஒழிந்திருக்கிறார்கள். இராச ரெத்தினம் சுடப்பட்ட வேளையில் சுட்டவருடைய பேரைச் சொல்லி மனைவி நாகேஸ்வரி கத்தியவு டனேயே காரியம் பிழைத்ததால் நாகேஸ்வரியும் சுடப்பட்டார். நாகே ஸ்வரியின் கொலையின் பின்பே இவர்கள் முகத்துக்குக் கறுப்பு துணி கட்டத் தொடங்கியுள்ளார்கள். தங் களை இனம் காணாமல் இருக்கட் டுமென கறுப்புத்துணிகட்டி செய்யப் பட்ட முதற்கொலை இன்னாசி பிரான்சிஸ்ஸினுடையதாகும். பிரான்சிஸினுடைய வீட்டுக்கும் புச்சானுடைய வீட்டுக்கும் இடைப் பட்ட தூரம் 250 யார் வரை இருக்கும். ஒருவேளை தன்னை அடையாளம் கண்டு விடுவார்கள் என்று கறுப்புத் துணி கட்டினார்களோ என்னவோ தெரியாது.

ஆனால், இது எல்லாவற்றையும் விட விசித்திரமானது என்னவென்றால், இராசரெத்தினம் நாகேஸ்வரி கொலை செய்யப்பட்ட சிறிது நேரத்தில் 3வது படைப்பிரிவு முகாமில் இருந்து ஒரு அதிகாரி ராசிக்கிற்கு போன் பண்ணியிருக்கிறார். சம்பவம் நடந்த இடத்தைச் சுட்டிக்காட்டி (சம்பவத் தைக் குறிப்பிடாமல்) புலிகள் அப்பகுதிக்கு வந்திருப்பதாக தகவல் கிடைத்திருப்பதாகவும் அந்த இடத் துக்குப் போய் சுற்றிவளைக்குமாறும் கூறியிருக்கிறார். இவர்கள் இங்கு வந்த போது இந்தக் கொலைச் சம்பவம் நடந்து முடிந்திருந்தது. இதேபோன்று பிரான்சிஸ் கொலை செய்யப்பட்ட அன்றிரவும் அச்சம்ப வத்தைக் குறிப்பிடாமல் குறித்த இடத்தைக் குறிப்பிட்டு அங்கு புலி வந்ததாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்துக்கும் இதே அதிகாரி போன் மூலம் தெரிவித்தாராம். உண்மையில் இந்த 'போன்' புலி வந்திருக்கின்றது என்ற தகவலைக் கொடுக்கின்ற போர்வை யில், தங்களால் செய்யப்படுகின்ற கொலைகளை தாங்கள் செய்ய வில்லை என நிரூபணப்படுத்தப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்றே கொள்ள முடிகிறது.

இதேபோன்று காரைதீவு இராணுவ முகாமைச் சேர்ந்த கமால் பெரேரா என்பவரும் புலிவேட்டையாடி வரு கின்றார். கடந்த இரு மாதங்களுக்கு முன் கல்முனையில் அவரது வீட்டில் வைத்துச் சுடப்பட்ட பொடியப்புசாமி ஜெயகாந் (19) ஒரு ஒன்றுமறியாத ஒரு அப்பாவி மாணவன். சம்பவ தினம் 6.30 மணியளவில் வீதியால் சென்று கொண்டிருந்த கமால் குழுவினர் வேலியால் எட்டிப்பார்த் திருக்கின்றனர். ஜெயகாந் வீட்டுத் திண்ணையில் இருந்திருக்கின்றார். உடனேயே படலையை உடைத்து வளவுக்குள் வந்த கமால், ஜெய காந்தை உறவினர்கள் முன் தாக்கியிருக்கின்றார். தனது மகனை அடிப்பதைக் கண்டு பதறிப்போய் குறுக்கே போன தாயும் தாக்கப் பட்டார். சற்று நேரத்தில் பின்பக்கமாக உள்ள வளவுக்குள் இழுத்துச் சென்று அவரைக் கமால் சுட்டுள்ளார். தனது மகன் சுடப்பட்டதை கண்முண்ணே பார்த்து நின்ற தாய் சுந்நவர்களைக் குறிப்பிட்டுச் சாட்சியம் கூறியும் 'இனம் தெரியாத நபர்களினால் சுடப்பட்டு ஏற்பட்ட இரத்தப் பெருக் கினால் மரணம்' என்றே மரண அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்பட் டுள்ளது.

இதேபோன்று சங்கரன் கண்ணன் (19) என்பவரும் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார். இவர் ஏற்கெனவே 3 மாத காலமாக காரைதீவு முகாமில் கையொப்பமிட்டு வந்தவர். ஆனால் சம்பவம் நடப்பதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் முகாமுக்கு கையொப்பமிடச் சென்ற வேளை இனி வரத் தேவையில்லை என்று இவருக்குக் கூறப்பட்டிருக்கின்றது. இவர் திருமணம் முடித்து 3மாதம் தான். புதுவருடத்துக்காக சாமான் வேண்டுவதற்காக கல்முனைக்கு வந்தவர். தனது நண்பர் ஒருவருடன் மருதமுனைக்கு வந்திருக்கின்றார். அங்கு நண்பகளுடன் கதைத்துக் கொண்டிருந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கண்ணனை கைகளை கட்டி மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றிருக்கின்றனர். வந்தவர்களில் ஒருவர் கமால். இவரை துரவந்திய மேடு என்ற இடத்துக்கே கொண்டு சென்றார்கள். இதேவேளை அங்கு சுற்றிவளைப்பு நடந்து கொண் டிருந்தது. துரவந்தியமேட்டுக்கு கண்ணனைக் கொண்டு சென்று மிகவும் மோசமாகத் தாக்கியபின் சுட்டுக் கொன்றிருக்கின்றார்கள். ஆனால், நீதிமன்றில் வழக்கு நடந்த வேளையில் கண்ணன் ஆயுதம் இருக்கும் இடத்தைக் காட்டவென்றே கூட்டிச் சென்றதாகவும் அங்கு புலிகள் மறைந்து நின்று சுட்டதில் கண்ணன் இறந்ததாகவும் கமால் சாட்சி சொன் னார். ஆனால், கண்ணனின் கைகள் முறிக்கப்பட்டு உடம்பில் அடிகாய ங்கள் இருந்திருக்கின்றன. இதனால் அதிர்ச்சி அடைந்த கண்ணனின் மனைவி இ. ஜீவராணி (19)மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் வீட்டில் இருக்கின்றார்.

இதே கதிதான் சுதாகரனுக்கும் ஏற்பட்டது. கமால் புலிச்சாயம் பூசி அப்பாவிகளை சுடுவதிலும், அடிப்ப திலும் திருப்தி அடைபவன் என்றும் கூறுகின்றார்கள் மக்கள்.

| திகதி | பெயர் | இடம் | காரணம் | யாரால் |
|---|---|---|---|---|
| 18.06.98 | து. உதயசேகரன் | புனைச்சோலை | - | பூச்சான், தங்கன் |
| 18.07.98 | ஆ. அருளானந்தம் | நாவற்குடா | - | - |
| 10.08.98 | இ.பிரான்சிஸ் | கருவேப்பங்கேணி | புலிச்சாயம் பூசப்பட்டவர் | பூச்சான் |
| 07.08.98 | இ.இராசரெத்தினம் | சத்துருக்கொண்டான் | புலிச்சாயம் பூசப்பட்டவர் | பூச்சான் |
| 07.08.98 | கி.நாகேஸ்வரி | சத்துருக்கொண்டான் | புலிச்சாயம் பூசப்பட்டவர் | பூச்சான் |

(மட்டக்களப்பு மநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டவர்கள்)

| திகதி | பெயர் | இடம் | காரணம் | யாரால் |
|---|---|---|---|---|
| 02.05.98 | பொ.ஜெயகாந் | கல்முனை | புலி என்ற சந்தேகம் | |
| 13.01.98 | ச.கண்ணன் | 4ம் கொலனி | புலி என்ற சந்தேகம் | காரைதீவு எஸ்.டி.எப். முகாமைச்சேர்ந்த கமால் பெரேரா |
| 02.06.98 | ந.புஸ்பராசா | பெரியநீலாவணை | புலி என்ற சந்தேகம் | |
| 05.04.98 | சோ. சுதாகரன் | பழுகாமம் | புலி என்ற சந்தேகம் | |

## பாரிஸில் நாங்கள்
## மொழிப் புறோக்கர்

பாஷை தெரியாமல் ஒரு நாட்டில் இருக்கிறது எவ்வளவு கஷ்டமெண் றது அனுபவத்தில் தான் உணர முடியுது.

சீ... ஒவ்வொரு விஷயத்துக்கும் ஒவ்வொருத்தனுக்கு தொந்தரவைக் குடுத்துக்கொண்டு... ''மொழிப் புறோக்கர்' மாரைக் கூட்டிக்கொண்டு போகலாமெண்டால் 500 பிராங்கு யார் வீட்ட போவன்?

தலையிடி தாங்க முடியேல்ல... கபாலக்குத்து எண்டுறது இது தானோ?

நாளையிண்டைக்கு மறுநாள் தான் நண்பனுக்கு லீவு.

இண்டைய குத்துக்கு நாளையிண் டைக்கு மறுநாளுக்கு 'றாந்தேவு' எடுத்துக்கொண்டு நண்பனும் நானும் அந்த தர்மாஸ்பத்திரியில் போய் நின்றோம்.

பாரிஸிலும் தர்மாஸ்பத்திரியா?

இருக்கு. ஆனால், அங்க போனால் வருத்தம் கூடும் எண்றதும் அனுப வத்தில் தான் உணரமுடிந்தது.

நோயாளிகள், நோயாளிகளாகக் கணக்கெடுக்கப்படுவதில்லை. விடிய ஏழு மணிக்குப் போய் நிண்டால் தான் 'நம்பர்' உண்டு. அதுவும் இடிபட்டுக் கொண்டு.

நாங்கள் நம்பர் எடுத்துக்கொண்டு டாக்டருக்காகக் காத்திருந்தோம். நண்பகல் தாண்டிவிட்டது.

பசி வேறு வயிற்றைக் கிழித்தது.

ஒரு பிரெஞ்சுப் பெண்மணி - வைத்தி யசாலை சிற்றூழியர் போல இருக்க வேண்டும். வந்து ஏதேதோ சொன் னாள். எல்லோருக்குமாக. ஒன்றும் புரியவில்லை.

நண்பனைத் தேடினேன். சற்றுத் தள்ளி ஏதோ அலுவலாக நின்றான்.

என்னுடைய பேந்தல் முழியைப் பார்த்த இன்னொரு தமிழன்பன் தானாகவே வந்து மொழி பெயர்த்தான்.

மகிழ்ச்சியாக இருந்தது. யாருக்கோ மொழி பெயர்க்க வந்தவனாம்.

'மத்தியானம் சாப்பிடாதவர்கள் வந்து கன்ரீனில சாப்பிட்டிட்டுப் போய் இருக்கட்டாம்'

தள்ளி நின்ற நண்பனை நெருங்கிச் சுரண்டினேன். 'வா வா கெதியாப் போய் வெட்டிட்டுவருவம்' என்றேன் உதட்டுக்குள்.

'எங்க' என்றான்.

அறிந்த விஷயத்தைச் சொன்னேன்.

நண்பன் விழுந்து விழுந்து சிரித்தான்.

'அட அவள் சொன்னது அதில்ல. உணவு ஆரோக்கியம் தொடர்பான கருத்தரங்கு நடக்குதாம். கலந்து கொள்ள விரும்பிறவையள வந்து கலந்து கொள்ளட்டாம்.'

எனக்கு மொழி பெயர்த்தவனைத் தேடினேன்.

இன்னொரு மூலையில் என்னைப் போல் புதிதாக வந்த ஒரு சிறுவனுக்கு ஏதேதோ ஸீரியஸாக அளந்து கொண் டிருந்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு தமிழ்ப் பெயர் அழைக்கப்பட் இருவரும் உள்ளே போனார்கள்.

அதே மொழிபெயர்ப்பாளன்!

சிவ சிவா என்ன நடக்கப்போகுதோ?

'வேள்விக்கிடாய்' ஒன்று நினைவில் மின்னி மறைந்தது.

- சௌமி




"சிங்கள ஜாதிய" (சிங்கள இனம்) எனும் பெயர் கொண்ட பத்திரிகை (வியாழன் தோறும்) கொழும்பில் மீண்டும் வெளியாகத் தொடங்கியுள்ளது. 1997 ஒக்டோபர் 16ஆம் திகதியிலிருந்து வெளிவரத் தொடங்கியுள்ள இப்பத்திரிகை கடும் இனவாதப் பத்திகையாக வெளிவரத் தொடங்கியிருப்பதுடன் சகல இனவாத சக்திகளுக்கும் களமமைத்துக் கொடுத்துள்ளது

தென்னிலங்கையில் இயங்கும் இனவாத அமைப்புகளான "சிங்களயே மகா சம்மத்த பூமி புத்திர பக்ஷய", "மகா சங்கத்தினர்", "ஹெல உருமய", "ஜாதிக்க சிந்தனய", "எக்சத் பிக்கு பெரமுன", "தேசப்பிரேமி பிக்கு பெரமுன", "மக்கள் ஐக்கிய முன்னணி", "சிங்கள வீர விதான பதனம" போன்ற இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் பலரது கட்டுரைகளும் பேட்டிகளையும், இனவாத செய்திளையும் தாங்கி வெளிவருகிறது. இப்பத்திரிகையானது விற்பனையில் பெரியளவு முன்னேற்றமில்லாத போதும் அது, இரு நிறங்களில் முகப்பு பக்கத்துடன், பெரிய அளவில், விளம்பரங்கள் எதுவுமின்றி வெளிவருவதைப் பார்த்தால் இது விற்பனையை இலக்காகக் கொண்ட பத்திரிகையல்ல என்பது தெளிவாகத் தெரிகின்றது.

பத்திரிகை வெளிவந்திருக்கின்ற சூழல், அதில் பங்களிப்பு செலுத்தியுள்ளவர்கள், அதில் தாங்கியுள்ள ஆக்கங்கள் என்பவற்றை பார்க்கையில் இப்பத்திரிகை சிங்கள ஆணைக்குழுவின் தொடர்ச்சியாகவே வெளிவருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

### சிங்கள ஆணைக்குழவின் தொடர்ச்சி?

"சிங்கள ஆணைக்குழு" 1996ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி தேசிய ஒருங்கிணைப்புக் கமிட்டி எனும் அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்டது. பல சிங்களப் பேரினவாத அமைப்புகளைக் கொண்ட இந்த அமைப்பு சிங்கள இனத்தைத் தவிர்ந்த ஏனைய இனங்களால் சிங்களத் தேசம் ஒடுக்கப்பட்டு வருவதாகவும், எப்படி இந்த தீமைகள் இழைக்கப்பட்டன? இதற்கு யார் பொறுப்பாளிகள்? இதற்கான தீர்வு என்ன? என்பதை ஆராய்வதற்கென இந்தச் சிங்கள ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டது. சென்ற யூலை மாதம் 18ஆம் திகதியன்று இதன் இறுதி அறிக்கையின் முதலாவது பாகம் வெளியிடப்பட்டது. பொ.ஐ.மு அரசாங்கம், முதற் தடவையாக தீர்வுத்திட்டத்தை முன்வைத்த நேரத்தில் அத்தீர்வு யோசனைகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஒன்றாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வாணைக்குழுவின் இடைக்கால அறிக்கை சென்ற வருடம் செப்டம்பர் மாதம் 17ஆம் திகதி வெளியிடப்பட்டது. அவ்வறிக்கை உடனடியாக இடைக்கால அறிக்கை எனும் பேரில் வெளியிடப்பட்டதன் காரணம் பட்ஜட்டுக்கு முன் அரசு தீர்வுத்திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருப்பதாக தெரிவித்ததே. அறிக்கை கூட அரசு ஏற்கெனவே முன்வைத்திருந்த தீர்வு யோசனைகளைச் சாடும் வகையிலேயே முழுக்க முழுக்க அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் அரசும் சிங்கள ஆணைக்குழுவை ஒரு இனவாத அமைப்பாக பிரச்சாரம் செய்யத் தொடங்கியதைத் தொடர்ந்து சிங்கள ஆணைக்குழுவின் கத்தலும் குறையத் தொடங்கியது. அதற்கு எதிர் நடவடிக்கையாக பல நடவடிக்கைகளை ஆரம்பித்தது சிங்கள ஆணைக்குழு. அரசுக்கு எதிராக தேங்காய் உடைத்து சபிக்கும் திட்டம், நாடளாவிய ரீதியில் பிக்குமார்களைக் கொண்ட ஆர்ப்பாட்டங்களை நடாத்துதல், கருத்தரங்குகளை நடாத்துதல் என அது தொடர்ந்தது. அதன் தொடர்ச்சியே தற்போது வெளிவரத் தொடங்கியுள்ள "சிங்கள ஜாதிய" பத்திரிகை எனத் தெரிகிறது.

### வெளிவந்து கொண்டிருக்கும் ஏனைய இனவாதப் பத்திரிகைகள்

ஏற்கெனவே தென்னிலங்கையில் வெளிவரும் பத்திரிகைகளில் தினசரி பத்திரிகையான "திவய்ன" ஒரு கடும் இனவாதப்போக்கையே கடைபிடித்து வருகிறது. அது தவிர "லங்கா தீப" பத்திரிகையும் இனவாதத்தையே கக்கி வருகிறது.

"திரி சிங்களே" (இரு வாரங்களுக்கு ஒரு முறை), "சிங்கள பௌத்தயா" (மாதாந்த பத்திரிகை), "வத்மன" (இரு வாரங்களுக்கொருமுறை), "பொது ஹண்ட" (மாதாந்தப் பத்திரிகை), "தம்சக்" (மாகாசங்கத்தினரால் வெளியிடப்பட்டு வரும் மாதாந்தப் பத்திரிகை), "ஜயசிக்குறு" (படையினரின் 'தேசபக்த சேவை'யை பிரச்சாரப்படுத்துகின்ற ஒரு மாதாந்தத் பத்திரிகை) போன்ற கடும் இனவாதப் பத்திரிகைகள் ஏற்கெனவே வெளியாகிக் கொண்டிருக்கிறன. இதில் "சிங்கள பௌத்தயா" பத்திரிகையானது இலங்கையின் பௌத்த மறுமலர்ச்சியை வித்திட்டவர் என சிங்களவர்களால் கூறப்படும் சிங்கள இனவாத சித்தாந்தத்தின் தந்தையான அநகாரிக்க தர்மபாலவினால் நூறு ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. 1896ஆம் ஆண்டு அநகாரிக்க தர்மபாலவினால் தொடக்கப்பட்ட இப்பத்திரிகை சென்ற வருடத்துக்கு முன்னைய நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடியது. அநகாரிக்க தர்மபால தனது மரண சாசனத்தில் இப்பத்திரிகை தான் இறந்தாலும் தொடர்ந்து வெளிவர வேண்டும் என்று கேட்டிருந்தார். அவரது வேண்டுகோளின்படி மகாபோதி சங்கத்தினரால் இன்னமும் வெளியிடப்பட்டு வருகிறது. இலங்கையில் நூறாண்டுக்கும் மேலாக இடைவிடாமல் வெளிவரும் ஒரே ஒரு பத்திரிகை இந்த "சிங்கள பௌத்தயா" பத்திரிகை தான் என்பது குறிப்பிடத்தக்கது.

### 'சிங்கள ஜாதிய'

"சிங்கள ஜாதிய" *(சிங்களத் தேசம்-Sinhalese Nation)* பத்திரிகையானது 1903 ஆம் ஆண்டு பெப்ரவரியில் பியதாச சிறிசேன என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இவரே இதன் ஆசிரியராகவும் செயற்பட்டார். அநகாரிக்க தர்மபாலவுடன் பௌத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டவர். அப்பத்திரிகையின் நோக்கம் பற்றி அதன் ஆரம்பப் பத்திரிகையில் இப்படிக் குறிப்பிடப்படுகிறது. "சிங்கள மக்களின் நலனுக்காக என்ற பரந்த நோக்கில்" இது வெளியிடப்படுகிறது. இப்பத்திரிகை சிங்கள பௌத்தர்களின் நல்லபிமானத்தைப் பெற்ற பத்திரிகையென்றும் இதன் ஆசிரியராக இருந்த பியதாச சிறிசேன சிங்களவர்களின் தேசிய வீரராக கருதப்படுவதாகவும் *"சிங்கள பத்திரிகை, சஞ்சிகை என்பவற்றின் வரலாறு -தொகுதி 3"* இல் குறிப்பிடப்படுகிறது.

ஆரம்பத்தில் சஞ்சிகை வடிவில் ஆரம்பமான இது, 1909 மார்ச் 1ஆம் திகதியிலிருந்து செய்திப் பத்திரிகையாக வெளிவரத் தொடங்கியிருக்கிறது. மீண்டும் எப்போது நின்றது என்பதை உடனடியாக அறிய முடியவில்லை. மீண்டும் தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளது.

தற்போது வெளிவரத் தொடங்கியுள்ள "சிங்கள ஜாதிய" முதலாவது இதழில் 50 வீதத்துக்கும் மேற்பட்ட இடத்தை தீர்வு யோசனைகளுக்கு எதிரான ஆக்கங்களே ஆக்கிரமித்துள்ளன.

பேராசிரியர், பியசேன திசாநாயக்க,( இவர் தீர்வுப் பொதிக்கு எதிரான ஒரு நூலையும் சிங்கள ஆங்கில மொழிகளில் அண்மையில் வெளியிட்டுள்ளார்) "தீர்வுப் பொதி, சிங்கள இனம், சிங்கள ஆணைக்குழு" எனும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் *"சிங்கள ஆணைக்குழுவை போலி ஆணைக்குழுவென்று கூறுகிறார்கள். மூடர்கள். சிங்களவர்களை இந்த பூமியிலிருந்தே அகற்றிவிட முயலும் ஈழம்வாதிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள எமனின் வடிவிலுள்ள பொதி எனப்படும் வெடிக்குண்டினை சுமந்து செல்லும் கழுதையின் ஒரு கையில் தமிழர்களுக்கு வழங்கும் பொதியையும் அடுத்த கையில் அஷ்ரப்புக்கு வழங்கும் பொதியையும் கொண்டு அனைத்து சிங்களவர்களின் கண்களின் மீதும் மண்ணைத் தூவிக் கொண்டு "தவளம" காரர்கள் போகிறார்கள்."* என்கிறார்.

இன்னொரு பேரினவாதியான பிரசித்தி பெற்ற வழக்கறிஞர் எஸ்.எல்.குணசேகரவின் பேட்டியும் வெளியாகியுள்ளது. இவர் திம்பு பேச்சுவார்த்தையில் (ஐக்கிய தேசியக் கட்சி) அரசாங்கத்தின் பிரதிநிதியாக கலந்து கொண்டவர். இந்திய-இலங்கை உடன்படிக்கையை எதிர்த்து அதற்கெதிராகப் பகிரங்கமாகப் பிரச்சாரம் செய்து கொண்டு ஐ.தே.க.விலிருந்தும், ஏனைய அரச பதவிகளிலிருந்தும் விலகியவர். தீர்வுப் பொதிக்கு எதிராக *"தீர்வுப்பொதியும், எமனின் பொதியும்"* எனும் பல பக்கங்களைக் கொண்ட நூலொன்றையும் (சிங்கள, ஆங்கில மொழிகளில்) வெளியிட்டிருப்பவர். இவர் அளித்துள்ள பேட்டியில் தீர்வுப் பொதியில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் நாட்டின் ஒற்றையாட்சித் தன்மையைப் பாதிப்பதாகவும் சிங்கள நாட்டைத் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் தாரை வார்க்கும் ஒன்றெனவும் "சட்ட" ரீதியில் விளக்கமளிக்கிறார்.

மகா சங்கத்தின் தலைவரான மாதுலுவாவே சோஹித்த ஹிமி சிங்கள ஆணைக்குழு அறிக்கை வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரையும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதில் *"சிங்களவர் உலகத்திலேயே அதி உன்னத இனமாக வாழ்ந்த காலத்திலிருந்து கௌரவத்தையும் புகழையும் பாதுகாத்து வந்த குழுமம். இன்றும் அதே கௌரவத்துடன் இருந்து வரும் இனம் சிங்கள இனம். ஆனால் குறிப்பிட்ட காலமாக பல தீய சக்திகள் சிங்கள இனத்தை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது."* என்கிறது.

தேசப்பிரேமி பிக்கு பெரமுனவின் பொதுச் செயலாளர் பெங்கமுவே நாலக்க ஹிமி எழுதியுள்ள பெருங்கட்டுரையில் *சிங்களவர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டிய காலமிது* என்று அபாய அறிவிப்பை வலியுறுத்துகிறார்.

### பூமிபுத்திரர்களுக்கு தமிழர்கள் இடையூறு விளைவிக்கக் கூடாது

பேராசிரியர் அரமிட்டிபல ரத்னசார தேரர் எழுதியுள்ள கட்டுரையில் "இந்த தேசத்தின் பூமிபுத்திரர்களாகிய சிங்களவர்களுக்கு எந்தவித இடையூறுமில்லாத வகையில் வாழும் கடப்பாட்டைத் தமிழர்கள் கொண்டிருக்க வேண்டும்." என்கிறார்.

ஆசிரியர் தலையங்கத்தில் *"சிங்கள ஜாதிய" பத்திரிகை மீண்டும் வெளிவருவதற்குக் காரணம் 21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய வகையில் சிங்களவர்களை உருவாக்குவதற்கும், அதற்கு தடையாக இருக்கும் தடைகளை நீக்குவதற்குமே."* என்கிறது.

இன்னுமொரு இனவாதியான குணதாச அமரசேகர தனது கட்டுரையில் *"இனவாதத் தமிழ் தலைவர்களால் தோற்றுவிக்கப்பட்ட யுத்தம் சிங்களவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குள்ளாக்குகிறது. அமெரிக்காவில் வெளியாகியுள்ள "The clash of civilizations and the remaking of world order"* எனும் நூலை குறிப்பிட்டு அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் இன்று கவனமாக ஆராய வேண்டிய விடயம் என்றும் புதிய உலக ஒழுங்குக்கு ஏற்றபடி எப்படி எம்மைத் தாயார் படுத்துவதன் அவசியம் குறித்துப் பேசுகிறது.

மகாசங்கத்தினரில் ஒரு பகுதியினர் அரசாங்கத்தை ஆதரித்து வருவதைக் கண்டித்து "மகாசங்கத்தினருக்குள் பிளவு உண்டாவது பெரும் சாபம்" என்ற தலைப்பில் மகா சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பலரின் பேட்டிகள் வெளியிடப்பட்டுள்ளன. மடிகே பஞ்ஞான சீல மகாநாயக்க தேரோ உட்பட பல பிக்குகள் பேட்டியளித்துள்ளனர்.

இது தவிர சிங்கள பௌத்த இலக்கிய நயமுள்ள ஆக்கங்களும் செய்திகளும் ஆங்காங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால், "நாட்டின் பெயரான 'சிங்களம்' என்ற சொல்லையே நீக்கிவிட்டு எமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களில் 'இலங்கையர்' என ஆங்கிலேயர் இட்டதையே இன்றும் பாவிக்குமளவுக்கு நாம் பாதிக்கப்பட்டுள்ளோம்." என்று கூறுகிறது ஆசிரியர் தலையங்கம். ஆனால் வேறொரு இடத்தில் *"நான்காவது இதழிலிருந்து "ஆங்கிலப் பாடத்திட்டம்" தொடர்ந்து வெளிவரவிருக்கிறது. உங்கள் பிரதிகளை இப்போதே கூறி வையுங்கள்"* என்கிறது. அது சரி, சிங்களவர்கள் தமிழ் கற்பதைவிட ஆங்கிலம் கற்பது சிங்களவர்களைப் "பாதுகாத்து"விடுமோ?

இரண்டாவதாக வெளிவந்த "சிங்கள ஜாதிய" (ஒக்டோபர் 30) இதழில் தலைப்புச் செய்தியாக "ஜே.எல்.லின் அரசியலமைப்பு பயங்கரவாதத்'துக்கு எதிர்ப்பு" எனும் தலைப்பில் செய்தி வெளியாகியுள்ளது. உள்ளே குணதாச அமரசேகரவின் "மார்க்சீயமும் தேசிய சிந்தனையும்" என்ற கட்டுரை இனவாதத்துக்கு மார்க்சிய விளக்கமளிக்க முற்படுகிறது. எஸ்.எல்.குணசேகர எழுதிய (மேற்குறிப்பிட்ட) நூலைத் தொடராக வெளியிடத் தொடங்கியுள்ளது. ஆசிரியர் தலையங்கத்தில் *"புலிகள் இயக்கத்தை அரசாங்கம் தடை செய்ய வேண்டும்"* எனக் கோரியிருந்தது.

### இனிவரும் காலம்....


இப்படியான சிங்களப் பத்திரிகைகளின் வரவானது சிங்கள பௌத்த பேரினவாத கருத்தியலை மேலும் கூர்மைப்படுத்துகின்ற போக்காகவே காணமுடிகிறது. அரசின் கட்டமைப்பே சிங்கள பௌத்த கட்டமைப்பாக இருக்கும் நிலையில் இவ்வாறான போக்குகளை அரசு களையுமென நம்புவது கற்பனாவாதமாகத் தான் இருக்கும்.

இன்றைய தீர்வு யோசனைகளை ஆதரிக்கும் தமிழ் சக்திகள் இதையே செய்கின்றன. அரசியலமைப்பு ரீதியாகவே இவற்றுக்கு அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவங்கள் தற்போது "சமாதானத் தீர்வு யோசனை" என சொல்லப்படும் தீர்வுத் திட்டத்தில் கூட அகற்றப்படாதது அதே பேரினவாத கட்டமைப்பின் நீடிப்பையே வலியுறுத்தி நிற்கின்றன. இந் நிலையில் எந்த "அதிகாரப்பரவலாக்கமோ" அல்லது தீர்வுத்திட்டமோ, சமாதான யோசனைகளோ கூட இந்த "சிங்கள பௌத்த பேரினவாத கட்டமைப்பு" நீக்கம் பெறுவது அனைத்து முயற்சிகளுக்கும் முன்நிபந்தனையானது. அது வரை எல்லாமே பம்மாத்து என்பதை தமிழ் சக்திகள் எவற்றுக்கும் விளங்காமலில்லை. ஆனால் நக்கிப் பிழைக்கும் நாய்களுக்கு நக்க இடம் கிடைத்தால் பின் என்ன நோக்கமிருக்க முடியும்? தேவையிருக்க முடியும்?

சிங்கள பௌத்தப் பேரினவாதானது மேலும் மேலும் இறுகிக் கெட்டியாகி சகல மட்டங்களிலும் அது நிறுவனப்படுத்தப்பட்டு, பலப்படுத்தப்பட்டு வருகிறது. இன்னொரு தேசத்தின் மீதான அழிப்புக்கு அர்த்தம் கற்பிக்கும் பேரினவாதமானது இத்தனை தூரம் நிறுவனப்படும் போது அதிலிருந்து தப்புவதற்கோ, தங்களைப் பாதுகாக்கவோ கூட ஒடுக்குமுறைக்குள்ளாகும் சக்திகள் பலப்படுத்தபடாதது. நிறுவனப்படாதது பெரும் துரதிருஷ்டவசமே.

ஆனால் இனி வரும் காலம் ஆபத்து மிகுந்ததாக மாறப்போகிறது என்பது தென்னிலங்கை பேரினவாத அணிதிரள்வுகள் சமிக்ஞை காட்டுகின்றன என்பது மட்டும் உண்மையிலும் உண்மை.


-ஜென்னி



'சிங்கள பௌத்தயா' ஆரம்ப காலங்களில் அதன் முகப்பு




தற்போது அநாகாரிக்க தர்பாலவின் முகத் தோற்றத்துடன் வெளியிடப்பட்டுவரும் 'சிங்கள பௌத்தயா



தற்போது வெளிவரத் தொடங்கியுள்ள 'சிங்கள ஜாதிய' பத்திரிகை


'சிங்கள ஜாதிய'வின் ஆரம்ப கர்த்தாவும் அதன் ஆசிரியராக இருந்தவருமான பியதாச சிறிசேன.



1903 இல் முதன் முதல் சஞ்சிகை வடிவில் வெளிவந்த 'சிங்கள ஜாதிய'



1909 இல் பத்திரிகையாக வெளிவரத் தொடங்கிய போது 'சிங்கள ஜாதிய'வின் அதன் முகப்பு.

# தண்டனையும், தண்டமும் மக்களுக்கு



# இவர்களுக்கு பட்டமும், பதவியும்

பாதுகாப்புக்காக செலவிடப்படும் தொகை எதிர்ப்பார்க்கப்பட்டதைவிட 800 கோடி (8 பில்லியன்) ரூபாய்களால் அதிகரிக்கும் என நிதித்துறைப் பிரதியமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இந்தச் செய்தி அநேகமான பத்திரிகைகளில் முன்பக்கச் செய்தியாக வெளிவந்தது. எதிர்பார்க்கப்பட்ட 44 பில்லியன் ரூபாய் செலவீனத்தைவிட 8 பில்லியன் அதிகரிக்கும் என்று இப்போது அமைச்சர் அறிவித்திருப்பதையிட்டு யாரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. யுத்தம் முடிவுக்கு வரும் என பாதுகாப்புப் பிரதி அமைச்சர் தெரிவித்த பல்வேறு காலக்கெடுக்கள் தவறிப்போனதும், எதிர்பாராத விதமாக பலகோடி ரூபா பெறுமதியுள்ள ஆயுதங்கள் புலிகளிடம் பறிபோயும், அழிந்தும் போனதும் புதிய விடயங்கள் அல்ல. ஆக செலவீனம் அதிகரிக்கும் என்று தெரிவிக்க ஒரு நிதி அமைச்சர் தேவையில்லை. இது ஒரு சராசரி நபருக்கே தெரிந்திருக்கக் கூடிய ஒன்று தான்.

இந்த அதிகரிப்பானது பாதுகாப்பு வரிமூலம் சரிக்கட்டப்படும் என்று அவர் தெரிவித்திருக்கின்றார். ஆனால், நிதி திட்டமிடல் அமைச்சின் அதிகாரிகளிடம் கேட்டால் பாதுகாப்புக்கான நிதி எந்தவிதமான திட்டமிடலுக்குள்ளும் வராமல் முன்கூட்டியே எடுக்கப்பட்டு விடுகிறது என்ற உண்மையைத் தெரிவிக்கிறார்கள். யுத்த நடவடிக்கைகள் திட்டமிடக் கூடியவையாக இருக்கலாம், ஆனால், அதற்கான செலவீனங்கள் திட்டமிடப்பட முடியாதவை. ஏனென்றால், யுத்த நடவடிக்கைகள் எப்படி அமைய வேண்டும் என்பதை தீர்மானிப்பவர்கள் யுத்த நிலைமைகள் குறித்த அறிவும் அனுபவமும் வாய்ந்த இராணுவத் தளபதிகள் அல்ல. மாறாக, அரசியல் தலைவர்களே இதைத் தீர்மானிக்கிறார்கள். அரசியல் லாபத்திற்காக எந்தச்செலவுக்கும் நாம் தயார் என்ற மூர்க்கத்தனமான முடிவுடன் அவர்கள் யுத்தத்தை நடாத்துகிறார்கள். இதனால் அழிந்து கொண்டிருக்கும் தேசிய வருமானம் பற்றி அவர்களுக்கு எந்த அக்கறையும் இல்லை. நாட்டில் சமாதானம் அமைதி பேணப்பட வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் கிஞ்சித்தும் கிடையாது. பதிலாக எவ்வளவு தூரம் சந்தேகத்தையும் இனங்களுக்கிடையிலான துவேஷத்தையும் வளர்த்துவிட முடியுமோ அவ்வளவு தூரத்திற்கு அதை வளர்த்து விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர்கள் அவர்கள்.

எம்.வி. பிரின்சஸ் காஸ் பருத்தித்துறையை நோக்கி பயணமாகிக் கொண்டிருந்த கப்பலை முல்லைக் கடலில் வைத்து புலிகள் மடக்கிப் பிடித்தது தொடர்பாக அரசாங்கம் அவசர அவசரமாக விடுத்த அறிக்கை - அதுவும் ஜனாதிபதி செயலகத்தினால் விடுக்கப்பட்ட அறிக்கை - இவர்களது இந்தப்போக்கை தெளிவாகக் காட்டுகிறது. கப்பல் கப்டன் புலிகளுடன் சேர்ந்து இயங்குகிறார் என்று சந்தேகத்திற்கிடமின்றி தெரியவந்ததாலேயே கப்பல் மீது தாக்குதல் நடாத்தப்பட்டதென்றும், அந்தக்கப்பலில் சந்தேகத்திற்கிடமான பொருட்களும் கடத்தப்பட்டதாகவும் அது தெரிவித்தது. அரசாங்கம் நிதானமாக, நடப்பது என்ன என்பதை அவதானித்தபின் அறிக்கை விடும் பழக்கத்தை எப்போதோ கைவிட்டு விட்டது. கப்பல் கப்டனை புலிகள் விசாரணை செய்து கொண்டிருக்கும் போது, விமானப்படை அவசரம் அவசரமாக குண்டுவீசிவிட்டது என்கிறார் கப்பல் கப்டன்.

அவசர அவசரமாக முடிவுக்கு வருவது கையிலகப்பட்டவர்களை எல்லாம் புலிகளுடன் சம்பந்தப்படுத்துவது அதை பகிரங்கமாகவே எந்தப் பொறுப்புணர்வுமில்லாமல் வெளியிடுவது என்பதெல்லாம் அரசாங்கத்தின் தலைவி ஜனாதிபதியிலிருந்து கீழ்ப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் வரை அனைவரும் செய்யும் ஒரு செயலாக மாறிவிட்டது.

கடந்த வாரம் ரி.என்.எல். தொலைக்காட்சியில் காட்டப்பட்ட ஒரு காட்சி தொடர்பாக பலத்த சர்ச்சை ஒன்று எழுந்துள்ளது. ஜனாதிபதியின் புதல்வி யசோதராவின் காரை தொடர்ந்து சந்தேகத்துக்கு இடமான முறையில் நடந்து கொண்டார்கள் என்று கூறி இரண்டு தமிழர்களை கொள்ளுப்பிட்டி பொலிஸ் கைது செய்தது. வழமைபோல இவர்கள் யசோதராவை கொலை செய்ய முயன்ற புலிகள் என்ற செய்தி பரவியது. ரி.என்.எல் தொலைக்காட்சி இந்தக் கதையை முக்கிய செய்தியாக யசோதராவின் புகைப் படத்துடன் ஒளிபரப்பியது. ஆனால், இது ஏனோ ஜனாதிபதிக்கு பிடிக்கவில்லை. இப்படி புகைப்படத்துடன் தொலைக்காட்சியில் காட்டியது தனது மகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் விதத்திலான விஷமத்தனமான செயல் என்று அறிவித்தார் அவர். இந்தச் சம்பவத்திற்கும், புலிகளுக்கும் எந்தத்தொடர்பும் இல்லை என்று ஆச்சரியப்படும் விதத்தில் அவர் உறுதியாக மறுத்தபோதும், அடுத்த வரியிலேயே தமது மகளுக்கு தீங்கிழைப்பதற்குரிய வாய்ப்பை ரி.என் எல் புலிகளுக்கு வழங்கிவிட்டது என்றும் குற்றம் சாட்டினார் அவர்.

ஜனாதிபதி இப்படிச் சொன்ன பிறகு கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையமும், அவர்கள் வெறும் குடிவெறியில் இருந்தவர்களே அன்றி புலிகளல்ல என்று அறிவித்துவிட்டது.

ஆனால், இவ்வாறான சந்தர்ப்பங்களின் போதெல்லாம் மாட்டுப்படும் பெரும்பாலான தமிழர்கள் புலிகளாக முத்திரைக் குத்தப்பட்டு விசாரணை இன்றி சிறையில் போடப்பட்டிருக்கிறார்கள்.

1994 கொரகொல்லையில் பிடிபட்ட தமிழ் இளைஞர்கள் முதல் அண்மையில் கடற்கரை வீதி பொலிஸ் நிலையத்தில் கைதான பெண்வரை ஜனாதிபதியைக் கொல்ல வந்தவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டவர்களின் தொகை ஆயிரத்தையும் தாண்டிவிட்டது. சட்டத்தரணி அப்பாப்பிள்ளை விநாயகமூர்த்தி தான் மட்டுமே ஆயிரக்கணக்கான அடிப்படை உரிமை மீறல் வழ . குக்களைத் தாக்கல் செய்திருப்பதாக கூறுகிறார். இன்றைவரை ஒரு பத்துபேர் கூட குற்றத்திற்கான ஆதாரத்தைக் கொண்டவர்களாக காணப்படவில்லை என்கிறார் அவர்.

ஆக, பிடிபடும் தமிழர்கள் அனைவருமே புலிகள் என்றும், பெரும்புள்ளிகளை, கொல்ல வந்தவர்கள் என்றும் தகவல் தெரிவிக்கும் பொலிசின் வழமையான 'கதை அளப்பு'களில் ஒன்றாகத்தான் இந்த யசோதரா கதையளப்பும் நடந்திருக்கிறது. ரி.என்.எல் பல தடவை திரும்பத் திரும்ப உறுதிப்படுத்திய பின்தான் இச்செய்தியை வெளியிட்டதாக கூறுகிறது. ஆயினும், ஜனாதிபதி மறுத்தவுடன் பொலிஸ் தானும் மறுத்துக் கூறுகிறது.

அரசியல்வாதிகளின் விருப்பத்தை நாடிபிடித்து அவர்களின் விருப்பத்திற்கேற்ப குற்றவாளிகளைச் சோடிக்கும் 'புலனாய்வு' மரபு இலங்கைப் பொலிசுக்கு எப்பவும் உண்டு. ஜே.ஆர். காலம் முதல் இன்றைய சந்திரிகா காலம்வரை புலன்விசாரணை எல்லாம் அரசியல் நோக்கங்கட்காகவே நடந்து வருகின்றன.

எப்போது பொலிசுக்கும், புலன்விசாரணை அதிகாரிகட்கும் ஒரு புலியைப் பிடித்துவிட்டதாக கூறி பதவி உயர்வும், பணப்பரிசும் பெற்றுக் கொள்வது அவசியம் என்று படுகிறதோ அப்போதெல்லாம் கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும் புலிகள் தோன்றுகின்றனர்; பல அப்பாவிகள் புலிகளாக்கப் படுகின்றனர்.

வடக்குக் கிழக்கிலும் படையினரால் கொல்லப்படுபவர்கள் எல்லோரும் 'இனந்தெரியாதோரால் கொல்லப்பட்ட' அல்லது 'பயங்கரவாதிகளால் கொல்லப்பட்ட'வர் என்றே பதியப்படுகிறார்கள்; பதியப்படுமாறு நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள் நஷ்டஈடு, நிவாரணம் போன்றவற்றிற்காக இவ்வாறு பல வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஒப்புக் கொள்ளவும் செய்கின்றனர். அன்றைய குமுதினிப்படகு கொலை முதல் இன்றைய மட்டக்களப்பு படுகொலைகள் வரை இது தொடர்கிறது.

இந்த இலட்சணத்தில் இயங்கும் அரசியல்வாதிகளும், படையினரும் நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் கொண்டு வரப்போகிறார்கள் என்றால் யாரால்தான் நம்பமுடியும்?

ஆக, யுத்தம் கடந்து போன ஒன்றரை தசாப்தம் போலவே இன்னும் தொடரப்போகிறது. இந்தத் தசாப்தத்திற்குள் பிறந்து வைர உணர்வுடன் வளரும் சந்ததி அடுத்த தலைமுறைக்கும் இந்த யுத்தத்தை தொடரப் போகிறது.

நாடு மனோரீதியாகவும், பிளவுபட்டுவிட்டது. விடுப்பு யுத்தம், சமாதான யுத்தம் என்று ஆயிரம் நாமங்களை சூட்டினாலும் இந்த யுத்தம் ஒரு ஆக்கிரமிப்பு யுத்தமாகவே தமிழ் மக்களால் கொள்ளப்படுகிறது.

ஆக, யுத்தச் செலவு 8 பில்லியனால் அதிகரிக்கும் என்று சொல்வதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

அது அதையும் விட இன்னுமின்னும் அதிகரித்துச் செல்லவே போகிறது.

ஆச்சரியப்பட ஏதாவது உண்டென்றால், அது இந்த எட்டு பில்லினுடன் கதை முடிந்தால் மட்டும்தான் உண்டு!

• நாசமரூப்பான்

---

## விக்கிரமபாகு எழுதுகிறார்

# தமிழ் மக்களின் விடுதலை: திறவுகோல் சிங்கள மக்களிடம்!



தமிழ் மக்களின் சாதாரண, ஜனநாயக சுயநிர்ணய உரிமைகளைச் சிங்கள இனவாதக் கட்சிகளின் தலைமையிலான அரசாங்கங்கள் ஆண்டாண்டு காலமாக மறுத்து வந்தமை வரலாறு. இறுதியில் தமிழ் மக்கள் தமது வட கிழக்குத் தாயகத்திலேயே பாதுகாப்பாக வாழ முடியாத நிலை ஏற்பட்டதன் காரணமாகத் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஆயுதம் ஏந்துவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. அதற்குப் பரிகாரமாக ஆரம்ப கட்டத்திலேயே பக்குவமான முறையில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை உள்வாங்கக் கூடிய அரசியல் தீர்வினை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அன்றைய ஐ.தே.க. அரசாங்கம் தமிழ் மக்கள் மீது போர் தொடுத்தது. அதனையே இன்றைய பொ.ஐ.மு அரசாங்கம் முன்னரையும் விட மோசமான முறையில் முன்னெடுத்துச் செல்கிறது.

இந்த யுத்தமானது இலங்கைத் தமிழ் இனத்துக்கு ஒரு பேரிடியாகும் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் உலகில் நிலையானதென்று ஒன்றில்லை. ஒன்று மறைந்து இன்னொன்று உருவாகிறது. அது மறைந்து இன்னொன்று தோன்றுகிறது. பிறப்பும், இறப்பும் போல எதுவும் தோன்றி மறைந்த வண்ணமே உள்ளது. இது இயங்கியல் நியதி.

தாமுண்டு தமது தொழிலுண்டு என்று கல்வியைக் கடுந்தவமாகக் கொண்டு இந்த நாட்டின் வளர்ச்சிக்குப் பல்வேறு துறைகளில் சிறந்த பங்களிப்பினை வழங்கிக் கொண்டிருந்த தமிழ் மக்கள் குறிப்பாகத் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வந்தபின் அந்நியப்படத் தொடங்கினர். படிப்படியாக நாட்டையே விட்டு வெளியேறியுள்ளனர். உலகெங்கும் பரந்து வாழ்கின்றனர். கல்வி, கலை, கலாசாரத் துறைகளில் முன்னேறுவதற்கு வாய்ப்பும் அவர்களுக்குண்டு. இன்றைய கணிப்பின்படி ஏறத்தாழ 6 லட்சம் இலங்கைத் தமிழர் வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ் மக்கள் மத்தியில் சாதிப்பாகுபாடுகள் ஒரு சாபக்கேடாக இருந்து வந்துள்ளது உண்மை தான். ஆனால் இன்று அவை கணிசமானளவு அருகிவிட்டன. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் எனும் அந்தஸ்தை அடையுமளவுக்கு ஒன்றுபட்டுள்ளனர். இன்றைய நிலையில் சாதிப்பாகுபாட்டிற்கு எதிரான போராட்டங்கள் அவசியமற்றவையாகியுள்ளன. ஒரு காலத்தில் ஆலயப்பிரவேசப் போராட்டங்கள் போன்ற பல்வேறு போராட்டங்கள் இடம் பெற்றதுண்டு. இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

பருவப் பெண்கள் வீட்டுக்கு வெளியே வராமலிருந்த காலம் மலையேறி விட்டது. பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பதற்கு இணங்க ஏன் அதற்கு அப்பால் பெண்கள் நிலை வியக்கத்தக்க பரிமாணங்களை அடைந்துள்ளது என்றே சொல்ல வேண்டும். பல்வேறு பழைய கட்டுப்பாடுகள் தகர்க்கப்பட்டுள்ளன. என்றால் அது மிகையல்ல. இந்த யுத்தமானது அவர்களுக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களை வழங்கியுள்ளது. அதாவது அவர்கள் இராணுவ நடவடிக்கைகளில் பரிச்சயம் பெற்று வீராங்கனைகளாகியுள்ளனர். தியாகங்கள் பல புரிகின்றனர்.

'தேவையே கண்டுபிடிப்பின் தாய்' என ஒரு ஆங்கிலப் பழமொழி புண்டு. தமிழ் மக்கள் கடந்த பல வருடங்களாகத் தமது பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதளவுக்கு அவர்கள் மீது அரசாங்கங்கள் படுமோசமான பொருளாதாரத் தடைகள் கட்டுப்பாடுகளை உருவாக்கி வந்துள்ளனர். இதன் காரணமாக அவர்கள் புதிய பல கண்டுபிடிப்புகளை ஈட்டுவதற்குத் தள்ளப்பட்டனர். பல துன்பங்கள் மத்தியிலும் கூட அவர்கள் தமது சிந்தனா சக்தியை அதிகளவுக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

சிங்கள அரசாங்கங்களின் அதிகரித்து வந்த அடக்கு முறைகளை எதிர்த்துப் போராடுவதற்கு ஏன் உயிர் வாழ்வதற்கே, போராட வேண்டிய நிலைக்குத் தமிழ் மக்கள் தள்ளப்பட்ட நிலையில் அவர்கள் சோதனைகள் பலவற்றின் மத்தியிலும் விட்டுக்கொடாமல் போராடும் திடசங்கற்பம் கொண்டவர்கள் எனச் சர்வதேச ரீதியிலேயே கீர்த்தி பெற்றுள்ளனர். இதனையும் மேலும் பல்வேறு காரணங்களையும் சீர்தூக்கிப் பார்த்தால் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஒரு விசேட அடையாளம் உண்டு என்பது கண்கூடு. அவர்கள் தாம் பயந்து ஒடுங்கி வாழும் ஒரு இனம் அல்ல என்பதை இந்த அடையாளம் அவர்களுக்கு வழங்கியுள்ளது. இது ஒரு மிக முக்கியத்துவம் வாய்ந்த பரிமாணம் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அதாவது தமிழ் இனம் நீண்ட அளவிலான ஒரு ஜனநாயகப் புரட்சிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றதென்பதையே இவை காட்டுகின்றன. இந்த அவல நிலையிலிருந்து அவர்கள் விடுபடும் போது அவர்கள் உலகத்தில் ஒரு மிக முற்போக்கான மக்களாக விளங்குவர். இந்த நிலையிலிருந்து அவர்கள் எவ்வாறு விடுபடுவது என்பது தான் மிகப் பெரிய கேள்வியாகும்.

இதற்காகத் தமிழ் மககள் இடையறாது போராட வேண்டும். சரியான அரசியல் திசைவழியில் செல்ல வேண்டும். அதே நேரத்தில் இதற்குரிய திறவு

(16ம் பக்கம் பார்க்க)

இறுதிப் பகுதி..

# வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பாக புலிகளின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்ன?

- பேராசிரியர் சண்முகரட்ணம் -



நேர்காணல் வி.சி.ஷ.
நேர்காணல் தொகுப்பு: எம்.கே.எம்.ஷகீப்

**மீன்பிடித்தல் தொடர்பில் இறங்கு துறைப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டீர்கள். இது சந்தைவாய்ப்பு தொடர்பான பிரச்சினையா? அல்லது அவர்களுக்கு சந்தைவாய்ப்பு உள்ளதா?**

சந்தைவாய்ப்பு இருக்கிறதென்றே நம்புகிறேன். அங்கு தற்போது மீன்விலை கூடியுள்ளது. வள உரிமை பற்றிய இத்தகைய முரண்பாடு பொதுவாக ஏற்படக் கூடிய ஒன்று. இலங்கைத் தமிழர்கள் இந்தியா சென்றபோதும் இதை எதிர்கொண்டார்கள் எனவும் அறிகிறேன்.

**இறங்குதுறைப் பிரச்சினை உண்மையில் எதற்காக ஏற்படுகின்றது?**

கடற்தொழிலுக்கென்று சில மரபுகள் இருக்கின்றன கரையோர மரபு ரீதியான உரிமைகள் கரையோரங்களில் நீண்டகாலமாக வாழ்பவர்களுக்கே இருக்கிறது. அந்தக் கரையோரத்தில் வாழ்பவர்கள் அச் சமூகத்தின் அங்கத்தவர்கள் அங்கு சுலபமாக மீன்பிடிக்கலாம். ஓரிருவர் வெளியிலிருந்து போய் அவர்களுடன் சேர்வதிலும் பிரச்சினை இருக்காது. ஆனால், பெருந்தொகையானோர் அவ்வாறு போவது ஒரு சொத்துரிமைப் பிரச்சினையாக மாறிவருகிறது. குறிப்பிட்ட ஒரு சிறுகடல் எல்லையை நூறு பேர் பயன்படுத்தி வந்தார்களென்று வைப்போம். இந்த எல்லையை முந்நூறு, நானூறு பேர் பயன்படுத்தத் தொடங்குகையில் குறித்த நூறு பேர் அடைந்த வளம் குறைவடைந்து விடுகிறது. இதைத் தீர்ப்பதற்கான வழியில் ஒன்றாய் சுமுகமான பேச்சுவார்த்தையை நடத்தலாம். அத்துடன் பெருங்கடல் மீன்பிடி வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதைச் செய்யாத பட்சத்தில் முஸ்லிம்களிடையே கூட சில முரண்கள் தோன்ற வாய்ப்புண்டு. முஸ்லிம் மக்கள் சிங்கள மக்களிடையேயான - குறிப்பாக கற்பிட்டியில், இத்தகைய முரண்பாடுகள் தோன்றவும் வாய்ப்பேற்படுகிறது.

வெளியேற்றப்பட்டவர்கள் தொடர்பான துயரமான விடயம் என்னவென்றால், இனங்களிடையே முரண்பாடாய் நிகழ்ந்த இடப்பெயர்வு இனங்களுக்குள்ளேயே முரண்பாடுகளைத் தோற்றுவிக்கிறதாய் ஆகியுள்ளது. இது மிக மோசமான ஒரு விளைவாகும். இடப்பெயர்வினால் ஏற்பட்டுள்ள இவ்வாறான சமூக, அரசியல் விளைவுகளையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.

இவற்றைத் தீர்க்க எதிர்கால நோக்கில் இயங்குதல் அவசியம். குறிப்பாக உள்ளூர்வாசிகளையும் பங்காளிகளாக்கி செயற்பட முன்வரவேண்டும்.

**புலிகளின் அடிமட்ட உறுப்பினர்களுடன் முஸ்லிம் மக்களுக்கு புரிந்துணர்வான உறவு இருக்கின்றது என்று அவர்கள் தெரிவித்ததாகக் கூறினீர்கள். இந்தப் புரிந்துணர்வு தொடர்பில் புலிகளின் பொறுப்பு வாய்ந்தவர்கள் அல்லது மேல்மட்டத்தினர் என்ன நிலைப்பாடு கொண்டுள்ளார்கள்?**

அது பற்றி எனக்கு எதுவும் சரியாகத் தெரியாது. ஆனால், அவர்கள் என்னிடம் கூறியது என்னவென்றால், தமது இந்த அபிலாஷை விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் தெரியும் என்று. ஆயினும், இதற்கு ஆதரவாக தமிழ் மக்கள் மத்தியிலிருந்து தொடர்ச்சியான குரல் எழுப்பப்பட வேண்டும் என நான் கருதுகிறேன். குறிப்பாக, தமிழ் மக்கள் மத்தியிலிருந்து விடுதலைப் புலிகளை நோக்கி சில கோரிக்கைகளை முஸ்லிம் மக்கள் சார்பில் வைப்பது அவசியம். இதை நானும் உணர்கிறேன். இந்த நேர்காணலுக்கு நான் சம்மதித்தது கூட இந்தக் காரணத்தினால் தான். ஏனெனில், தமிழ் - முஸ்லிம் மக்களுடைய நல்லுறவின் அடிப்படையிலேயே வட - கிழக்கின் விமோசனமும் தங்கியுள்ளது. குறிப்பாக வடக்கிலிருந்து வந்த முஸ்லிம்கள் எனக்கு தெரிவித்தது என்னவென்னில், வடக்கில் ஒருபோதும் தமிழ் - முஸ்லிம் அடிப்படை முரண்பாடுகள்/ பிரச்சினைகள் இருந்ததில்லை. அவர்கள் வெளியேற்றப்பட்டதையும் கூட தமிழ் மக்கள் அவர்களை வெளியேற்றியதாக அவர்கள் கருதவில்லை. அவர்களை வெளியேற்றியது ஒரு இயக்கம் தான். இப்பொழுதும் - இன்னும் அவர்களுக்கு நினைவிருக்கிறது - தமிழர்கள் அவர்கள் வெளியேற்றப்படுவதைக் கண்டு வருந்தினார்கள். ஆகவே அவர்கள் குறிப்பிடுவதைப் போல் வடக்கிலிருந்த தமிழ் - முஸ்லிம்களின் சாதக உறவு நிலைப்பாட்டினை நாம் மறக்கமறுக்கக் கூடாது. இது கிழக்கில் தமிழ் - முஸ்லிம் நல்லுறவை வளர்க்கவும் உதவும். கிழக்கில் தமிழ் - முஸ்லிம் உறவு சில சக்திகளால் முறிவு ஏற்படுத்தப்பட்டதால், வடக்கிலுள்ள இந்த நல்லுறவைப் பயன்படுத்தி அந்த முறிவையும் இணக்கமாக்கலாம். கிழக்கில் நல்லுறவை வளர்ப்பதுதான் எனக்கு சரியாகப்படுகிறது. அதற்கு இதுதான் நல்ல அணுகுமுறையாக இருக்கும்.

நீண்டகால அரசியல் ரீதியில் நாம் சிந்திப்போமானால் பொது நலன்களை அடிப்படையாகக் கொண்டு இரு இனங்களுக்கும் இடையே நல்லுறவை பலப்படுத்தல் தவிர்க்க முடியாத தேவை. இது நடைமுறைக்கு வராவிட்டால் மக்களுடைய விடுதலைக் கனவுகளும் சாத்தியப்படாது. நான் இங்கு சில வேண்டுகோள்களை புலிகளின் தலைமையை நோக்கி விடுக்க விரும்புகிறேன். இங்கு முக்கியம் என்னவென்றால், கொள்கைமட்டத்தில் சில அடிப்படைகள் உத்தியோகபூர்வமாக தெளிவாக்கப்பட வேண்டும்.

முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு எட்டாவது ஆண்டு நிறைவடையப்போகிறது. எட்டாவது ஆண்டில் ஆயினும் புலிகள் இத்தகைய கொள்கை அறிவிப்பினை உத்தியோகபூர்வமாகச் செய்வார்களாயின், அது இவ்விருவினமக்களுக்குமிடையிலான நல்லுறவைப் பலப்படுத்த உதவுவதுடன், தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்திற்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அங்கீகரிப்பையும், ஆதரவையும் பெற்றுத்தரும் என்றே நான் நம்புகிறேன்.

**புலிகளுக்கான இந்தக்கோரிக்கைகள்போல், முஸ்லிம் மக்களின் மீள்குடி யேற்றம் தொடர்பில் அரசு செய்ய வேண்டியவை என ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?**

நான் முன்பு சொன்னவை கொள்கை ரீதியில் உத்தியோகபூர்வமாக்கப்பட வேண்டிய சில விடயங்கள். நடைமுறையில் இதற்கு சில பிரச்சினைகள் இருக்கலாம். உ+மாக, யுத்தம் நடந்து கொண்டிருக்கும் பகுதிகளுக்கு முஸ்லிம் மக்கள் திரும்புவதில் - கொள்கை ரீதியில் புலிகள்

## புலிகளிடம் சில கோரிக்கைகள்

* வடக்கு முஸ்லிம்களுக்கு வடபகுதியே தாயகம் என்பதை பகிரங்கமாக உத்தியோகபூர்வமாக அங்கீகரித்தல்.

* வடக்கு முஸ்லிம்கள் தமது வதிவிடங்களுக்கு மீண்டு தமது சமூக, பொருளாதார, கலாசார வாழ்வை மேற்கொள்வதற்கான பாதுகாப்பையும், போதிய ஆதரவையும் வழங்குதல்.

* இடம்பெயர்ந்துள்ள முஸ்லிம் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலுள்ள தமது வீடுகளை, சொத்துக்களை சென்று பார்த்துவர ஒத்துழைப்பு வழங்குதல். அங்கு அவர்கள் சென்று தாம் சுயமாக முடிவெடுத்து விவசாயமோ, கடற்தொழிலோ செய்வதற்கு முன்வரும் பட்சத்தில் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

அவற்றில் முதலாவது,

* வடக்கு முஸ்லிம்களுக்கு வடபகுதியே தாயகம் என்பதை பகிரங்கமாக உத்தியோகபூர்வமாக அங்கீகரித்தல்.

* வடக்கு முஸ்லிம்கள் தமது வதிவிடங்களுக்கு மீண்டு தமது சமூக, பொருளாதார, கலாசார வாழ்வை மேற்கொள்வதற்கான பாதுகாப்பையும், போதிய ஆதரவையும் வழங்குதல்.

* இடம்பெயர்ந்துள்ள முஸ்லிம் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலுள்ள தமது வீடுகளை, சொத்துக்களை சென்று பார்த்துவர ஒத்துழைப்பு வழங்குதல். அங்கு அவர்கள் சென்று தாம் சுயமாக முடிவெடுத்து விவசாயமோ, கடற்தொழிலோ செய்வதற்கு முன்வரும் பட்சத்தில் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

சம்மதத்தை தெரிவித்தாலும் பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினை இருக்கிறது. இன்னொரு வகையில் சொல்வதானால் முஸ்லிம்களை பாதுகாக்கக் கூடிய நிலையில் புலிகள் இருக்கிறார்களா என்ற கேள்வியும் எழுகிறது. அதை நாம் நடைமுறைப்பிரச்சினையாகப் பார்க்க வேண்டுமெயொழிய கொள்கைப் பிரச்சினையாகப் பார்க்கக்கூடாது. ஆக, முதலில் கொள்கை ரீதியில் தெளிவுபடுத்துவது அவசியம்.

அடுத்தது, புலிகளுக்குப் போல் அரசாங்கத்துக்கும் சில வேண்டுகோள்களை விடுக்க வேண்டியுள்ளது. வடக்கிலுள்ள முழு இடப்பெயர்வினையும் எடுத்துக்கொண்டால், இந்த மக்கள் திரும்பவும் ஸ்திரமான வாழ்வை அமைப்பதில் விடுதலைப் புலிகள் மட்டும் பங்களிப்புச் செய்தால் போதாது. அது, அரசு - விடுதலைப் புலிகளுக்கிடையேயான பேச்சுவார்த்தைகளுக்கூடாக யுத்தத்துக்கு முடிவேற்படுத்தக்கூடியதாக ஒரு தீர்வினைக்காணல் அவசியம். இதற்கூடாகவே இது சாத்தியம். ஆயினும், இந்நேர்காணலில் நான் முக்கியமாகச் சொல்ல விரும்புவது என்னவெனில், இந்த இடப்பெயர்வுப் பிரச்சினைபற்றி - குறிப்பாக முஸ்லிம் மக்கள் பிரச்சினை பற்றி ஒரு அரசியல் கோரிக்கையை முன்வைப்பதன் மூலம் இடப்பெயர்வு பற்றிய பொதுவான ஆய்வுக்கும், முடிவுக்கும் நாம் போகலாம்.

இன்று வடகிழக்கில் இடப்பெயர்வானது ஒரு பிரச்சினையாகவிருக்கிறது. ஆனால், இந்த இடப்பெயர்வுக்குள் தமிழ் - முஸ்லிம் என்ற வேறுபாடு இன்னொரு பரிமாணத்தைக் கொடுக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையைப் பொதுவாகப் பார்ப்பதும் அவசியம். அதேநேரம் முஸ்லிம்களின் இடப்பெயர்வுக்கு ஒரு குறிப்பிட்ட காரணம் இருக்கிறது. அதாவது, குறிப்பிட்ட காலநேரத்தில் அவர்கள் விடுதலைப்புலிகளால் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். எனவே, விடுதலைப்புலிகளிடத்தில் முஸ்லிம்கள் சார்பில் தமிழர்களாகிய நாம் குறிப்பான வேண்டுகோளை விடுப்பதும் அவசியம் என்று கருதுகிறேன்.

அதேநேரம் யுத்தத்திற்கு எதிரான சமாதான செயற்பாடுகளுக்கும் நாம் ஆதரவு அளிக்க வேண்டும். ஆனால், 1994ல் பொ.ஐ.மு.வின் ஆரம்பச் செயற்பாட்டில் இருந்த ஆர்வமான சமாதான முயற்சிகள் இன்று இல்லாதிருப்பது ஒரு துரதிருஷ்டம் என்றே நான் கருதுகிறேன். அத்துடன் சமாதான நடவடிக்கைகள் சகல இன மக்கள் தரப்பிலிருந்தும் செயற்படுத்தப்பட வேண்டும்.

**தற்போது இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் தொடர்பில் அவர்களுக்குச் செய்ய வேண்டிய உடனடி நடவடிக்கைகள் என எதையாவது கருதுகிறீர்களா? அவர்களின் உடனடிப் பிரச்சினை என்ன?**

இடம்பெயர்ந்தவர்கள் அடிப்படையில் தங்கள் நிலைப்பாட்டை விளங்குகிறார்கள். அதேநேரம் அவர்கள் உயிர்வாழவேண்டும்.அதற்கான பொருளாதாரத் தேவைகள் இருக்கின்றன. பெரும்பாலும் தற்போது அவர்கள் நிவாரணத்தில் தங்கியிருக்கிறார்கள். ஆனால், நீண்டகாலம் அவ்வாறு இருப்பதை அவர்கள் விரும்புவதாகத் தெரியவில்லை. அவர்களுக்குத் தெரிந்த தொழிலை அவர்கள் செய்ய விரும்புகிறார்கள். உற்பத்தி விவசாயம், கடற்றொழில், கூலிவேலைகள் போன்றதைச் செய்ய நாடுகிறார்கள். ஆனால் அதற்கான வாய்ப்புக்கள் இல்லை. இது ஏற்படுத்தப்படுவது தற்போது அவசியம் இல்லை. அதற்கு அரச, அரசுசாரா நிறுவனங்கள் மேலும் உழைக்க, உதவவேண்டும்.

நான் ஏற்கெனவே கூறியதுபோல், இங்கு இருக்கிற பிரச்சினை நில, வள உரிமை தொடர்பானது. கடற்தொழிலைப் பொறுத்தவரை இடம்பெயர்ந்தவர்கள் தங்கள் முன்னைய கடல் எல்லைக்குச் சென்று மீன்பிடிக்க விரும்புகிறார்கள். ஆனால், அந்த மீனைக் கொண்டு வந்து புத்தளம் கடற்கரையில் இறக்கும்போது அந்தக் கரை தொடர்பான உரிமைப் பிரச்சினை எழுகிறது. இப்போது இருக்கும் மீனவ அமைப்புக்கள், துறைகள் குறிப்பிட்ட சமூகங்களது பொதுச் சொத்தாக இருப்பதால் அவர்கள், வெளியார் அத்துறையைப் பயன்படுத்துவதை விரும்புவதில்லை. மீன்பிடித்தல் என்பது பிரச்சினையில்லை. ஆனால், துறை தான் பிரச்சினை. இடம்பெயர்ந்தோர் தமக்காக ஒரு துறை இருந்தாலாவது போதுமென்கிறார்கள். இது தொடர்பாக நாம் அரச புனர்வாழ்வுப் பணியகத்தை அணுகலாம். இது உடனடிப் பிரச்சினைத் தீர்வுக்கு உதவும். ஆயினும், அந்தப்பகுதியில் பொருளாதார வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதால் நீண்டகாலம் நிவாரணத்தில் தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தமும் இருக்கிறது.

**புனர்வாழ்வு அமைச்சராக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரஃப் இருக்கிறார். அவர் முஸ்லிம் என்ற வகையிலும், இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பாக கதைத்து வருபவர் என்ற வகையிலும் அவரின் அமைச்சூடாக எவ்வகையான பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன?**

அந்த அமைச்சினது செயற்பாடுகள் முன்பை விடக் குறைக்கப்பட்டுள்ளன என்றே தெரிகிறது. வடபகுதிப் புனர்வாழ்வு தொடர்பில் இப்போது RRAN என்ற அமைப்பு தனியாக இயங்குகிறது. இப்பொழுது இந்த அமைச்சு கிழக்கில் தான் அதிக பணிகளைச் செய்து வருகிறது. புத்தளத்திலும் சில செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார்கள். நான்

→

அறிந்தவரையில் தற்போது இந்த அமைச்சு சில உதவிகளைச் செய்யமுன்வந்துள்ளது.

எனது அபிப்பிராயத்தில் இந்த அமைச்சு செய்யவேண்டிய முக்கியமான பணிகளில் ஒன்றுதான் நான் தற்போது சொன்னது. கடற்தொழில் பற்றியது. மற்றையது, அங்கு இனவீதாசாரம் மாறிவிடும் என்ற காரணத்தினால் எட்டு வருடங்கள் வாழ்ந்தாலும் இவர்களுக்கு நிர்ந்தர வதிவிட உரிமை கிடைக்கப் போவதில்லை. அப்படியான நிலையில் அமைச்சரும், முஸ்லிம் காங்கிரசும் அவர்கள் தாயகம் திரும்புவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அல்லது எட்டு வருடங்களாக வாழ்ந்து வருபவர்களுக்கு ஒரு வதிவிட உரிமையை ஏற்படுத்திக்கொடுக்க முன்வரவேண்டும். உ+மாக எட்டுவருடமாக இங்கு வந்து கடற்தொழில் செய்தாலும், புத்தளத்தில் அவர்கள் ஒரு சங்கத்தை அமைத்துச் செயற்பட முடியாதுள்ளது. இவ்வாறான விடயங்களுக்கு அமைச்சு ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கலாம்.

***யாழ்ப்பாணத்தில் சில பிரதேசங்கள் அரசால் மீள கைப்பற்றப்பட்டு சிவில் நிர்வாக ஒழுங்குகள் இடம்பெறுகின்றன. தேர்தல்கள் கூட நடத்துகிற வாய்ப்பும் கிடைத்துள்ளது. இவ்வாறான பிரதேசங்களில் அரசு முஸ்லிம்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் தானே!***

இது ஒரு நல்ல கேள்வி. இதில் இரண்டு விஷயங்கள் உள்ளன. ஒன்று அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் நடைபெறுகிறதாக சொல்கின்றபோதும், யாழ்ப்பாணத்திற்கு முஸ்லிம்களை திருப்பியழைக்கும் எந்தவொரு ஒழுங்கான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. தமிழ் மக்களை திரும்பப் போகச் சொல்கிறார்கள். ஆனால், முஸ்லிம் மக்களிடம் அந்தக் கோரிக்கையை வைக்கவில்லை.

இரண்டாவதாக, முஸ்லிம் மக்கள் என்னிடம் சொன்ன ஒரு விடயம். அரசாங்கம் சொன்னாலும் நாங்கள் போகமாட்டோம். எங்களுக்கு புலிகள் சொல்லவேண்டும். அப்போதுதான் நாங்கள் போவோம். இதுதான் முக்கியம். அவர்களின் மொழியில் சொல்வதனால் 'அரசாங்கம் சொல்லி வேலையில்லை. பெடியன்கள் நீங்கள் வாருங்கள். நாங்கள் மீண்டும் ஒன்றாக இருப்போம்' என்று சொன்னால்தான் நாங்கள் போவோம் என்று. இந்த அடிப்படைக் காரணத்தை அரசு விளங்கியதாலோ என்னவோ ஆக்கபூர்வமாக நடவடிக்கையில் ஈடுபடாது இருக்கிறது. இது அரசுக்கு முஸ்லிம் மக்கள் மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

இங்குதான் நான் நினைக்கிறேன். தமிழர்களாகிய எங்களுக்கு ஒரு பொறுப்பு இருக்கிறதென்று கொள்கை ரீதியில் இது தெளிவாக்கப்பட வேண்டும். என்றைக்கு முஸ்லிம் மக்கள் குடியேறுவது என்பது நடைமுறைப் பிரச்சினை. ஆனால், கொள்கை ரீதியில் தமிழர்பகுதியிலிருந்து குறிப்பாக புலிகளிடமிருந்து எந்தத்தடையும் இல்லையென்பது தெளிவாக்கப்பட வேண்டும், உத்தியோகபூர்வமாக்கப்பட வேண்டும். இதுதான் புலிகளை நோக்கிய தமிழர்களின் அடிப்படைக் கோரிக்கையாய் இருக்க வேண்டும்.

***முஸ்லிம்களின் இடப்பெயர்வுக்குக் காரணமாயிருந்த விடுதலைப் புலிகள் அவர்களுக்கு நஷ்டஈடும் வழங்க வேண்டும் என்ற கருத்துப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?***

அக்கருத்து நியாயமானது என்றே நான் கருதுகிறேன். குறுகிய காலவரையறையுள் தமது பொருட்களையும் விட்டு 3000/= வுடன் மட்டும் வெளியேற்றப்பட்டதாக வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் எனக்குக் கூறினார்கள். அவர்கள் பாரிய பொருள் இழப்பிற்கு உள்ளாகி இருக்கிறார்கள். இவ்விழப்புகளுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமென்பது நியாயமானதே. அதேநேரம் இன்னுமொன்றையும் அழுத்திக்கூற வேண்டும். இத்தகைய இடப்பெயர்வுகள் ஈடு செய்ய முடியாத இழப்புக்களையும் ஏற்படுத்துகின்றன. இவை மனித உறவு, விழுமியங்கள், மற்றும் உளவியல் சார்ந்தவை. பொருள் ரீதியான நஷ்டஈட்டை விடுதலைப் புலிகள் வழங்குவதன் சாத்தியப்பாட்டை என்னால் கூற முடியவில்லை. ஆனால் இங்கும் கூட அதன் நியாயப்பாட்டை ஏற்றுக் கொள்ளலும், பொருள் ரீதியானதும் மற்றைய இழப்புக்களுக்குமாக மன வருத்தம் தெரிவிப்பதும் அவசியமானதே.

- நேர்காணல்:வி.சி.ஷ

நேர்காணல் தொகுப்பு: எம்.கே.எம்.ஷகீப்

நீண்டகாலமாக . இழுத்தடிக்கப்படும் இனப்பிரச்சினை ஆளும் வர்க்க நலன்களுக்கு உகந்ததாக இருப்பதால் தீர்வு காணப்பட விரும்பாத பிரச்சினையாக இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒருபுறம் தமிழ் மக்கள் அனைவரும் பயங்கரவாதிகளாக கருதப்படும் நிலையும், இலட்சக் கணக்கானோரின் இடப்பெயர்வும், கோடானு கோடி ரூபாய் இழப்பும் நிகழ; மறுபுறம் தமிழ் மக்களை வேரோடு அழிக்க விரும்புகின்ற இராணுவ வெறிகொண்ட ஆட்சியின் கையாட்களாக, காவல் நாய்களாக மலையகத் தமிழ் மக்களின் தலைவர்கள் இருக்கின்றனர். மலையகப் பாட்டாளிகளின் உழைப்பை உறிஞ்சி கொழுத்த அரசாங்கம் தமிழ் இனத்தின் இன்னொரு பகுதியினர் மீது நீண்ட கொடிய அடக்கு முறையை நிலைநாட்டி வருகின்றது.

ஒருபுறம் இரட்டை நிலைப்பாடுடைய துரோகத்தனமிக்க தலைமைகளின் அணுகுமுறை காரணமாக மலையக மக்கள் தம் விடுதலையைப் பின்தள்ளி விட்டு, ஆக்கிரமிப்பு சக்திகளுக்கு துணைபோகின்ற அதேவேளை தமது இருத்தலையும், அடையாளங்களையும் மிகவேகமாகப் பறிகொடுத்து வருகின்றனர். இன்னாரு புறம், ஆக்கிரமிப்பு யுத்தத்தை பூச்சாண்டி காட்டியும், மலையக மக்களை எதிரியாகக் காட்டியும் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளும், அதிகார வர்க்கத்தாரும் சிங்கள மக்களின் விடுதலையை என்றென்றைக்குமாக மறுத்து வருகின்றமையை சிங்களப் பெரும்பான்மை மக்களுக்கு உணர்த்துவதற்கு தேவையான ஆற்றலுள்ள முயற்சிகள் நடந்தபாடில்லை. பேரினவாதிகள் விஸ்வரூபமெடுத்து வருவதும், அதற்கு அரசாங்கமும், எதிர்க்கட்சியும், ஜனாதிபதியும் கூட முண்டு கொடுத்து, கட்டி வளர்ப்பதும் இன்றைய நிதர்சனமாகியுள்ளது.

இந்தப்பகைப்புலன்களின் துணை கொண்டு நாட்டின் மூலை முடுக்கெங்கும் மனிதத்தன்மையற்ற குற்றச்செயல்களும், இராணுவ, பொலிஸ் காடைத்தனங்களும், கைதுகளும், பாலியல் வல்லுறவுகளும், காணாமல் போதலும், சித்திரவதைகளும் இலங்கைத்தீவின் அடையாளச் சின்னங்களாகியுள்ளன. அமைதியாகவும், ''சமாதானவழியிலும் ஆளப்பிறந்த சிங்கள இனத்தை'' இம்சிப்பவர்களாக தமிழ் மக்கள் சித்திரிக்கப்பட்டு வருகின்றனர்.

யுத்தம் நாடு முழுவதும் ஒவ்வொருவரது வாசலையும், வயிற்றையும் தட்டி சவால் விட்டுவரும் தறுவாயில், போர் நாடெங்கிலும் விஸ்தரிக்கப்பட்டுள்ள தறுவாயில் வடக்கு, கிழக்கு, மலையகம் தென்பகுதி, தலைநகரம் உட்பட சகல மையங்களிலும் போர்க்கால விம்மல்களும், குண்டுவெடிப்புகளும் கைதுகளும், சித்திரவதைகளும் நிகழ்ந்த வண்ணமுள்ளன.

நடைபெறும் யுத்தத்தில் எவ்வித சம்பந்தமுமில்லாத மலையகத் தமிழ் இளைஞர்கள் மலையகத்தில் நடைபெறும் சம்பவங்களுக்கு உடந்தையாக்கப்பட்டு இட்டுக் கட்டப்படுவதும், கைது செய்யப்படுவதும் வதைக்கப்படுவதும் கடந்த இரண்டு தசாப்தகால நிகழ்வுகளாகியுள்ளன.

தலைநகரில் நடக்கிற தாக்குதல்களை, திட்டங்களை சர்வவல்லமை மிக்க பொலிஸ், இராணுவம், புலனாய்வுப் பிரிவுகள் விழிப்புள்ள சிங்கள 'மக்கள்', பெட்டிசன் பேர்வழிகள் கண்டுபிடிக்க முடியவில்லையானால், அந்த கையாலாகாத்தனத்திற்கு யார் பொறுப்பு? அப்பாவித் தமிழர்களும், பெண்களும் சிறுவர்களும் மலையகத் தமிழ் இளைஞர்களும் எப்படி பொறுப்பாளிகளாக முடியும்? ஆனால், இந்தக் கேள்வியை எழுப்புவது அபத்தமாகக் கூட இருக்கலாம். ஏனென்றால், நாங்கள் தமிழர்; உழைக்கவும், சாகவும் பிறந்தவர்கள். வாழ்வுரிமை கேட்பதற்கான தகைமைகள் இல்லாதவர்கள்.

ஆனால், பத்தாயிரக்கணக்கிலே தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படும் போதும், தடுத்து வைக்கப்படுகிற போதும், பெண்கள் நிர்வாணமாக நடத்தப்படுகிற போதும், புகைப்படம் எடுக்கப்படுகிற போதும், பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படுகின்ற போதும், வீதிவீதியாக விரட்டப்படுகிறபோதும், கண்ணியமிக்கத் தமிழ்க்கட்சித் தலைவர்கள், 'டமிழர்கள்' எல்லாம் வெட்கக்கேடான முறையில் பதவிகள், பட்டங்கள் சொகுசுகளை விட்டுவிடத் துணிவின்றி பாரதி கூறிய நடிப்பு சுதேசிகளுக்கு இலக்கணமாக திகழ்வது வருந்தத்தக்கதே. இந்நிலைக்கு அரசாங்கமும், அதன் ஆயுதப் படைகளும், மட்டுமல்ல, தமிழ் கட்சிகளும் தலைவர்களும் உடந்தையாக இருக்கிறார்கள். ஒரு பெருந்தேசிய இனம் மேற்கொள்ளும் ஒடுக்குமுறைக்கு பல சிறு தேசிய இனத் தலைமைகள் ஒத்துப்பாடி வருகின்றன தொண்டமான், சந்திரசேகரன், அஷ்ரஃப், பௌசி, சிவசிதம்பரம், டக்ளஸ், சித்தார்த்தன்,சுரேஸ் எனப்பட்டியல் நீள்கின்றது. அமைச்சரவையிலே அங்கம் வகிக்கும் சிறுபான்மையினத் தலைவர்களான தொண்டமான், அஷ்ரஃப், பௌசி, கதிர்காமர் கூட்டணியும் இவர்களைச் சூழவுள்ள கட்சிகளும் தமிழ் மக்கள் மீதான இம்சைகளுக்கு நேரடி காரணகர்த்தாக்கள் தானே.

'ஆவேசமான' அறிக்கைகள், அவலட்சணமான முதுகு சொறிதல்கள், வெட்கக்கேடான காட்டிக் கொடுப்புகள் தமிழ்த் தலைமைகளின் பிழைப்பு வாதத்துக்கு சான்று பகர்கின்றன.

அண்மையில், செல்லச்சாமி வெளியிட்ட அறிக்கையொன்று இன்னுமொரு முக்கியமான தகவலை வெளிக்கொணர்ந்துள்ளது. ''மலையக இளைஞர்கள் அனாவசியமாகக் கைது செய்யப்படுகிறார்கள். கடந்த காலத்தில் மலையகத்தில் தீவிரவாத சக்திகள் தலைதூக்கியபோதெல்லாம் அரசுடனும், பாதுகாப்புத் தரப்புடனும் சேர்ந்து மலையக தலைமைகளும், தொழிற்சங்கங்களும், தொண்டர் நிறுவனங்களும் வெற்றிகரமாக முறியடித்தன. தற்போதைய நெருக்கடியைத் தீர்க்க அரசு இந்த சக்திகளுடன் இணைந்து செயலாற்ற வேண்டும்'' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இ.தொ.காவில் 25 வருடகாலம் பொதுச் செயலாளராக இருந்த அவரது கூற்று ஆழ்ந்து நோக்கத்தக்கதாகும். ஏனென்றால், தன் அனுபவங்களை அவர் தன்னையறியாமல் கொட்டியிருக்கின்றார்.




அவரது கூற்றைப் பலப்படுத்துமாப்போல், கடந்த ஓகஸ்ட் 2ம் திகதியன்று நாடு முழுவதுமான அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு அடுத்தநாள் 3ம் திகதி பாராளுமன்றத்தில் அவசரகால சட்ட நீடிப்பு விவாதம் இடம்பெற்ற போது உரையாற்றிய அமைச்சர் தொண்டமான், ''மலையகத்தில் தோன்றியுள்ள அபாயகரமான நிலையை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும். இதனைக் கருத்திற்கொண்டே இதற்கு ஆதரவளிக்கிறோம்'' என்றார். (தினக்குரல் -06)

மலையகத்தில் சிந்திக்கக்கூடிய, கேள்வியெழுப்பக்கூடிய இளைஞர்களை ஒழித்துவிடுவதை ஒரு தந்திரோபாயமாக பாதுகாப்புத் துறையும், உளவுத் துறையும், மலையக தலைமைகளும் கொண்டிருக்கின்றன. பொலிஸ், உளவுத்துறை, பத்திரிகையாளர்கள், -தொழிற்சங்க, தொண்டர்ஸ்தாபன முதலாளிகள் கொண்டுள்ள நெருக்கமான உறவும் அதன் மூலம் எத்தனை எத்தனை மலையக இளைஞர்கள் எவ்வாறெல்லாம் காட்டிக்கொடுக்கப்பட்டு வதைக்கப்பட்டார்கள் என்பதற்கும் நூற்றுக்கணக்கான சான்றுகள் உண்டு.

விமர்சனங்களை, கேள்வி எழுப்புதலை எதிர்வினையாக வெளியிடுவதை, மாற்றுக் கருத்தை கொண்டிருப்பதை, வெளியிடுவதை சகிக்காத மலையக அரசியல் - தொழிற்சங்க- தொண்டர்ஸ்தாபன சக்திகள் தமக்கெதிரானவர்களையெல்லாம் பயங்கரவாதிகளாக காட்டிக் கொடுப்பது வரலாறு கண்ட உண்மை.

மலையக மக்கள் முன்னணி தலைவர்களும் கூட காட்டிக்கொடுக்கப்பட்டமை தான் இவற்றின் சிகரமாகும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தினதும், அவசரகாலச் சட்டத்தினதும், இராணுவ சார்புள்ள ஆட்சியினதும் அவலட்சணங்களை நேரில் கண்டுணர்ந்த, அனுபவித்த ம.ம.மு. தலைவர்களான சந்திரசேகரன், போன்றோர் இந்த அரசை நேர்மையுடனும், கண்ணியமாகவும், கட்டிக்காக்க முயன்று வருவது பெரும் வெட்கக் கேடாகும்.

கடந்த கால குண்டு வெடிப்புக்கள் மற்றும் தோட்டத்தொழிலாளரின் வேலைநிறுத்தம் என்பனவற்றோடு பெரும்பாலான துடிப்புள்ள, சிந்திக்கக்கூடிய மலையக இளைஞர்களைப் பற்றிய விபரங்கள் புலனாய்வுத் துறையினராலும், பொலிசாராலும் திரட்டித் தொகுக்கப்பட்டுள்ளன. பல இளைஞர்கள் மீது தீவிர கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு நேரடியாக தொழிற்சங்கவாதிகளும், அவர்களின் தோட்டக் கமிட்டிகளும் உதவியுள்ளமைக்கான சான்றுகள் உள்ளன.

பாரிய சுற்றிவளைப்புகளும், கைதுகளும் மலையகத்தில் நடாத்தப்படலாம். பல ஆயிரக் கணக்கானோர் கைது செய்யப்படவும், நூற்றுக்கணக் கானோர் நீண்டகால தடுப்பு காவலையும், சித்திரவதைகளையும் எதிர்நோக்கவும் நேரலாம். இதற்கு நேரடியாகப் பதில் கூறவேண்டிய பொறுப்பு மலையகத் தலைமைகளையே சேரும். பல இளைஞர்கள் அனாவசியமான முறையில் உளவாளிகளால் பின்தொடரப்பட்டு வருகின்றனர். பொலிசாரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். குண்டர்களால் பின்தொடரப்பட்ட வண்ணமுள்ளனர். இவர்களின் எதிர்காலம் மிக ஆபத்தானது என்பதில் சந்தேகமில்லை.

தற்போதைய கைதுகளைக் குறைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சினால் அமைக்கப்பட்டுள்ள குழுவில், ஆறுமுகம் தொண்டமான், யோகராஜன், கம்பனி பிரதிநிதிகள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (தினகரன் 3.4.98) விமர்சனத்தையும், வினா எழுப்புதலையும் பொறுக்காத இ.தொ.காவினர் இளைஞர்களைத் தாக்கியும், பிடித்துக் கொடுத்தும் நேரடித் தாண்டவம் ஆடியவர்கள். கடந்த தேர்தல்களின் போது இது வெளிப்பட்டது. கம்பனிகள் தமக்கும், தம் ஆதிபத்தியத்திற்கு எதிரான சக்திகளைப் பணியவைக்கவும், பயமுறுத்த ஏற்கெனவே தொடங்கியுள்ளன. எனவே நிலைமை என்னவாகும் என்பதை ஊகிக்க முடியும்.

உண்மையாக அரசும் மலையகத் தமிழ்கட்சிகளும் அனாவசியக் கைதுகளைத் தவிர்க்கவும் குறைக்கவும் கைதாவோரை விடுதலை செய்யவும் விரும்பினால் கட்சிசார்பற்ற பரந்துபட்ட ஒரு குழுவை அமைக்க வேண்டும். இவ்வாறான ஒரு குழு சிலவேளை தமிழர் கைதுகளைக் குறைக்கக் கூடும்.

ஆனால், எத்தனை ஆணைக்குழுக்கள், ஆலோசனைச் சபைகள், அறிக்கைகள், ஆவேசப் பேச்சுக்கள் வந்தால் என்ன, ''ஆராய்கிறோம்'', ''நடவடிக்கை எடுக்கிறோம்'' எனக்கூறி, ஆட்சி நடத்தும் வல்லமையை ஆளும் தரப்புக்கு வழங்கியாயிற்றே. முதல்நாள் அமைச்சர் பீரிசும், அனுருத்தவும், உறுதிமொழி வழங்குவார்கள். விடிந்தால் ஆயிரம்பேர் சிறையில் இருப்பார்கள். மேல்மாகாணமே தற்போது சுத்திகரிப்பு சத்திர சிகிச்சைக்குள்ளாகி வருகின்றது. தமிழர் என்றால் பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புள்ளவர்கள். தமிழ்ப் பெண்கள் வெடிகுண்டுடன் உலாவும் ராட்சத பிறவிகள் என்ற தோற்றப்பாடு உருவாக்கப்பட்டுள்ளது.

மொரட்டுவையில் புலிக்குட்டியை கொன்ற பைத்தியக்காரனும், பொன்விழாக் கண்காட்சியில் தமிழ் பல்கலைக்கழக மாணவர்களைக்கூட நுழைய விடமறுத்து உடைக்குள் கைவிட்டுத் துளாவிய, ஊமைப் பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கும் இராணுவ கௌரவமும், சிறைச் சாலைப் படுகொலைகளும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

மாகாண சபைத் தேர்தல்களை மையம் கொண்ட அறிவித்தல்கள் ஓய்ந்துள்ளன. ஆயினாலும் தேர்தல் மீண்டும் அறிவிக்கப்பட்டால் மலையகத்துக்கு தமிழ் கிராம சேவகர்கள் நியமனம், தோட்டத் தொழிலாளருக்கு பங்குரிமை சான்றுகள், தோட்ட இளைஞருக்கு தொழிற்பயிற்சி, பெண்களுக்கு சமவுரிமை. இன்னும் என்ன தேவை வாக்குறுதிகளை வாரிக்கொட்டியபடி, தேர்தலுக்காக பல்லை இழித்துக்கொண்டு இவர்கள் வருவதும் தொடரும்.

இந்த நெருக்கடி மிக்க தருணத்தில் மலையக இளைஞர்கள் எதிர்வரும் தேர்தலில் மிகச்சரியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். துரோக சக்திகளுக்கு சாட்டையடி கொடுக்க மக்களைத் தயார் படுத்த வேண்டும். மலையக இளைஞர்கள் வேட்டையாடப்பட சட்ட அங்கீகாரம் வழங்கிய தொண்டமானும், அவரது சகாக்களும் தங்களின் பிழைப்புக்காக மலையக இளைஞர்களை காவு கொடுப்பதனை எத்தனை காலம் தான் மலையக மக்கள் அனுமதிக்க போகிறார்கள்?

# மாகாண சபைகள்: ஒழித்துக் கட்ட ஒரு மார்க்கம்!

அனைவரும் எதிர்பார்த்தது போலவே நாடுமுழுவதும் அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்பட்டு மாகாண சபைத் தேர்தல்கள் பிற்போடப்பட்டுள்ளன. மாகாணசபை அரசாங்க காலத்தை நீடிப்பு செய்யாமல், அதனைக் கலைத்து விட்டே தேர்தல் ஒத்திவைப்பு நாடகம் மேடையேற்றப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் தேர்தல் தோல்விப் பயம் தேர்தல் ஒத்திவைப்பிற்கு ஒரு காரணமாக இருந்த வேளை தீவிரப் பேரினவாத சக்திகளின் அபிலாசைகளும் அதன் அடிப்படையில் எழுந்த தூண்டுதல்களும் இவ் ஒத்திவைப்பு நாடகத்தில் பெரும் பங்கினை வகித்துள்ளன.

இந்நிலையில் தேர்தல் ஒத்திவைப்பு நாகத்திலும் மாகாணசபை முறையிலும் பேரினவாத சக்தகளின் சிந்தனை எவ்வாறு உள்ளன என்பது இன்று மிகவும் கவனத்துக்குரிய ஒன்றாக உள்ளது.

பேரினவாத சக்திகள் இன்று கூட்டாக எதிர்க்கட்சி, மதப் பீடங்கள், செயற்படுகின்றன. அரசாங்கம், படைத் தரப்பு, சிங்கள புத்திஜீவிகள், அரச உயர் அதிகாரிகள், சிங்கள பெரும் வர்த்தகர்கள் சிங்கள ஆங்கிலத் தொடர்பு சாதனங்கள் போன்றவற்றிலுள்ள பேரினவாதிகளிடையே இக்கூட்டு ஏற்பட்டுள்ளது. அரசியல் தளம் மட்டுமல்ல பொருளாதார, சித்தாந்த, சர்வதேச தளங்கள் என இவர்கள் தங்கள் தளங்களை விரிவுபடுத்தியுள்ளன.

மாகாண சபை முறை தொடர்பாக இவர்களின் நோக்கம் வெறுமனவே மாகாண சபைத் தேர்தல்களை பிற்போடுவதல்ல. மாறாக இப்பிற்போடல் முயற்சிகளினூடாக மாகாண சபை முறையை உறங்கு நிலைக்கு கொண்டுவந்து அதனை முற்றாக இல்லாமல் செய்வதே ஆகும். அரசுக்கு இவர்கள் கொடுத்த அழுத்தங்கள் காரணமாக அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர் குழு மாகாண சபை முறையை நீக்குவது தொடர்பாக தீர்மானம் எடுத்துள்ளதாகவும் செய்திகள் வந்துள்ளன. குருநாகல் மாவட்ட ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் காமினி ஜெயவிக்கிரம இதனை பாராளுமன்றத்திலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பேரினவாதிகள் மாகாண சபை முறையை நீக்குவது தொடர்பாக முயற்சிப்பதற்கு பல காரணங்கள் தொழிற்பட்டுள்ளன.


முதலாவது எனைய இடங்களில் மாகாணசபைத் தேர்தல்களை நடாத்தினால் வடக்கு-கிழக்கிலும் தேர்தல்களை நடாத்த வேண்டிய நிர்ப்பந்தம் வரும். ஏற்கெனவே தமிழ்க் கட்சிகளினாலும், இந்தியா உட்பட சர்வதேச சக்திகளினாலும் இந்த நிர்ப்பந்தங்கள் வந்துள்ளன. யாழ் குாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்தலாமென்றால், வடக்கு-கிழக்கில் ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல்களை நடாத்தலாமென்றால் ஏன் அங்கு மாகாண சபைத்தேர்தல்களை நடாத்த முடியாது என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இரண்டாவது மாகாணசபை முறை மிகக் குறைந்தபட்சத்திலாவது சில அதிகாரப் பங்கீடுகளைத் தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ளது. இது நடைமுறையில் செயற்படுவதைப் பேரினவாதிகள் விரும்பவில்லை. குறிப்பாகக் காணி, பொலிஸ், அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கு வழங்கப்படுவதை விரும்பவில்லை.

மூன்றாவது, வடக்கு-கிழக்கு மாகாண சபை இயங்கத் தொடங்கினால் மாகாண சபைச் சட்டத்திலுள்ள பேரினவாதப் பிடிகள் அம்பலத்திற்கு வரும். குறிப்பாக மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, வரி விதிப்பு உட்பட ஒன்பது துறைகளில் நேரடியாகப் பிடிகள் உள்ளன. அங்கு எவ்வளவு தூரம் மாகாணசபைச் சட்டம் இயற்றலாம் என்பதை மத்திய பாராளுமன்றம் ஒரு சட்டத்தின் மூலம் தீர்மானிக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இவை அம்பலத்திற்கு வரும்போது அதனை நீக்க வேண்டும் என்ற அழுத்தங்களும் வரும். பேரினவாதிகள் இதனை விரும்பவில்லை. ஏனைய மாகாண சபைகள் பேரின ஆதிக்கத்திற்கு உட்பட்டு இருப்பதால் இப்பிரச்சினையை இதுவரை பெரிதாக எடுக்கவில்லை.

நான்காவது, வடக்கு-கிழக்கு தற்காலிக இணைப்பு மாகாணசபை இயங்கத் தொடங்கும் போது நிரந்தரமாகிவிடக்கூடிய தன்மையையும் பெற்றுவிடும். ஒரு மத்தியப்படுத்தப்பட்ட நிர்வாகத்திற்கும், அதன் பலாபலன்களுக்கும் மக்கள் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்வர். இதன் பின்னர் பிரிப்பு என்பது இயலாததாகி விடும். வடக்கு கிழக்கு இணைத்தல் என்பது பேரினவாதிகளுக்கு வேப்பெண்ணையைக் குடிப்பது போன்றது.

ஐந்தாவது, வடக்கு-கிழக்கு மாகாண சபை அதிகாரம் தமிழர்களிடம் வந்து விட்டால் வடக்கு-கிழக்கில் சிங்கள



குடியேற்றங்களை அபிவிருத்தி செய்ய முடியாது. குடியேற்றங்கள் தொடர்பாக பெரியளவு அதிகாரங்கள் மாகாண சபைகளிடம் இல்லாவிட்டாலும் அரசியற் சக்திகளிடம் விழிப்பு நிலை இருக்கும். இவ்விழிப்பு நிலையினால் உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் அழுத்தங்கள் ஏற்படும். இது தான்தோன்றித்தனமான குடியேற்றங்களைத் தடைசெய்யும். வடக்கு-கிழக்கில் உருவாக்கப்பட்ட பிரதேச சபைகள் குடியேற்றங்களுக்கு நன்மையளிப்பது போல மாகாண சபை நன்மையை அளிக்காது.

ஆறாவது, தேர்தல், நடாத்தாவிட்டாலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்கத்தை புலிகளிடம் பத்துவ ருடத்துக்கு கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை தற்போது எழுந்துள்ளது.

சர்வதேச ரீதியாகவும் இவ்வாறான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. உள்நாட்டில் தொண்டமான் இதனை முன்வைத்துள்ளார். மாகாண சபை முறை இருக்கும் வரை இக்கோரிக்கை தொடர்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. மாகாண அதிகாரம் புலிகளிடம் செல்வதை பேரினவாதிகள் விரும்பவில்லை.

ஏழாவது மாகாண சபைச் சட்டங்கள் யாப்பு ரீதியாக எழுத்தில் உள்ளன. இதனால் எந்தத் தீர்வு யோசனைகளுக்கும் அடிப்படையாக அவை உள்ளன. முன்வைக்கப்படும் யோசனைகள் இதிலும் உயர்ந்ததாக இருக்க வேண்டுமே தவிர குறைந்ததாக இருக்கமுடியாது என்ற நிலையை இது தோற்றுவித்துள்ளது. பேரினவாதிகளின் யோசனைகள் எல்லாம் மாகாண சபைமுறைக்கு குறைந்ததாக இருப்பதனால் மாகாண சபை முறை அடிப்படையாக அமைவதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

எட்டாவது, மாகாணசபை முறை வடக்கு-கிழக்கிற்கு வெளியேயுள்ள சிறுபான்மை இனங்களினது அரசியற் பலத்தையும் அதிகரித்துள்ளது. இதுவும் பேரினவாதிகளுக்கு பெரும் தலையிடியாக உள்ளது. இதில் பிரதானமானது மலையக மக்களின் அரசியல் வளர்ச்சி. மலையக மக்களின் மேல்நோக்கிய அசைவு இதன் மூலம் சற்று துரிதப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களது பேரம்பேசும் பலமும் அதிகரித்துள்ளது. இப்பலத்தின் அடிப்படையில் மலையக மக்கள் செறிவாக உள்ள இடங்களில் பிரதேச சபைகள் அமைக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுவடைந்துள்ளன. எதிர்காலத்தில் தனியான மாகாண சபைக் கோரிக்கை வலுவடைவதற்கான சாத்தியக் கூறுகளும் உள்ளன.

கொழும்பிலும் அவர்கள் சற்று வலுவான நிலையை நோக்கி முன்னேறுகின்றனர்.

இதேபோன்று முஸ்லீம்கள் வலுப்பெறுவதற்கான சாத்தியங்களும் வளர்ச்சி கண்டுள்ளன. முஸ்லீம்கள் தேசியக் கட்சிகளிலிருந்து விலகி முஸ்லீம் கட்சியை நோக்கி நகரும் போக்கும் அதிகரித்துள்ளது. அண்மைய உள்ளூராட்சித் தேர்தலில் பேருவளை, மாத்தளை, புத்தளம், கொழும்பு போன்ற இடங்களில் முஸ்லீம் காங்கிரஸ் வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் இதனைத் தெளிவாக்குகின்றன.

இது விடயத்தில் பேரினவாதிகளுக்குள்ள கவலை இவர்களின் பேரம் பேசும் ஆற்றல் அதிகரிக்க, அதிகரிக்க தேசியக் கட்சிகள் வாக்குகளுக்காகத் தங்கள் அபிலாஷைகளை நிறைவேற்றப் பின்நிற்கின்றன என்பதே ஆகும்.

மொத்தத்தில் எல்லாத் தளங்களிலும் பேரினவாதப் பிடியை, மாகாண சபை முறை அசைக்க முற்படுகின்றது என இவர்கள் கருதுகின்றனர்.

மேற்கூறிய காரணங்களினால் மாகாண சபைமுறையை இல்லாதொழிக்கப் பேரினவாதிகள் முயற்சித்தாலும், தங்கள் எண்ணங்களை நிறைவேற்றுவதில் இரு பிரதான சிக்கல்களை அவர்கள் எதிர்நோக்குகின்றனர்.

அவற்றில் ஒன்று மாற்று ஏற்பாடு இல்லாமல், மாகாண சபை முறையை எவ்வாறு நீக்கம் செய்வது? அதுவும் இனப் பிரச்சினை சர்வதேசமயப்பட்ட சூழலில் இதனை நீக்க முற்பட்டால் சர்வதேச ஆழுத்தங்களை சந்திப்பது எப்படி? மாற்று ஒன்றை உருவாக்க முற்படின் அது இதிலும் பார்க்க உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்றல்லவா மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மற்றையது, இம்மாகாண சபை முறை இலங்கை அரசாங்கத்தினால் மட்டும் உருவாக்கப்படவில்லை. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. இந் நிலையில், இந்தியாவின் சம்மதம் இல்லாமல் இதனை எவ்வாறு நீக்குவது?

இவ்விரு சிக்கல்களினாலேயே, தற்போதைக்கு இதனை உறங்கு நிலையில் வைத்திருக்கப் பேரினவாதிகள் விரும்புகின்றனர். தொடர்ச்சியாக உறங்கு நிலையில் வைத்திருப்பதும், அதனை இல்லாமல் செய்வதற்கான ஒரு மார்க்கம் தான்.

பேரினவாதிகள் தற்போதைய நிலையில் சரியான மார்க்கத்தினை தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்றே கூற வேண்டும்.

**-பரந்தாமன்**

# முஸ்லிம் மக்கள்: தேவை ஒரு தேசியப் பத்திரிகை!

தமிழ் மக்களின் போராட்டம் முனைப்படைந்து வளர்ந்து வந்த அதேவேளை அது தனக்குள் பல்வேறு முரண்பாடுகளையும், விலகல்களையும் கொண்டு வளர்ந்துள்ளது என்பது நிதர்சனமான உண்மை வரலாறு.

தமிழ்ச் சமூகத்தினுள் இழையோடும் பல்வேறு அக முரண்பாடுகளை இனங்கண்டு தீர்க்க முடியாமல் தமிழ்ச் சமூகம் தடுமாறிக் கொண்டிருக்கிறது. இதன் விளைவுகளில் ஒன்று முஸ்லிம் மக்களைத் தமிழ்த் தேசத்தின் எதிரியாகக் காட்டுவதன் மூலம் அது தற்காலிக நகர்வுகளை மேற்கொள்ள ஆரம்பித்தது. இதன் உச்சமே வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டமை.

இன்று தமிழ்ச் சமூகத்தினர் மீது அச்சமும், சந்தேகமும், நம்பிக்கையீனமும் கொண்டு வாழ்வதற்கான சூழல்களுக்குள் முஸ்லிம்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்பதும் வரலாறு.

இன்று வடக்கு முஸ்லிம்கள், புத்தளம் போன்ற பகுதிகளில் அகதி முகாம்களில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்கள் சொல்லொண்ணாத் துயரங்களையும், நம்பிக்கையீனங்களையும், விரக்திகளையும் சுமக்க முடியாமல் மேலும், மேலும் சுமக்க வற்புறுத்தப்பட்டே வருகின்றனர். இதனைப் பல்வேறு தளங்களிலும் முகங்கொடுக்கின்றனர். முஸ்லிம்களை, ஏனைய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களோடு சமப்படுத்தி, ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. அது முற்றிலும் தவறானது, மோசமானது. தமிழ் மக்களின் போராட்ட வ்ரலாற்றிலிருந்து முஸ்லிம்களின் பிரச்சினைகள் சிக்கற்பாடுடையதுடன், தனித்துவம் வாய்ந்தவை.

அத்துடன் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் யாவற்றையும் அன்றாட ஜீவனோபாயப் பிரச்சினைகளுடன் கூடியதாக மட்டும் எளிமைப் படுத்திச் சுருக்கிப் பார்த்து விட முடியாது. இவை, இதற்கும் அப்பாலான அந்தச் சமூகத்தினது இருப்பின் அடையாள அரசியலுடன் தொடர்புடையது. அதாவது வடகிழக்கு முழுவதிலும் வாழ்ந்து வரும் அனைத்து முஸ்லிம் சமூகத்தினர்களினது அரசியல் எதிர்காலம் என்ற அமைவுக்குள் வைத்தே புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

வடகிழக்கு முஸ்லிம் மக்களின் அரசியல் எதிர்காலமும் அதனுடன் இணைந்த சமூகப் போராட்டங்களும் எவ்வாறு முஸ்லிம்களால் முன்னெடுக்கப்படப் போகிறது என்பதில் தான் இது தங்கியுள்ளது.

வடகிழக்கு முஸ்லிம் சமூகத்தினது தேசிய எழுச்சியின் விளைவு தான் முஸ்லிம் காங்கிரஸ். ஆனால், அந்தத் தேசிய இயக்கத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்து தமது சமூக, அரசியல் இருப்புக்களை உறுதிப்படுத்திச் சகல உரிமைகளையும் வென்று தருவதற்கான, விடாப்பிடியான போராட்டத்தில் முனைப்புடன் ஸ்ரீ.ல.மு.கா. எவ்வாறு போராடிக் கொண்டிருக்கிறது என்பதிலேயே இது தங்கியுள்ளது.

இன்று இதுகாறுமாக முஸ்லிம் காங்கிரசின் செயற்பாடுகள் பற்றியும். முஸ்லிம் சமூகத்தினது தேசிய எழுச்சியில் அது இன்று எத்தகைய பாத்திரத்தை ஆற்றி வருகின்றது என்பது குறித்தெல்லாம் சிந்திப்பதற்கான காலகட்டத்திற்குள் வரலாறு நகர்த்தப் பட்டுள்ளது.

வடகிழக்கு முஸ்லிம்களினது இன்றைய தேவைகளையும், அவசியப்பாடுகளையும், தமது நியாயபூர்வமான அரசியல் வெளிப்பாடுகளையும் பொது அரங்கில் கொண்டு வரவேண்டும், விவாதிக்க வேண்டும். குறிப்பாகத் தமிழ் மக்களோடும், தமிழ்த் தேசத்தோடும் தமக்குள்ள பல்வேறு வகையிலான பிணைப்புக்களையும், விடுபடல்களையும் திறந்த ரீதியில் பேசுவதற்கான சூழல்களிற்கான வாயில்களையும் திறந்துவிட வேண்டியுள்ளது.

வடகிழக்கு முஸ்லிம்களினதும் தாயகப் பிரதேசம் தான். அதில் வாழும் பூரண உரிமை அவர்களுடையது. இதனை யாரும் பறிக்க முடியாது. இன்று தமிழ்ச் சமூகத்தில் மேலாட்சி செலுத்தும், பிற்போக்கு ஆதிக்கச் சித்தாந்தங்கள் தமிழ்ப் பேரினவாதமாகவும் வளர்ந்துள்ளன. இதனையும் முஸ்லிம் சமூகம் முகங்கொடுத்தேயாக வேண்டியுள்ளது.

இன்று, இவையாவற்றுக்கும் வடகிழக்கு முஸ்லிம்களின் தேசிய எழுச்சிக் குரல்களை வெளிப்படுத்தி, இயக்கமாக வளர்த்துச் செல்வதற்காக முஸ்லிம்களுக்கென்று ஓர் தனித்த தேசியப் பத்திரிகை ஒன்றின் தேவையினை வலியுறுத்த வேண்டும். வரலாறும் இதனை வேண்டியுள்ளன.

அன்று 1882 - 1944வரை முஸ்லிம் நேசன் என்ற பத்திரிகை வெளிவந்து, முஸ்லிம்களின் தனித்துவ வெளிப்பாடுகளுக்கான முஸ்லிம்களின் குரலாக அது ஒலித்துக் கொண்டிருந்தது. அதுபோல் இன்று வடகிழக்கு முஸ்லிம்களின் தேசிய எழுச்சிக் குரலாக ஓர் பத்திரிகை வெளிவர வேண்டும்.

அது முஸ்லிம் சமூகத்திற்கும், தமிழ்ச் சமூகத்திற்கும், சர்வதேச சமூகத்திற்கும் கூட ஒரு தொடர்பியல் மைய்மாகத் தொழிற்பட வேண்டும்.

***- ஆணிமுத்தர்***




*சென்ற இதழ் தொடர்ச்சி...*

மேற்குறிப்பிட்டவை, தமிழரசுக் கட்சிக்குத் தமிழ்ப் பேசும் மக்கள் எனப்படும் மூன்று முக்கியமான தமிழ்ப்பேசும் தேசிய இனப்பிரிவுகளை ஒன்று படுத்தி அவர்கட்கான போராட்டத் தலைமையை வழங்கும் தகுதி இருக்கவில்லை என்றே உணர்த்துகிறது.

எவ்வாறாயினும், தமிழரசுக் கட்சி தமிழ்க் காங்கிரசை விட அரசியல் ரீதியான ஒரு முன்னோக்கிய நகர்வு என்பதை நாம் மறந்து விடலாகாது. 1953ல் குறிப்பாக கு.வன்னியசிங்கத்தின் முன்முயற்சியால்,வடக்கில் தமிழரசுக்கட்சி ஹர்த்தாலுக்கு அளித்த ஆதரவு குறிப்பிடத்தக்கது. அதை விடத் தமிழ் எழுதுவினைஞர் சங்கம் போன்ற அமைப்புக்களது உருவாக்கமும் குறுகிய காலத்திற்கேனும் அவை அக்கட்சிக்குள் செலுத்திய சிறிதளவு செல்வாக்கும் தமிழ்க்காங்கிரசிலிருந்து அதைப்பிரித்துக்காட்டுவன. அதேவேளை, ஏகாதிபத்திய எதிர்ப்பு, சாதிப்பிரச்சினை, காணிச்சீர்த்திருத்தம் போன்ற விடயங்களில் தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரசினின்றும் அதிகம் வேறுபடவில்லை. தமிழரசுக்கட்சிக்கும் சமசமாஜக்கட்சிக்கும் 1956-60காலத்தில் இருந்த சுமுக உறவு காரணமாகவும், தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சிக்காரர் ஒருவர் மூதவைக்கு உறுப்பினராவதைத் தடுக்கும் பொது நோக்குடனும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஜி. நல்லையா என்பவர் தமிழரசுக்கட்சி சார்பாக மூதவை உறுப்பினரானார். 1977வரை தமிழரசுக்கட்சி தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் எவரையும் பாராளுமன்ற வேட்பாளாராக நிறுத்தவில்லை என்பதும் நல்லையாவையடுத்து நியமன உறுப்பினராகவோ மூதவை உறுப்பினராகவோ தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் எவரும் வருவதற்கு உதவவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

தமிழ்க் காங்கிரஸ் 1986ல் சரிந்த பின்பு, கம்யூனிஸ்ட் கட்சியையே இன எதிரியாகவும், தமிழின ஒற்றுமைக்கு எதிராகத் தாழ்த்தப்பட்ட மக்களைக் கிளறி விடும் கட்சியாகவும் தமிழரசார் காட்டி வந்ததற்கு 1956முதல் 1965 வரை வந்த சுதந்திரன் ஏடுகள் சாட்சி. அமெரிக்கா கியூபாவின் மீது தொடுத்த ஆக்கிரமிப்பையோ முற்றுகையையோ இன்னும் பல நாடுகள் மீது நடத்திய அநீதியான தாக்குதல்களையோ வியட்நாம் போரையோ கண்டிப்பதற்குத் தயங்கிய தமிழரசுத்தலைமை கூறிய காரணம், தாங்கள் அயல் விவகாரங்கள் பற்றி அதிக அக்கறை காட்ட இடமில்லை என்பது தான். எனினும் சீன எல்லையில் இந்தியாவின் ஊருடுவல் காரணமாயும், எல்லைப் பிரச்சினையில் பேச்சுவார்த்தைகளை இந்தியா தட்டிக்கழித்ததன் காரணமாயும் 1962ல் ஏற்பட்ட மோதலில் சீனாவை ஆக்கிரமிப்பாளனாகக் காட்டி, ஐ.தே.க. குண்டர்களுடன் சேர்ந்து சீன எதிர்ப்பு ஊர்வலம் போவதற்குத் தமிழரசுக்கட்சியினர் தயங்கவில்லை.

1956க்குப் பின்பு 1964வரை மேற்கொள்ளப்பட்ட காணிச்சீர்த்திருத்தச் சட்டம், பல்வேறு அந்நிய உடைமைகளது தேசியமயமாக்கம், பிரித்தானியத் தளங்களது நீக்கம் போன்ற எதையுமே எதிர்ப்பதில் ஐ.தே.க.வுக்கு தோள் கொடுப்பதில் தமிழ்க் காங்கிரசின் உத்தம வாரிசாகவே தமிழரசுக்கட்சி நடந்து கொண்டது.

கூட்டணி என அறியப்படும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என்பது தமிழரசுக்கட்சியின் அரசியல் அந்திம காலத்தில் அதற்குப் புத்துயிரூட்டவும், மரித்துவிட்ட தமிழ்க் காங்கிரசின் பேர்ப்பலகையைப் புதைக்கவும் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு. இதற்கு ஐ.தே.கவின் ஆதர்வும், ஆசியும் இருந்தது. தொண்டமானின் ஒத்துழைப்பும் இருந்தது. 1974ல் உருவாக்கப்பட்ட தமிழர் ஐக்கிய முன்னணியில் பங்குபற்றிய ஐ.தே.க. பிரமுகர் தேவநாயகமும் இ.தொ.கா. தலைவர் தொண்டமானும் 1977ல் தேர்தலுக்கான சாடைகளும், ஐ.தே.கவின் வெற்றிக்கான வாய்ப்புகளும் 1976ல் தெரியக்கண்டதுமே ஒதுங்கி விட்டார்கள். கூட்டணிக்காரரின் அரசியல் தமிழரசுக்கட்சி அரசியலின் தொடர்ச்சியேயன்றி வேறல்ல. தமிழரசுக்கட்சியின் சீரழிவின் உச்ச நிலையாக வேண்டுமானால் கூட்டணியை நாம் கொள்ளலாம். மற்றப்படி தேசிய இனப்பிரச்சினையில் அதன் அணுகுமுறையைத் தமிழரசுக்கட்சி அரசியலின் தொடர்ச்சியாகவே காணுவது தகும்.

தமிழரசுக்கட்சியின் 1986ம் ஆண்டு தேர்தல் வெற்றியின் அடிப்படை அரசகரும மொழிச் சட்டம். 1956ல் சிங்களம் அரச கரும மொழியானதையடுத்துத் தமிழரசுக்கட்சி, என்னவிதமாகப் போராடும் என்ற கேள்வி எழுந்தது. தமிழரசுக்கட்சி இப்பிரச்சினையை முனனிட்டு நியாயத்துக்கான வெகுஜனப்போராட்டம் ஒன்றைத் தலைமை தாங்கிநடத்தும் வலிமையையோ அதற்கான பார்வையையோ கொண்டிருக்கவில்லை. சிங்கள மக்கள் மத்தியில் இருந்த முற்போக்குச் சக்திகளுடன் இணைவதில் வடக்கில் தமது அரசியல் வலிமை பாதிக்கப்படலாம் என்பது ஒரு அச்சம். மறுபுறம் சிங்களவர்களைப் பகை இனமாகக் காட்டித் தமிழ் மக்களிடம் ஆதரவு பெரும் தேவைக்கும் சிங்கள மக்களிடம் தமிழ் மக்களது நியாயமான கோரிக்கைகளுக்கான ஆதரவை நாடுவதற்குமிடையிலான முரண்பாடு இருந்தது. தமிழ் மக்களுக்காகத் தம்மைவிட யாருமே குரல் கொடுக்கக் கூடாது என்பது அவர்களது குறுகிய தேசியவாத அணுகுமுறையின் விளைவு என்றுங் கூறலாம்.

பொதுவாகவே சிங்கள மக்கள் மத்தியில் தமது நிலைப்பாட்டையோ தமிழ் மக்களது தேவைகளையோ விளக்கும் தேவையைத் தமிழரசுக் கட்சி உணரவில்லை என்பதை விடக், கருத மறுத்தது என்பது ஒரு வேளை கூடப்பொருந்தும். இதன் விளைவாகவே, சமஷ்டி என்றால் பிரிவினை என்றவாறான பொய்ப் பிரச்சாரம் எளிதாகவே தென்னிலங்கையில் வெற்றிபெற்றது.

எதற்காகப் போராடுவது பயனுள்ளது என்பது பற்றியும் தமிழரசுக்கட்சிக்குத் தெளிவு இருக்கவில்லை.

சிங்களம் மட்டுமே சட்டம் இயற்றப்பட்ட பின்பு, தமிழ் மக்கள் சிங்களம் படிக்கக் கூடாது என்று ஆணையிட்டதன் மூலம் தமிழர்களது அரசாங்க உத்தியோக வாய்ப்புக்களைக் குறைக்க விரும்பிய இனவாதிகளது நோக்கத்துக்கே தமிழரசுக் கட்சியினர் உதவினர்.

1957ல் வாகனங்களில் சிங்கள எழுத்துப் பொறிப்பதை எதிர்த்து நடத்தப்பட்ட 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டம் ஒரு அரசியற் சிறுபிள்ளைத்தனம். இதன் ஒரு உடனடி விளைவு, தெற்கில் தமிழ்ப் பேர்பலகைகட்குத் தார்பூச்சு. இதையடுத்து, 1958 இனவாத வன்முறை நிகழ்ந்தது. எனினும், தமிழரசுக்கட்சி இன்னும் பலகாலம் ஸ்ரீயை எதிர்த்தது. இதன் விளைவாக யாழ் குடாநாட்டில் மக்கள் பழைய பஸ்வண்டிகளில் அல்லற்பட்டனர். தமிழரசு எம்.பி.க்கள் தெற்கில் சிங்கள ஸ்ரீபொறித்த சொகுசு வாகனங்களில் ஏற மறுத்ததாக எனக்குத் தெரியாது. எந்த வகையிலும் ஆயத்தமில்லாமல்

> **பொதுவாகவே சிங்கள மக்கள் மத்தியில் தமது நிலைப்பாட்டையோ தமிழ் மக்களது தேவைகளையோ விளக்கும் தேவையத் தமிழரசுக் கட்சி உணரவில்லை என்பதை விடக், கருத மறுத்தது என்பது ஒரு வேளை கூடப் பொருந்தும். இதன் விளைவாகவே, சமஷ்டி என்றால் பிரிவினை என்றவாறான பொய்ப் பிரச்சாரம் எளிதாகவே தென்னிலங்கையில் வெற்றி பெற்றது.**

ஒரு போராட்டத்தைத் தொடங்கினால் என்ன நடக்கும் என்பதற்கு 1961 சத்தியாக்கிரகம் ஒரு சான்று. யாழ்ப்பாணக் கச்சேரியின் முன்னாலிருந்த சத்தியாக்கிரகிகள் மீது பொலிசார் தொடுத்த முட்டாள்தனமான தாக்குதலால் வேகமாக வளர்ந்து கிழக்கிலும் பரவிய சத்தியாக்கிரகம் அடுத்த நடவடிக்கை என்ன என்ற தெளிவில்லாமல் நீண்டது. தமிழரசு அஞ்சலட்டை, முத்திரை, முத்திரையிட்ட அஞ்சலுறை போன்றன அச்சிடப்பட்டன. இது தமிழரசுக்கட்சி கேட்பது பிரிவினையே என்ற சிங்களப் பேரினவாதக் கருத்தை வலியுறுத்தியது.

சத்தியாக்கிரகத்துக்கு இடதுசாரிகள் தெரிவித்த ஆதரவையும் அனுதாபத்தையும் தமது கோரிக்கைகளை வலுப்படுத்தும் முறையில் எவ்வாறு பயன்படுத்துவது என்ற தெளிவு தமிழரசுக்கட்சியிடம் இல்லாமைக்கு அவர்களது இடதுசாரி எதிர்ப்பு சிந்தனையும் முக்கியமான ஒரு காரணமாயிருக்கலாம். எனினும், அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்ட பின்பு, தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும், பிற பிரமுகர்கள் சிலரும் தடுப்புக்காவலில் வைக்கப் பட்டபின்பு, தமிழரசுக்கட்சியால் எதுவுமே செய்ய முடியவில்லை. றோணியோ முறையில் அச்சிடப்பட்ட ஒரு அரசு விரோத ஆங்கிலச், செய்தி விமர்சனப் பிரசுரம் யாழ்ப்பாணத்திலிருந்து தலைமறைவாகச் சில வாரங்களாக வந்து மெல்ல நின்று விட்டது.

எதைக்காட்டி ஜி.ஜி. பொன்னம்பலத்தைத் துரோகி என்றும் இன்னும் பலவாறாகவும் தமிழரசுக்கட்சியினர் தூற்றினரோ அதே செயலை அவர்களே செய்யும் நிலை 1965ல் ஏற்பட்டது. 1957ல் ஏற்பட்ட பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்பாட்டை எதிர்த்து அதை அழிக்க முனைகின்ற ஐ.தே.கவுடன் தமிழரசுக் கட்சி ஒரு இரகசிய உடன்பாடு செய்தது. 1965 தேர்தலில் தமிழரசுக் கட்சி ஐ.தே.கவுக்கு வழங்கிய உதவிக்காக அதற்கு ஒரு மந்திரிப் பதவி வழங்கப்பட்டது. ஐ.தே.கவின் ஏழு கட்சிக்கூட்டாட்சியில் சிங்களப் பேரினவாதிகளான கே.எம்.பி.ராஜரத்னவும், ஆர்.ஜி.சேனநாயக்கவும் இருந்தனர். இலங்கையில் ரொத்ஸ்கியத்தின் தந்தையாகக் கூறப்பட்ட பிலிப் குணவர்தனவின் ம.ஐ.முன்னிணியும் அதில் இருந்தது. தமிழ்க் காங்கிரசும் இருந்தது.

மந்திரிப் பதவியை ஏற்பதில் உள்ள பிரச்சினையை வெகுசாமர்த்தியமாக செல்வநாயகம் தனக்கு வசதியாக பயன்படுத்தினார். மக்களால் தெரிவு செய்யப்பட்ட எவரும் பதவியை ஏற்பதில்லை என்று தமது முன்னைய பிரதிக்கினையை 'மறுவாசிப்புக்கு' உட்படுத்திய தமிழரசுக்கட்சியினர் அரசியல் யோக்கியத்தைக் 'கட்டுடைத்து' ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடிக்கும் விதமாக 'மறுக்கட்டமைத்து', செல்வநாயகத்துக்கு மிகவும் நெருக்கமான எம். திருச்செல்வத்தை மூதவைக்கு அனுப்பி அமைச்சராக்கினர். இந்த ஜனநாயக பாரம்பரியம் இன்னும் தொடர்கிறது.

1965-69 காலகட்டம், தமிழரசுக் கட்சியின் வர்க்கப்பண்பைத் தெளிவாகக் காட்டிய ஒன்றாகும். வடக்கில் 'சீனக்கம்யூனிஸ்ட்டுகள்' என அறியப்பட்டவர்களும் அப்போது நா. சண்முகதாசன் தலைமையிலானவர்களுமான கம்யூனிஸ்ட் கட்சியினரது வழிகாட்டலில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர் நடத்திய தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை முழுமூச்சாக எதிர்த்த சாதிவெறியர் கட்காகக்குரல் கொடுத்த பெருமை தமிழரசுக் கட்சியினது. மார்க்ஸிய - லெனினிய கம்யூனிஸ்ட்டுக்களை எதிர்ப்பதற்கு என்றுமே தயங்காத அமிர்தலிங்கம், வியற்நாமிய மக்களது விடுதலைப் போரையும் இழிவு செய்தார்.

திருச்செல்வத்தை அமைச்சராக்கி ஒரு ஆண்டு கழிந்திடமுன்பே, தமிழரசுக் கட்சி எதிர்பார்த்த மாவட்ட சபைகள் உருவாக மாட்டா என்பது தெளிவாகி விட்டது. மாவட்ட சபைக்கு ஸ்ரீ.ல.சு.கட்சி (சமசமாஜக் கட்சி சோவியத் சார்பு கம்யூனிட்ஸ் கட்சி ஆகியவற்றின் நல்லாசியுடன்) காட்டிய எதிர்ப்பை விட முக்கியமாக, அரசாங்கத்திற்கு உள்ளேயே கடும் எதிர்ப்பு இருந்தது. ஆயினும், மேலும் மூன்று ஆண்டுகள் அரசாங்கத்தில் ஒட்டியிருந்துவிட்டுத், திருகோணமலையைப் புனித நகராக்க அரசாங்கம் மறுத்தது என்ற அரசியல் முக்கியம் குறைந்த ஒரு பிரச்சினையைக் காரணங்காட்டி அரசாங்கத்தினின்று விலகியதன் உண்மையான காரணம், 1970ல் வரவிருந்த பொதுத் தேர்தல் தான்.

தமிழரசுக்கட்சியின் 'தன்மான' அரசியல் 1965ல் காற்றோடு கலந்து விட்டது. தீர்க்கதரிசி, தமிழரசுத் தந்தை ஈழத்துக் காந்தி என்றெல்லாம் அழைக்கப்பட்ட செல்வநாயகம் 1970 தேர்தல் முடிவுகளையெடுத்துச் சொல்லக் கூடியதெல்லாம் ''இனித் தமிழர்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்'' என்பதுதான். தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களது துணை இல்லாது சிங்களத் தேசிய வாதக் கட்சி எதுவும் ஆட்சி அமைக்க முடியாது என்ற அவரது எண்ணம் 1960 மார்ச், ஜூலை 1965 தேர்தல்களின் முடிவுகளின் அடிப்படையிலானது. 1970ல் ஸ்ரீ.ல.சு.க. தலைமையிலான ஐ.மு. மூன்றில் இருபங்கு பெரும்பான்மை ஈட்டியதால் பேரம் பேசும் அரசியலுக்குப் பேரிடி விழுந்தது. இந்தக் ''கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்'' தீர்க்க தரிசனம் கூடப்பொய்யாகும் வண்ணம் 'கடவுள் கூடக் காப்பாற்ற முடியாத விதமாக அவரது வாரிசுகளது அரசியல் அமைந்தது வேறு கதை.

தமிழரசுக் கட்சியின் அடுத்த பெருந் தாவலான தமிழீழக்கோரிக்கைக்குப் போகுமுன்பு, தமிழ்க் காங்கிரசும், தமிழரசுக் கட்சியும் 1956-60கால இடைவெளியில் நடத்திய குத்துச் சண்டைக் காட்சிகள் இன்றைய நிகழ்வுகள் பற்றிய விளக்கத்துக்கும் உதவலாம். தமிழரசுக்கட்சி சமஷ்டி கேட்டதற்காக அவர்களை விமர்சித்த தமிழ்க்காங்கிரஸ் சமஷ்டிக் கோரிக்கையைத் தொடர்ச்சியாக நிராகரித்து வந்தது. ஜி.ஜி. பொன்னம்பலம் தன்னை மீளவும் தமிழ்த் தேசிய அரசியலில் நிலைநிறுத்தும் நோக்குடன் 'வட்டமேசை மகாநாடு' பற்றிப் பேசியபோது அவரை விலக்கித் தாங்களே தமிழர்களது பிரதிநிதிகள் என்பதை வலியுறுத்தும் நோக்குடன் சர்வக்கட்சிக் கலந்தாலோசனை மூலம் தீர்வு தேடும் முயற்சியைத் தமிழரசுக்கட்சி ஏளனஞ்செய்து நிராகரித்தது. தமிழரசுக்கட்சி தமிழ்ப் பல்லைக்கழக இயக்கத்துக்கு ஆதரவு கொடுத்தபோது தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்குப் பதிலாக இந்துப் பல்கலைக்கழகம் வேண்டும் என்று தமிழ்க் காங்கிரஸ் கோரியது. முடிவில் ஸ்ரீ.ல.சு.க. வடக்கில் 1974ல் ஒரு பல்கலைக்கழக வளாகத்தை நிறுவிய போது அதற்குத் தம்மாலியன்ற இன்னல் கொடுப்பதில் தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரசும் இணைந்த த.ஐ.மு. மும்முரமாக நின்றது. 1978ல் ஐ.தே.க. ஆட்சியின் கீழ் தங்களது விருப்புக்குரிய சு. வித்தியானந்தனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக நியமிக்கச் செய்ததும் இதே கூட்டம்தான்.

*ஜூலை 20ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பத்திரிகையாளர் மாணிக்கவாசகர் 21 நாட்களின் பின் எந்தக் குற்றச் சாட்டுக்களுமின்றி விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.*

*அவர் கைது செய்யப்பட்டிருந்த காலத்தில் அரசின் அறிக்கைகளை அடியாகக் கொண்டு தமது புலனாய்வில் அவரை ஒரு பேனாப் பயங்கரவாதி என்று மகுடம் சூட்டிய பத்திரிகைகளும் ஒரு பயங்கரவாதிக்காக எப்படிக் குரல் கொடுக்க முடியும் என்று மௌனம் காத்த/அடக்கி வாசித்த சுதந்திரப் பத்திரிகையாளர்களும் அந்த பேனாப் பயங்கரவாதிக்கு விடுதலை என்று எழுதக் கூடுமோ இனி? அவருடன் சரிநிகர் நடத்திய தொலைபேசி உரையாடலிலிருந்து தொகுக்கப்பட்டவை இவை!*

*— ஆர்*

# 'பேனாப் பயங்கரவாதியின்" விடுதலை?

கடந்த ஜூலை மாதம் 20 ஆம் திகதி பிற்பகல் இரண்டரை மணியளவில், வவுனியாவில் உள்ள கிளர்ச்சித் தடுப்புப் பொலிசாரினால், திடீரென நான் கைது செய்யப்பட்டேன். என்ன தேவைக்காகக் கைது செய்யப்பட்டேன் என்பது குறித்து கைது செய்யப்பட்ட மூன்றாவது நாள் தான் எனக்குத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது.

அன்று மதிய உணவை அருந்திவிட்டு, வழமை போல பாடசாலை முடிந்து வருகின்ற எனது மகளின் வருகைக்காகக் காத்திருந்தேன். அப்போது சாத்தப்பட்டிருந்த எமது வீட்டின் முன் கதவை யாரோ தட்டினார்கள். எழுந்து வந்து பார்த்த போது, சிவிலுடையில் மூவர் வந்திருந்ததைக் கண்டேன். அவர்கள் ஏதோ ஒரு புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதை எனது உள்ளுணர்வு முதல் பார்வையிலேயே உணர்த்தியது. என்னை அறியாமலேயே நான் முன்னெச்சரிக்கை அடைந்தேன்.

என்ன விஷயம் என கேட்டதற்கு, "சி.எஸ்.யூ.விலிருந்து ஓ.ஐ.சி உங்களை அழைத்து வரச் சொன்னார்" என அவர்கள் சிங்களத்தில் தெரிவித்தார்கள். எனது உள்ளுணர்வு உணர்த்திய எச்சரிக்கை காரணமாக எழுந்த சிறிய பதட்ட உணர்வை வெளிக்காட்டாமல், இன்னும் அரை மணித்தியாலத்தில் நான் அங்கே வருகிறேன் என்று சொல்லுங்கள் எனக் கூறி அவர்களை அனுப்பி வைத்தேன்.

பாடசாலை முடிந்து எனது மகளும் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். சில நிமிடங்களில் அந்த சிவிலுடைப் பொலிசார் மீண்டும் வந்தார்கள்.

"சி.எஸ்.யூ ஓ.ஐ.சி, உங்களைக் கையோடு அழைத்து வரச் சொல்லி அவசரப்படுத்தி எங்களுக்கு ஏசுகின்றார். இனியும் தாமதிக்க முடியாது. வாருங்கள் பொலிஸ் ஜீப்பில் போவோம்." என அவசரப்படுத்தி அழைத்தார்கள். நான் எனது மோட்டார் சைக்கிளிலேயே வர விரும்புகின்றேன் எனக் கூறி அவர்களை முன்னால் போகுமாறு தெரிவித்துவிட்டு வவுனியாவில் உள்ள சி.எஸ்.யூ பொலிஸ் அலுவலகத்தைச் சென்றடைந்தேன்.

என்னை அழைத்து வந்தவர்கள், எனது முழுப்பெயர், முகவரி என்பவற்றை முதலில் விசாரித்து எழுதிக் கொண்டார்கள். வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் தொடர்பு கொண்டு, அந்த விபரத்தை அவர்கள் தெரிவித்ததையும் நான் அப்போது அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

சிறிது நேரத்தில் சி.எஸ்.யூ பொறுப்பதிகாரி வந்ததும் அவரிடம் என்ன விடயம் என்று கேட்டதற்கு, கொழும்பில் உள்ள ரீ.ஐ.டி - பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் பிரதி பொலிஸ் மா அதிபர் என்னைச் சந்திக்க வேண்டியிருப்பதாகத் தெரிவித்து, கொழும்பிற்கு அனுப்பி வைக்குமாறு வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் அவர் கேட்டிருப்பதாகவும், அதற்குரிய காரணம் தமக்குத் தெரிவிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.


உடனடியாகவே என்னை கொழும்பிற்கு அழைத்துச் செல்ல உள்ளதாகத் தெரிவித்ததும், நான் அதற்கு முன்னதாக வீட்டிற்குச் சென்று வருவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டேன். அதன்படி, நான் பொலிசாரினால், வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டு, எனது மனைவியிடம் எனக்கு நேர்ந்துள்ளமை குறித்துத் தெரிவித்து விட்டுச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டேன். என்னைக் கைது செய்தமை குறித்து, எனது மனைவிக்கும், வவுனியாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுக்கும் பொலிசார் உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம் உடனடியாக அறிவித்தார்கள். பொலிசாரின் ஆலோசனையின் பேரில் ஒரு சில அத்தியாவசியமான உடைகளையும் எடுத்துக் கொண்டேன்.

வவுனியாவில் இருந்து ஹமீட் என்ற பொலிஸ் சார்ஜன்ட்டும், தௌபீக் என்ற பொலிஸ்காரரும் என்னை பொலிஸ் ஜீப் வண்டியொன்றின் மூலம் அனுராதபுரத்திற்கு அழைத்துச் சென்று அங்கிருந்து மினி பஸ் ஒன்றின் மூலம் கொழும்புக்குப் பயணமாகி இரவு 11.30 மணியளவில் கொழும்பில் உள்ள ரீ.ஐ.டி டிவிசன் அதிகாரிகளிடம் கொண்டு சென்று ஒப்படைத்தார்கள்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை உடனடியாகவே என்மீதான விசாரணையை உதவி பொலிஸ் அத்தியட்சகர் தரத்திலான அதிகாரி ஒருவர் ஆரம்பித்தார்.

"எங்களுடைய விசாரணைகளில் உங்களைப் பயங்கரவாதத்துடன் தொடர்புபடுத்தக்கூடிய வகையிலான தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அது தொடர்பான உண்மையான விபரங்களை நீங்கள் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இந்த விசாரணை உங்களது பத்திரிகைத் தொழிலைப் பற்றியதல்ல. உங்களுக்கும் பயங்கரவாதத்துக்கும் தொடர்பு இருக்கின்றதா என்பதைக் கண்டறிவதற்காகவே மேற்கொள்ளப்படுகின்றது" என்று அந்த அதிகாரி விசாரணையை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே என்னிடம் தெரிவித்தார்.

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் ஏற்கனவே செய்யப்பட்டு வருகின்ற விசாரணை ஒன்றில், வீரகேசரி மாணிக்கவாசகர் என்ற பெயர் முக்கியமான கடிதம் ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், அந்தப் பெயருக்குரிய நபர் நான் தான் என்று தாங்கள் கருதுவதாகவும், அது பற்றியே விசாரணை செய்யப்படுகின்றது என்றும் என்னை விசாரணை செய்த அதிகாரிகள் தெரிவித்தார்கள். பொலிஸ் இன்ஸ்பெக்டர் தரத்திலான அதிகாரி ஒருவர், தமிழ் மொழி பெயர்ப்புக்கு உதவியாகத் தமிழ் தெரிந்த பொலிஸ் சார்ஜன்ற் ஒருவருடன் எனது



வாக்குமூலத்தைப் பதிவு செய்யத் தொடங்கினார்.

சிங்களத்திலும், ஆங்கிலத்திலுமாக விசாரணை நடைபெற்றது. என்னைப் பொறுத்தமட்டில், சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் நன்றாகப் பேசக்கூடிய ஆற்றல் இருந்தமையினால், மொழிபெயர்ப்பு அவசியம் ஏற்பட்டிருக்கவில்லை. அத்துடன், விசாரணையில் கேள்விகளுக்குரிய சரியான எனது பதில்களை உரிய முறையில் பதிவு செய்வதும் இலகுவாக இருந்தது. சிங்கள மொழியிலேயே வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

விசாரணையின் போது எந்தக் கட்டத்திலும் என்னை விசாரணை செய்த அதிகாரியோ அல்லது வேறு எவருமோ என்னை மிரட்டவோ அல்லது என்மீது வன்முறைகளைப் பயன்படுத்தவோ இல்லை. ஆயினும் அவர்கள் என்மீது மேற்கொண்ட விசாரணைகள் கடுமையானதும், சிக்கல் மிக்கதுமான பல கேள்விகளை உள்ளடக்கிய மிக ஆழமான விசாரணையாக இருந்தது. விசாரணைகள் சில வேளைகளில் மணித்தியாலக் கணக்கில் நீண்டிருந்த போதிலும், அவசியமானால் அல்லது களைப்படைந்தால், விசாரணையை நிறுத்தி வேறு நேரத்தில் நடத்த முடியும் என்றும், அந்தத் தேவையேற்பட்டால், தயக்கமில்லாமல் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் அந்த அதிகாரிகள் எனக்குத் தெரிவித்திருந்தார்கள். ஆயினும், எனது விசாரணை மிக விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதில் நான் மிகுந்த அக்கறை கொண்டிருந்தபடியினால், தொடர்ச்சியான விசாரணைக்கு நான் உடன்பட்டிருந்தேன்.

பகலிலும், மாலையிலும், இரவிலுமாக மாறிமாறி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. விசாரணைகளின் போது, விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருக்கின்றதா, பயங்கரவாதத்துடன் தொடர்பு இருக்கின்றதா என்பது குறித்த விபரங்களை அறிவதற்காகவே அநேகமாக எல்லாக் கேள்விகளும் கேட்கப்பட்டன.

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு அங்கு விசாரணைக்காகக் கொண்டுவரப்பட்ட ஏனைய தமிழர்களுடன் கதைக்கக் கூடாது என்ற கண்டிப்பான உத்தரவு எனக்கு வழங்கப்பட்டிருந்தது. அத்துடன், ஏனையவர்கள் பொலிஸ் தலைமையகத்தின் ஆறாம் மாடியில் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் நான் மாத்திரம் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு அலுவலகத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தேன். என்னை அங்கிருந்தவர்கள் மிகவும் கௌரவமான முறையில் நடத்தினார்கள். குளித்தல் உட்பட தேவையான அடிப்படை வசதிகளை வழங்கியிருந்தார்கள்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில், செய்திப் பத்திரிகைகள் எதுவும் எனக்கு வழங்கப்படவில்லை. அதே போல, வானொலி கேட்பதற்குரிய வசதிகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இருந்த போதிலும், ஆரம்பத்தில் இரண்டு மூன்று தினங்கள், என்னைப் பற்றி விசாரித்தும், விசாரணைக்கான காரணத்தைத் தெரிவிக்கக் கோரியும், தொடர்பு சாதனத்துறையுடன் தொடர்புடைய பல அமைப்புக்களும், பிபிசி, ராய்ட்டர் ஆகிய நிறுவனங்களின் சார்பிலும், பல தொலைபேசி அழைப்புக்கள் வந்தமை பற்றி நான் நேரடியாகவும், அதே நேரத்தில் தொலைபேசி அழைப்புக்களின் தொடர்ச்சியான தொல்லை பற்றியும், பொலிஸ் அதிகாரிகள் வெளிப்படையாகவே என்னிடம் தெரிவித்தமையினாலும், தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

தொடர்பு சாதனங்களில் எனது கைது தொடர்பாக செய்திகள் வெளியானதை பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றுகின்ற எனது விசாரணையுடன் தொடர்பில்லாத பல ஊழியர்களின் கதைகள் மூலமாக அறிய முடிந்தது. சில சந்தர்ப்பங்களில், ஊழியர்கள் சிலர் குழுமியிருந்து என்னைக் குறித்து தங்களுக்குள்ளேயே புதினமாகக் கதைத்துக் கொண்டதில் இருந்தும், சிலர் நேரடியாகவே என்னிடம் வந்து, வானொலிகளிலும், பத்திரிகைகளிலும், எமது கைது (வீரகேசரி நிறுவனத்தைச் சேர்ந்த நான்கு பேர்) பற்றி வெளியாகியிருந்த செய்தித் தகவல்கள் பற்றி சாடையாகக் கதைத்து விட்டுச் செல்வதில் இருந்தும், வெளி உலகில் எனது கைது தொடர்பாக ஏதோ நடக்கின்றது என்பது குறித்து என்னால் உணர முடிந்தது. பாராளுமன்றத்தில் பத்திரிகையாளர்கள் கைது பற்றி முக்கியமளித்து பிரஸ்தாபிக்கப்பட்டமை குறித்தும் இதன் மூலமே நான் சாடையாகத் தெரிந்து கொண்டேன்.

சரியாக மூன்று வாரங்கள் நான் தடுத்து வைக்கப்பட்டிருந்தேன். என்ன நடக்கப் போகின்றது, நீதிமன்றத்தில் என்னைக் கொண்டு சென்று தாக்கல் செய்வார்களா அல்லது வழக்குத் தாக்கல் எதுவுமின்றி, விடுதலையுமின்றி இரண்டுங்கெட்ட ஒரு நிலையில் களுத்துறை சிறைச்சாலையில், விசாரணையோ அல்லது விடுதலையோ இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுடன் என்னையும் சேர்த்து விடுவார்களோ என்ற அச்சமும் எனக்கு ஏற்பட்டிருந்தது.

தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் இரண்டு தடவைகள் எனது மனைவியும் மகளும் என்னை வந்து பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். அந்தச் சந்திப்பின் காரணமாக எனது மனதைத் திடப்படுத்திக் கொள்ளவும், பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகள் முடிந்த பின்னர், விசாரணையின் போக்கு, குற்றம் சாட்டப்படுகின்ற விதம் என்பவற்றைக் கொண்டு அதற்கு ஏற்றவாறு மாற்று நடவடிக்கைகள் தொடர்பாகச் சிந்திப்பதற்கும் வாய்ப்பு கிடைத்தது என்றே சொல்ல வேண்டும்.

வழக்கறிஞர் ஒருவரைச் சந்திக்க வேண்டும் என்ற வேண்டுகோளை என்னை விசாரணை செய்த அதிகாரிகளிடம் நான் விடுக்கவில்லை. அவ்வாறான வேண்டுகோள் விடுப்பதற்கு உரிய சந்தர்ப்பம் இல்லாமலே திடீரென நான் விடுதலை செய்யப்பட்டேன்.

என்னுடைய கைது நடவடிக்கையை ஆட்சேபித்து, என்னை விடுதலை செய்யவேண்டும் எனக்கோரி உடனடியாகவே செய்தி ஊடகத்துறையைச் சார்ந்த வவுனியாவில் உள்ளவர்கள் அங்கம் வகிக்கின்ற வன்னி செய்தியாளர் சங்கம், ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர், பொலிஸ் மா அதிபர், தொடர்பு சாதன அமைச்சர் ஆகியோருக்கு அவசர மகஜர்களை அனுப்பி வைத்திருந்தது. இச்சங்கத்தின் தலைவராகிய தினசேன ரத்துகமகே, பொருளாளராகிய ரஞ்சித் ஜயசுந்தர ஆகியோர் மிகத் துரிதமாகவும், விடாப்பிடியாகவும் செயற்பட்டார்கள். நிழல் போல இருந்து, நான் கைது செய்யப்பட்டது முதல், விடுதலையாகும் வரை அளப்பரிய முறையில் செயற்பட்டிருந்தார்கள். வவுனியா அரசாங்க அதிபர் கே.கணேஷ் அவர்களும் நான் கைது செய்யப்பட்டதை அறிந்தது முதல், விடுதலையாகும் வரை தொடர்ச்சியாகப் பலதரப்பட்டவர்களுடனும் தொடர்பு கொண்டு தன்னால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். அதே போல என்னைப் பிரிந்து தனிமையில் கவலையுற்றிருந்த எனது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியவர்களையும், பல்வேறு வகைகளிலும் உதவி செய்வதற்காகக் காத்திருந்தவர்களையும், அவசியமானால், நீதித்துறை நடவடிக்கைகளின் மூலம் வேண்டிய உதவிகளைச் செய்வதற்காக, அமைதியாகக் காத்திருந்த உள்ளங்களையும், நான் விடுதலையாகி வந்தபின்னரே அறிந்து கொண்டேன்.

கைது செய்யப்பட்ட எனக்கு மாற்று உடைகள் வழங்குவதற்காக, நான் பணிபுரிகின்ற பத்திரிகை நிறுவனத்தின் பிரதம ஆசிரியர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்த வேளையில், எனது மனைவி என்னை நேரில் வந்து பார்த்து, என்னுடைய நிலைமைகளை உள்ளது உள்ள படி அறிந்து கொள்வதற்குரிய நடவடிக்கைகளில் வவுனியாவிலிந்து கடமை புரியும் சகோதர மொழிப் பத்திரிகையாளர்களான தினசேன ரத்துகமகே, ரஞ்சித் ஜயசுந்தர ஆகிய இருவரும் மிகவும் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள் என்பதை நான் இங்கு குறிப்பிட வேண்டும். அது மட்டுமல்லாமல், திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட என்னை நான்கு நாட்களுக்குள் வந்த முதல் வெள்ளிக்கிழமையே எனது மனைவி நேரில் வந்து பார்த்து எனக்கு அவசியமாக இருந்த அடிப்படைத் தேவைகளைக் கொடுத்து என்னுடன் பேசி, ஆறுதல் அடைவதற்கு உரிய நடவடிக்கைகளை மிகவும் துரிதமாகவும் நேர்த்தியாகவும் செய்திருந்தார்கள்.

தமிழ் செய்தித்துறையின் ஜாம்பவான்கள் என்றும், தங்களால் முடியாதது எதுவுமே இல்லையென்றும் சுயதம்பட்டம் அடித்துக் கொள்கின்றவர்கள், எனது நேர்மைத் தன்மை தொடர்பாகவும், பயங்கரவாதத்துடன் தொடர்புபடுத்தி என்னைக் கைது செய்தமை தொடர்பாகவும் மிகவும் கீழ்த்தரமான முறையில் அபிப்பிராயத்தை வைத்துக் கொண்டு, செய்தித்துறையில் எனது இருப்பு பற்றிய கருத்துக்களைக் கூறிக் கொண்டிருந்த போது, என்மீதான விசாரணைகள் பற்றிய போக்குகள் பற்றி மிகுந்த அக்கறையோடும், உடன் பிறந்த ஒரு சகோதரனுக்கு ஆபத்து நேர்ந்த காலத்தில் ஏற்படுகின்ற ஒரு துடிப்போடும் இவர்கள் இருவரும் எனது விடுதலைக்காகச் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

நான் கைது செய்யப்பட்ட தகவலை சுயமான செய்தியாக உடனடியாகவே வெளியிடுவதற்குத் தயங்கி சிலர் தொடை நடுங்கிக் கொண்டிருந்த நேரத்தில், சகோதர மொழியைச் சார்ந்த மின்னியக்கத் தொடர்பு சாதனங்கள் கைது இடம்பெற்ற மூன்று நான்கு மணித்தியாலங்களுக்குள்ளேயே மிகவும் முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டிருந்தன. அதனைத் தொடர்ந்து, வெரித்தாஸ், பிபிஸியின் சிங்கள மொழிச் சேவையாகிய சந்தேசிய, தமிழ் மொழிச் சேவையாகிய தமிழோசை என்பனவும், மிகுந்த அக்கறையோடு செய்தி வெளியிட்டன. உலகச் செய்தி நிறுவனமாகிய ராய்ட்டர் தனக்கே உரிய தன்மையோடு மட்டுமல்லாமல், மிகவும் சிறிய அளவிலாக இருந்த போதிலும் தன்னைச் சார்ந்த ஒரு ஊழியன் என்ற பொறுப்போடும் செய்தி வெளியிட்டு, எனது விடயத்தில் மிகுந்த அக்கறையோடு செயற்பட்டிருந்தது. ஈவினிங் ஒப்சேவர் பத்திரிகை செய்தி வெளியிட்டதுடன் நின்று விடாமல், சகோதரப் பத்திரிகையாளன் ஒருவனுக்கு நேர்ந்த திடீர் கைது பற்றி உடனடியாகவே, பொறுப்புணர்ச்சியோடு தலைங்கம் தீட்டியது.

"லக்பிம" பத்திரிகை முக்கியத்துவம் கொடுத்து, ஒரு கட்டுரையையே வரைந்திருந்தது பற்றி பயங்கரவாதப் புலனாய்வு பிரிவில் பணியாற்றுகின்ற சிலர் என்னிடம் தெரிவித்து வியப்படைந்தார்கள்.

நான் கைது செய்யப்பட்டபோதும் சரி, விடுதலை செய்யப்பட்ட போதும் சரி, உடனடியாகத் தகவல்

(19 ம் பக்கம் பார்க்க)

சங்கமன் அவர்களால் எழுதப்பட்டு வரும் "இது ஒரு அலசல்" பத்தி தொடர்பாக எமக்கு வந்த விமர்சனக் குறிப்பொன்று இங்கு பிரசுரமாகிறது. சங்கமனின் கருத்துகளை சரிநிகரின் கருத்துக்களாகக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. மூத்த எழுத்தாளரான சங்கமனின் கருத்துக்களுக்கு அவரே பொறுப்பு. இவ்வாறே சரிநிகரில் எழுதும் பிறரது கருத்துக்கட்கும் அவரவரே பொறுப்பாவர். சரிநிகருக்கு தனியான கருத்துக்கள் உண்டு. வாசகர்கள் இதைப் புரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

—ஆ—ர்

# சங்கமனுக்குள்ள நோய்க்கூறுதான் என்ன?

-கணபதிப்பிள்ளை

சங்கமனின் இது ஒரு அலசல் பத்திகள் தொடர்பாக இதழ் 152இல் வெளியான யார் இந்த சங்கமன்? என்ற கடிதத்தைப் படித்த போது இதை எழுதவேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது. கடிதத்தை எழுதிய அன்பர் சங்கமன் யார்? என்ற கேள்வியை எழுப்பியிருந்தாலும் அவர் யாரென்று இனங்காட்ட முயலவில்லை. பதிலாக அவரது எழுத்துக்களை வெளியிடும் சரிநிகரைத் தாக்குவதுடன் அமைந்து விட்டார்.

பல்வேறு கருத்துக்களையும் வெளியிடுவதற்காக ஒரு பத்திரிகையைக் குற்றம் சாட்ட முடியும் என்று நான் நினைக்கவில்லை. வியாபார நோக்கங்கட்காக கொச்சைத்தனமாக விஷயங்களை எழுதும் பத்திரிகைத் தனத்தையும், இதையும் ஒன்று படுத்திப் பார்க்க முடியாது என்பது எனது அபிப்பிராயம். கருத்துக்கள் எவ்வளவு தான் மோசமானவையாக இருந்தாலும், அவை பொதுசன அக்கறைக்குரியவையாக இருப்பின், பிரசுரிப்பது ஒரு பத்திரிகையின் கடமை. பத்திரிகை தனக்கென்று வேறு அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கலாம். அதற்காக வேறு கருத்துக்களை பிரசுரிக்கக் கூடாது என்று கூறுவது நியாயமானதல்ல. பல்வேறு கருத்துக்கள் மோதலுக்குள்ளாகும்போது தான் சரியான கருத்துக்களை கண்டடைவதற்கான வாய்ப்பும் அதிகரிக்கும் என்றே நான் நினைக்கிறேன். தவறான கருத்துக்களை அல்லது அப்படி நாம் கருதுபவற்றை தர்க்கரீதியாக விமர்சித்து நிராகரிக்கும்பொறுப்பும், அதற்கேற்ற உழைப்பும் இல்லாத எமது சொந்தப் பலவீனத்திற்காக கருத்துக்களுக்கு கதவடைப்புச் செய்வது நியாயமாகாது. அத்துடன் அது வெற்றிபெறப் போவதுமில்லை. சங்கமனின் கருத்துக்கள் ஒன்றும் புதியவை அல்ல. அவரது கருத்துக்களினை அடியொற்றிய எழுத்துக்கள் தொடர்ந்து வந்து கொண்டும் எழுதப்பட்டுக் கொண்டும் தான் இருக்கின்றன. ஓரிடத்தில் களம் கிடைக்காததால் அவை வெளிவராமல் விட்டு விடவில்லை. ஒரு பக்க கருத்துகட்கு மட்டுமே களம் தரப்படும் என்ற கோட்பாட்டின் தோல்வியை அன்றைய ரஷ்யா முதல் இன்றைய தமிழீழம் வரை கண்டாயிற்று. சரிநிகரும் அதைத் தொடர வேண்டுமா?

சங்கமனின் எழுத்துக்களில் பேசப்படும் விஷயங்கள் எல்லாமே பேசப்பட வேண்டிய விஷயங்கள் தான். பேசப்பட்டு விவாதிக்கப்பட வேண்டிய விஷயங்கள் தான். ஆனால், அவர் தான் பேசப்புகும் பொருள் பற்றிப் பேசுவற்கு உரிய ஆதாரங்களையும், தகவல்களையும் தந்து பேசுவதற்குப் பதில் சம்பந்தமற்ற விஷயங்களிலும் தொட்டு, போகிற போக்கில் சில கருத்துக்களை உதிர்த்து விட்டுச் செல்வார். அந்தக் கருத்துகள் பேசும் விஷயத்திற்கு நேரடியாகச் சம்பந்தமற்றவை. ஆனால், புதிய சர்ச்சைகளை கிளப்பி விடக் கூடியவை. மார்க்சியம் மீதும், மார்க்சிய மூலவர்கள் மீதும் அவருக்கு இருக்கும் வெறுப்புணர்வு இவ்வாறான உதிர்ப்புகளில் வெளிப்பட்டு நிற்கும். உண்மையில் இது அவர் பேசப்புகும் விடயத்தைப் பலவீனப் படுத்தி, அப்பொருள் குறித்த அவர்பக்க நியாயத்தை கேட்க விரும்பாத நபர்களை உருவாக்கி விடவே செய்யும்.

உதாரணமாக தேசியவாதம் பற்றி அவர் பேசப்புறப்பட்டால், அது பற்றிப் பேச எவ்வளவோ விடயங்கள் இருந்தும், அதை விட்டு விட்டு அவர் தனது பத்தியின் 3/5 பங்கை மார்க்சியத்தின் மீது தாக்குதல் தொடுக்கவே பயன்படுத்துவார்.

அவரது தாக்குதல் கூட மார்க்சிய தத்துவம் மீதான விமர்சன பூர்வமான தாக்குதலாக அல்லாமல் வெறும் சாரமற்ற, காலங் காலமாக மார்க்சிய விரோத முகாம்களால் முன்வைக்கப்பட்ட வரிகளை அப்படியே ஒப்புவிப்பதாகவே அமையும்.


எனது அக்கறை தற்போதுள்ள மனித குலத்தைப்பற்றியதே என்று ஆவேசமாக கூறும் அவரது உள் விமர்சகன் எதிர்கால மக்களுக்காக மக்களுக்காக என்று கோசம் எழுப்பிக் கொண்டு ஹிட்லரால் கொல்லப்பட்ட யூதர்களை விட ஸ்ராலின் அழித்த ரஷ்ஷிய மக்கள் அதிகம் என்று கூறுவான்.

இது அவன் பேசப் புகுந்த விடயத்துடன் நேரடிச்சம் பந்தமற்ற ஒரு கூற்று. அதுவும் விசமத்தமாக எழுதப்பட்ட ஒரு கூற்று. ஹிட்லர் அழித்தது யூதர்களை என்றும், ஸ்ராலின் அழித்தது ரஷ்ஷிய மக்களை என்றும் அவர் கூறும்போதே அவரது உள் விமர்சகன் எவ்வளவு விசமத் தனமான விதத்தில் அதைச் சொல்கிறான் என்று தெரியும். ஹிட்லரால் அழிந்தது யூதர்கள் மட்டுமா? ஜேர்மனிய மக்கள் அழியவில்லையா? அவனது யுத்தத்தால் அவன் படையெடுத்த நாடுகளிலெல்லாம் வாழ்ந்த மக்கள் கொல்லப்படவில்லையா? ஸ்ராலினால் அழிந்த ரஷ்ஷிய மக்கள் மட்டும் தான் கண்ணுக்கு தெரிகிறதா? அவரால் காப்பாற்றப்பட்ட ரஷ்ஷிய மக்கள் கண்ணுக்குத் தெரியவில்லையா? அல்லது அவைபற்றி பேசுவது முக்கியமில்லையா? சங்கமன் ஹிட்லரால் பாதுகாக்கப்பட்ட மக்களின் தொகை ஸ்ராலினால் பாதுகாக்கப்பட்ட மக்களின் தொகையைவிட அதிகம் என்று தனது தர்க்கத்தை மாற்றிச் சொல்லத் துணிவாரா?

உண்மையில் சங்கமனுக்கு மார்க்சியம் பற்றியும் மார்க்சியஇயக்கங்கள் பற்றியும் உள்ள அறிவு சந்தேகத்துக்குரியது. அவர் மார்க்சிய எதிர்ப்பு முகாம்களால் வெளியிடப்பட்ட நூல்களை மட்டும் படித்து மார்க்சியத்தை கேள்வி கேட்க மட்டும் பழகிய முதிரா இளம் மாணவன் ஒருவனைப்போல கேள்வி எழுப்பிச் சொல்கிறார். அவரது மார்க்சிய ஞானத்தை புரிந்து கொள்ள பல்வேறு வர்க்கங்களை சேர்ந்தவர்கள் தமது வர்க்க சிந்தனையை விட்டு, முற்போக்காக இணைந்து போராடுவதற்கான ஒழுக்கக் கோட்பாடு மார்க்சியத்தில் இல்லை (இதழ் - 140) என்று கூறும் ஒருவரிடம் மட்டுமே போதுமானது.

முதலாவதாக, முற்போக்காக இணைந்து போராட வர்க்க சிந்தனையை ஏன் விடவேண்டும் என்ற கேள்வி எழுகிறது. இரண்டாவதாக மார்க்சிய வழிகாட்டலில் நடந்த புரட்சிகள் போராட்டங்கள் எல்லாம் வேறு வர்க்கங்களின் கூட்டின்றி நடந்த வெறும் தொழிலாளி வர்க்கப் புரட்சிகள் போராட்டங்கள் தான் என்ற தகவலை இவர் எங்கிருந்து பிடித்தார் என்ற கேள்வி எழுகிறது. வர்க்கங்களை தத்தம் வர்க்க சிந்தனையின் கைதிகள் என்று கொச்சைத்தனமாக மார்க்சியத்தை விளங்கி வைத்திருக்கும் சங்கமன் தானேயாகிய வர்க்கம், தனக்கேயாகிய வர்க்கம் என்பது குறித்த மார்க்சிய பள்ளிப் படத்தைக் கூட அறியாதவராக இருக்கிறார். இதன் தர்க்கவியல் விளைவு என்னவென்றால், மார்க்சியம் கூறும் மனிதகுல விடுதலை மக்களை ஏமாற்றும் மாயமான் என்றும் தேசியவாதம் தான் முக்கியமானது என்றும் கூறும் நிலைக்கு அவரை இட்டுச் செல்கிறது.

நாசிப் படையெடுப்பை எதிர்த்து நின்ற ரஷ்ஷியாவின் யுத்தத்தை தலைமை ஏற்று நடாத்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிய தத்துவமும் அவருக்கு முக்கியமில்லாது போய்விட்டன. வெற்றியைத் தந்தது தேசியவாதம் தான் என்று அடித்துக் கூறிவிடுகிறார். சீனாவில் நடந்த ஜப்பானிற்கு எதிரான மக்கள் போராட்டமோ, வியட்நாமின் அமெரிக்காவுக்கு எதிரான யுத்தமோ அவருக்கு வசதியாக மறந்து விட்டது. இல்லாவிட்டால் முற்போக்காக இணைந்து போராடும் ஒழுக்கக் கோட்பாடு மார்க்சியத்தில் இல்லை என்று அவர் முதலில் கூறியதற்கே அது எதிரானதாகி விடுமல்லவா? ஆகவே அதை வசதியாக மறந்து விட்டார். மறந்துவிட்டு தேசியவாதத்திற்கு இருப்பியல் வாதிகளின் தத்துவத்தில் அர்த்தம் காணப் புறப்படுகிறார்.



உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்ற கோசம் முன்வைக்கப்பட்ட கம்யூனிஸ்ட் அறிக்கை வெளியான காலத்திற்கும், ஹிட்லரின் நாசிப் படைகளது ஆக்கிரமிப்புக்கெதிரான ரஷ்ஷிய மக்களின் எதிர்ப்புப் போராட்டம் நடந்த காலத்துக்கும் அன்று நிலவிய சர்வதேச சமூக சூழல்களுக்கும் போராட்டத்தின் தன்மைகட்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை இலேசாகவே காண மறுத்து விடுகிறார் அவர். தேசியவாதத்தின் விடுதலை முகத்தை மற்றெல்லாச் சிந்தனைகளையும் விட முன்கூட்டியே மார்க்சியம் இனங்கண்டு அதை ஒரு வரைமுறையான அரசியல் போராட்டமாக வழிநடாத்தியிருக்கிறதை அவர் புரிந்து கொள்ள முடியாமல் மார்க்சிய எதிர்ப்பு அவரது கண்களை மறைத்துவிடுகிறது.

ஆனாலும், ஆச்சரியப்படும் விதத்தில் அவர் மார்க்சியத்துக்கும் ஒரு பொறுப்பைக் கொடுக்கிறார். அதாவது ஒரு இனம் விடுதலை பெற்ற பின் அதாவது தேசியவாத விடுதலை கிடைத்த பின் தன்னுள் உள்ள முரண்பாடுகளை 'எதிர்த்துப்' போராட மார்க்சியப் பார்வையைக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறுகிறார். அதாவது தேசிய விடுதலைக்கு மார்க்சியம் உதவாது. ஆனால், இனத்தினுள் உள்ள சமூக ஏற்றத் தாழ்வுகளைக் களைய அது அவசியமாம்.

ஆக, அதிகாரத்தை எங்களிடம் தந்துவிடு. நீ உரிமைக்காக போராடிக் கொண்டிரு என்று மார்க்சியத்திற்கு கூறும் அற்புதமான விடுதலைக் கோட்பாடு அவரது என்பதை இது தெளிவுபடுத்துகிறது.

தேசியவாதம் முற்போக்காவது எங்ஙனம் என்ற கேள்வியையோ அது முற்போக்காக நடக்கத் துணையாக இருப்பது எது என்பதையோ பற்றி அவர் எதுவுமே பேசவில்லை. வெறுமனே தமது இருப்புக்கு ஆபத்து வந்தவுடன் தேசியவாதம் விடுதலை முகமுடையதாக மாறி விடுகிறது என்று கூறுவதுடன் அமைந்து விடுகிறார்.

ஆனால், தேசியவாதம் முற்போக்கானதாக, ஜனநாயகத் தன்மை வாய்ந்ததாக மக்களது போராட்டமாக நடப்பதற்கு வழிகாட்டும் அடிப்படைகளை மார்க்சியம் தவிர வேறெந்த தத்துவமோ வழிகாட்டலோ வழங்கி விடவில்லை என்பதுதான் உண்மை.

இது அவருக்கு ஒருபோதும் புரியப் போவதில்லை. புரிந்தாலும் அவர் ஒப்பப்போவதும் இல்லை.

இன்னொரு வேடிக்கையையும் இவரிடம் காணலாம். தனக்கென்றால் சுளகும் படக்குப் படக்கென்னும் என்பது போல புலிகள் விவகாரம் வந்தவுடன் அவருக்கு எல்லாக் கோட்பாடுகளும் இருந்த இடம் தெரியாமல் போய்விடுகின்றன. புலி எதிர்ப்பாளர்கள் பற்றி எழுதுகையில் அவர் சொல்கிறார்: தமக்கு கடந்த காலத்தில் புலிகளோடு ஏற்பட்ட காழ்ப்புகளை வைத்துக் கொண்டு இப்போது தேவைப்படும் ஒரு முற்போக்கான பொதுக் கோட்பாட்டை நிராகரிப்பவர்கள் நோய்க்கூறு கொண்டவர்கள்...

நல்லது இந்தக் கருத்து முற்றிலும் நியாயமானது தான். ஆனால், இந்தக் கோட்பாட்டை ஏன் ஸ்ராலினுக்கும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கூட பொருத்திப் பார்க்க முடியாது? புலிகளை, தமிழ் தேசியத்தைப் பற்றி இப்போ சிந்திக்க வைப்பவர்கள் அவர்கள் தான் என்று பாராட்டும் அவர், ஸ்ராலின் பற்றி மட்டும் அப்படிப் பேச மறுப்பது ஏன்? புலிகளால் அனைத்து விடுதலை இயக்கங்களும் வேட்டையாடப்பட்டது, அதன் இயக்கத்திற்குள்ளேயே தொடக்க காலமுதல் நடந்து வந்த உட்கட்சி களையெடுப்புக்கள் எல்லாவற்றிற்கும் பிரபாகரன் என்ற தனிமனிதரது அதிகார வெறியும் தலைமை ஆசையும் தான் காரணம் என்று சொல்லப்படுகிறதே அதைப்பற்றிச் சங்கமன் ஏன் ஒன்றும் பேசவில்லை. தன்னுடைய தனிப்பட்ட நலனுக்காகவே அவர் ஒரு இயக்கத்தையே நடாத்தி வருவதாக சில புத்திஜீவிகள் கூறித் திரிகிறார்களே, சங்கமனும் ஏன் அவர்களுடன் சேர்ந்து அதை உச்சரிக்கக் கூடாது? ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. மாறாக, தேசியவாதத்தை ஆதரிக்கிறார். புலிகளின் தவறுகளை விடவும் அவர்களது தேசியவாதப் போராட்டம் அவருக்கு முக்கியமானதாகப் படுகிறது. ஏனென்றால் அது அவரது வாழ்வுடனும் சம்பந்தப்பட்ட விடயம் அல்லவா? ஆனால், ஸ்ராலினின் விவகாரம் யாரோ எங்கோ தொலைவிலிருக்கிற ரஷ்ஷிய மக்களது விவகாரம் தானே? தவிரவும் அவர்கள் மார்க்சியம் அல்லவா பேசுகிறார்கள்? எனவே அவர்களது விடயத்தில் மட்டும் ஸ்ராலினின் செய்கைகள் எல்லாம் தனிப்பட்ட அதிகார வெறியினால் நடந்தவை என்று கூறிவிடலாம்.

ஆக, சங்கமனின் தத்துவத்தில் இருப்பதெல்லாம் வரலாற்று உண்மை

(12ம் பக்கம் பார்க்க)

இதழ் 151இல் பரந்தாமன் அவர்களால் எழுப்பப்பட்ட 'தமிழ்ப்பெண்களுக்கென தனியான அமைப்புத் தேவையா?' என்ற கேள்வி தொடர்பாக இவ்விதழில் தமது கருத்தைத் தெரிவித்து விவாதத்தைத் தொடர்கிறார் செல்வி திருச்சந்திரன் அவர்கள். கருத்து ரீதியான விவாதங்கள் புதிய சிந்தனைகட்கு வழிவகுக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இவ்விவாதத்தைத் தொடர விழைகிறோம். வாசகர்களும் தமது கருத்துக்களை (முடிந்தளவு சுருக்கமாக) விவாதப் பொருளின் எல்லையை மீறாது எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- ஆர்

# தனித் தமிழ்ப் பெண்கள் அமைப்பு பிரச்சினைகளுக்குத் தீர்வாகுமா?

சரிநிகர் இதழ் 151ல் (ஜூலை23 ஓகஸ்ட் 05, 98) பரந்தாமன் தமிழ்ப் பெண்களுக்கெனத் தனியான பெண்கள் அமைப்பு ஒன்று வேண்டும் என்ற கருத்தை முன்வைத்துள்ளார். எங்கள் நிறுவனத்தினால் (பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்) ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு கருத்தரங்கினைத் தழுவி இக் கருத்து வைக்கப்பட்டிருப்பதாலும் இது கருத்தரங்கின் குறைபாடென்று இனங்கண்டு இக்கருத்தை முன்வைத்தபடியாலும் அவர் முன்வைத்த வாதங்களுக்கு என்னுடைய பதிவுகளையும் முன்வைக்கலாம் என எண்ணுகின்றேன்.

பரந்தாமன் விளங்கிக் கொண்ட மாதிரி தமிழ்ப் பெண்களுக்கு ஒரு தனியமைப்பு தேவையா? தேவை இல்லையா? என்பது பற்றி ஒரு விவாதம் கட்டுரை வாசித்தோரினால் முன்வைக்கப்பட்டதாக எனக்கு நினைவு இல்லை. இனத்துவமும் பெண்களும் என்ற கட்டுரை பல்லின மக்களில் பெண்களுக்கென்று தனித்துவமான எதிர்ப்பார்ப்புக்களும், கலாசாரக் கற்பிதங்களும் உண்டு என்பதை விளக்கியது. இதைத் தொடர்ந்து அக்கருத்தை ஆழ அகல கலந்துரையாடியோர் விவாதித்தனர். ஆனாலும், பரந்தாமனின் வாதங்கள் எனக்குள் பல கேள்விகளை எழுப்பி விட்டது. எப்பொழுது தமிழ்ப் பெண்கள் தங்களுக்கென்று ஒரு தனியமைப்பை வேண்டி நிற்பார்கள்?

தமிழ்ப் பெண்கள் சிலர் தங்களுக்கென்று ஒரு அமைப்பை ஏற்படுத்த முன்வருவார்களானால் அது அவர்களது ஜனநாயக உரிமை. (Freedom of Association). ஒரு மதிப்பும் உண்டு. ஆனால், அதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் தமிழ்ப் பெண்களே. அது அவர்கள் தேவையை ஒட்டியதொன்று. அவ்வமைப்புகள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் போன்ற தமிழ்ப் பிரதேசங்களில் தோன்றலாம். தோன்றியிருக்கின்றன. பெண்கள் ஆய்வு வட்டம், பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் (Women's Development Centre) போன்றன இதற்கு உதாரணங்கள். சூரியா அபிவிருத்தி நிறுவனம் இப்பொழுது மட்டக்களப்பில் இயங்கினாலும் சிங்களப் பெண்களும் பணிக்குழுவில் (அது கொழும்பில் இயங்கிய பொழுது இருந்த மாதிரியே) இருக்கிறார்கள். முஸ்லிம் பெண்கள் தங்களுக்குப் பிரத்தியேகமான பிரச்சினைகள் மத அடிப்படையில் உண்டு என்பதனை உணர்ந்து முஸ்லிம் பெண்கள் ஆய்வுச் செயல் முன்னணி என்ற பெண்கள் நிறுவனத்தைக் கொழும்பில் கொண்டுள்ளனர். சிங்களப் பெண்களுக்கும் ஒரு தனி நிறுவனம் உண்டு.

சிங்கள, தமிழ், முஸ்லிம் பெண்கள் தங்களுக்கென்று நிறுவனங்களை ஆரம்பிப்பது பிரிவினைவாதத்தை உண்டாக்குமா? இது பெண்ணிலை வாதக் கோட்பாட்டுக்கு முரணானதா? என்பது ஒரு சுவாரஸ்யமான கேள்வி. இடதுசாரிகளின் இயக்க கருத்தியல் போல் (Internationalism) சர்வதேசியப் பாங்கு Sister hood is global போன்ற கருத்தியல்கள் வரலாற்று ரீதியில் பெண் நிலைவாத இயக்கங்களுள்ளும் இருக்கின்றன. பெண்கள் என்ற ரீதியில் சாதிய வர்க்க மத இனத்துவ தேசிய வரம்புகளைக் கடந்து ஒடுக்கு முறைகளில் ஓரங்கட்டலில், அடக்கு முறைகளில் ஒரு பொதுமை உண்டு என்ற உண்மையில் எழுந்ததே இக்கருத்தியல். இக்கருத்தியல் ஏனைய நாட்டு, ஏனைய மத, ஏனைய சாதிய, ஏனைய வர்க்கப் பெண்களுடன் ஒருமித்து ஒன்றிணைந்து, எங்களது பிரச்சினைகளைப் புரிந்து, விளங்கி ஒருமித்து இயக்க ரீதியில் விடிவு காண வேண்டும் என்று நீண்டு அகன்று ஒரு ஒற்றுமை உணர்வை பெண்நிலைவாதிகளிடம் தோற்றுவித்து விட்டது. இது பல நாடு கடந்த நிறுவனங்களையும் எமக்கு துணை புரிபவர்களாக ஆக்கி உள்ளது. இந்நிலையில் பல்லின மக்கள் வாழும் இடத்தில் நாம் தனித்து எங்களுக்கென்று ஒரு இயக்கத்தைத் தோற்றுவிப்பது பண்பாக இருக்காது என்பது என் எண்ணம். பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், அரச சார்பற்ற பெண்கள் ஒன்றியம் (The Sri Lanka Woman's N.G.O From), பெண்ணின் குரல் (Kantha Handa, Voice of Woman), விபவி, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமாதானத்துக்குமான இயக்கம் (MIRJE), சமூக விஞ்ஞான அமைப்பு (S.S.A), ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம் (C.R.M.) போன்ற நிறுவனங்கள் பல்லின சேர்க்கையால் பல நன்மைகளையும், ஒற்றுமையின் பலத்தையும், பல பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளும் ஒரு விசால மனப்போக்கையும் பெறுகிறது என்பதை நாம் மறுக்க இயலாது.

கிருஷாந்தி பாலியல் வல்லுறவு கொலை போன்றவற்றில் இவர்கள் நல்கிய ஆதரவு அரசைக் கலக்கி ஒரு சாதனை புரிந்தது என்பதை விட அநீதிக்கும், அராஜகத்துக்கும் எதிராக எங்களுக்கு எங்களுடன் சேர வேறும் பல மனிதர்கள் இருக்கிறார்கள். அது மனிதநேயம் அருகிய காலத்தில் ஒரு மனதிற்கினிய உணர்வைத் தருவதாக இருக்கிறதென்பதையும் நாம் மறுப்பதற்கில்லை. மேலும் தற்போது இனத்துவ துவேஷங்கள் மலிந்த சமுதாயத்தில் முற்போக்குச் சக்திகள் என்று சொல்லப்பட்ட இடதுசாரிகளும் ஏனைய குழுக்களும், அரசியல் கட்சிகளும் பேதப்பட்டு பிரிந்து கருத்தியல் நிறுவன ரீதியில் தனிப்பட்டு நிற்கும் கால கட்டத்தில் பெண்ணிலைவாதிகள் மாத்திரம் எல்லைகள் கடந்த சௌஜன்னிய நிலையில் இன்றும் இருக்கிறார்கள் என்ற உண்மையைட் பரந்தாமன் போன்றோர் ஒத்துக் கொள்ள வேண்டும். Cats Eye என்று ஐலன்ட் பத்திரிகையில் வரும் பத்தி எழுத்துக்களும் இதற்குச் சான்று. பல அறிவியல் விடயங்கள் பல்லினப் பெண்களின் சேர்க்கையால் இனவாதிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் தொடர்ந்தும் எழுதப்படுவது இவ்வொற்றுமையின் கருத்தியல் பிணைப்பின் ஒரு வெளிப்பாடு.

> 'என்று ஒரு இன மத வர்க்க சாதியப் பெண்களுக்கு
> தமக்கு ஒத்துப் போக முடியாதென்று படுகிறதோ,
> என்று கருத்து வேற்றுமைகளும் பிணக்குகளும்
> தோன்றுகிறதோ
> அன்று அவர்கள் விலகிச் சுயேச்சையாக இயங்கும்
> உரிமையை நிலை நாட்டலாம்'



ஆனாலும், என்று ஒரு இன மத, வர்க்க சாதியப் பெண்களுக்கு தமக்கு ஒத்துப் போக முடியாதென்று படுகிறதோ, என்று கருத்து வேற்றுமைகளும், பிணக்குகளும் தோன்றுகிறதோ அன்று அவர்கள் விலகி சுயேச்சையாக இயங்கும் உரிமையை நிலை நாட்டலாம். பரந்தாமன் தமிழ்ப் பெண்களுக்கு விசேட பிரச்சினைகள் என்று கூறுவதன் தார்ப்பரியம் தான் என்ன?

பாலியல் வல்லுறவா? (பால் நிலை + ஆணாதிக்கம்),

பெண்களுக்கெதிரான ஏனைய வன்முறையா? (பல்லினம்: வர்க்கம் + பால் நிலை)

வர்த்தக வலயப் பெண்களா? (பல்லினம்: வர்க்கம் + பால் நிலை),

வெளிநாடு செல்லும் பெண்களா? (பல்லினம்: வர்க்கம் + பால் நிலை),

தேயிலைத் தோட்டப் பெண்களா? (இனத்துவம் (தமிழ்) வர்க்கம் + பால்நிலை)

ரப்பர்த் தோட்டப் பெண்களா? (சிங்களம் + வர்க்கம் + பால் நிலை)

அகதிப் பெண்களா?

(இனத்துவம் (தமிழ்) வர்க்கம் + பால்நிலை)

கணவனை இழந்த பெண்களா? பல்லினம்: (சிங்களம், ஜே.வி.பி., தமிழ் - யுத்தம் இனத்துவம்)

வர்க்க, பல வர்க்கம் + பால் நிலை. புள்ளி விபரங்கள் கூறும் கதைகளான இவை, யாவருக்கும் பொதுவான பிரச்சினையாக இருக்கிறதென்பதே உண்மை. இராணுவத்தினரால் ஏற்படும் பிரச்சினைகள் கூடத் தமிழ்ப் பெண்களை மட்டும் தான் பாதிக்கிறது என்பதல்ல. சிங்களப் பெண்களும் அதற்குட்படுகிறார்கள். ஆனால், வீதம் குறைந்திருக்கலாம் வன்முறைப் பாங்கும் கூடிக் குறைந்திருக்கலாம்.

அடுத்தது, பரந்தாமனின் இன்னுமொரு கூற்றும் சற்றுச் சிந்திக்க வேண்டியது. தேசவிடுதலைக்கான தேர்விலேயே தமிழ்ப் பெண்கள் எதிர்நோக்கும் சில விசேட பிரச்சினைகளுக்கான தீர்வும் தங்கி உள்ளது என்று அவர் கூறுவது பல அனுமானங்களைத் தோற்றுவிக்கிறது. தமிழ்த் தேசம் விடுதலையாகி விட்டால் தமிழ் ஆணிணம் முழுவதும் தூய்மையானதாக ஆகிவிடுமா? ஆணாதிக்கம், ஆண் அதிகாரம், வல்லுறவுகள் பெண்களுக்கெதிரான வன்முறைகள் எல்லாமே அழிந்தொழிந்து போகுமா? விடுதலை பெற்ற நாடுகளில் இவை அழிந்து ஒழிந்து போய்விட்டனவா? தேசிய விடுதலை எல்லாவற்றிற்கும் நிரந்தரத் தீர்வைத் தந்துவிடாது. சாதிய வர்க்க பெண்நிலைவாதப் போராட்டங்கள் தொடரத் தான் போகின்றன. இதற்கு வரலாறு சாட்சி. "Persoanl is Political" என்று பெண்நிலைவாதிகள் தொடர்ந்து தங்களது இருப்பை அரசியல் மயமாக்கிப் போராடவே போகிறார்கள். அங்கு அவர்கள் மத்தியில் நிலவும் சாதிய வர்க்க வேறுபாடுகளைக் கடக்க வேண்டும் என்பது உண்மையே. இதுவே அவர்களது அரசிற்கொள்கை வடிவமாக இருக்கும்.

தேசிய ரீதியில் விடுதலை அடைந்த நாடு ஒன்று தற்செயலாக சோஷலிச நாடாக மாறினாற்கூட சாதித்துவம் மறைந்தாலும் கூட ஆணாதிக்க சோஷலிசவாதிகளுக்கு எதிராக பெண்ணிலைவாதிகளின் போராட்டம் சில காலங்களுக்குத் தொடரத்தான் செய்யும் என்பது திண்ணம்

பரந்தாமன் இந்த விவாதத்தை தொடக்கி வைத்ததற்கு அவருக்கு நன்றி கூற வேண்டும் இனத்துவம் அதனால், ஏற்படும் பிரிவினை வாதங்கள், ஜனநாயகக் கோட்பாடுகளுக்குள் விமோசனம் காணாத சிறுபான்மையினரின் (சாதி, சமய, இனவர்க்கப் பிரிவினர்) உரிமைகள், கோரிக்கைகள் போன்ற பல விடயங்களைத் தொட்டு நிற்கும் விவாதமே அவர் முன்வைத்த கருத்தின் அடிப்படை. அதேவேளை பெண்நிலைவாதங்களையும் அவற்றை முன்வைக்கும் பெண்ணிலைவாதிகளையும் கிண்டல் செய்தும் நக்கல் பரிபாஷையில் அவற்றை உதாசீனம் செய்து ஒடுக்கிவிடும் பலர் இருக்க இப்படியும் சிலர் இருக்கிறார்கள் என்பதை அறியும் பொழுது சந்தோஷமாக இருக்கிறது.

*செல்வி திருச்சந்திரன்*

## சங்கமனின்...

(11 ம் பக்கத் தொடர்ச்சி)

களைத் திறந்த மனதுடன் ஆராயும் பண்பு அல்ல. மாறாக, வெற்று மார்க்சிய எதிர்ப்பே என்பது தெளிவு!

பெண்ணியம் பற்றிப் பேசவருவார். அது பற்றிய மார்க்சியக் கோட்பாடு என்ன சொல்கிறது என்று அலசுவார். மார்க்சியம் பெண்ணியம் தொடர்பாகக் கொண்டுள்ள பலமான, பலவீனமான அம்சங்கள் அந்த அலசலில் வரும் என்று எதிர்பார்த்தால் அது எல்லாம் அங்கு கிடையாது. பதிலாக, மார்க்ஸ் தான் உலகத்திலேயே மிக மோசமாக தனது மனைவியைச் சுரண்டியவர் என்று கூறுவார். உலகத்திலுள்ள அனைத்து கணவன் மனைவிகளையும் பார்த்துவிட்டு வந்தவர் போல அவரது கூற்று அழுத்தம் திருத்தமாக இருக்கும். மார்க்ஸ் நாள் முழுவதும் மியூசியத்தில் இருந்து விட்டு மனைவியிடம் வருவதெல்லாம் தன் காம இச்சையைத் தீர்க்கவும், அவளை கர்ப்பவதியாக்கவும் தான் என்று கை கூசாமல் எழுதுவார். அவரது வைப்பாட்டி பற்றியும் பேசுவார். மார்க்சின் மனைவியை நேரில் கண்டு பேசி விட்டு வந்தவர் போல. இந்தத் தகவல் எவ்வளவுக்கு உண்மை என்று தெரியவில்லை. அப்படி உண்மையாகத் தான் இருந்தாலும் கூட மார்க்சிற்கும் ஜென்னிற்கும் இடையிலான உறவை இவ்வளவுக்கு கேவலமாக எழுதவேண்டிய தேவை என்ன வந்தது? மார்க்சின் குண இயல்புகள் பற்றிப் பேசுவதற்காகவா? இல்லை. ''அப்படிப்பட்டவரது தத்துவத்தில் பெண்களை ஆண்கள் சுரண்டுவது பற்றி எப்படி இருக்க முடியும்?''.என்று கேட்பதற்குத்தான் அவர் இதை எழுதுகிறார்.

மார்க்சியம் பெண் மீதான சுரண்டல் பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால், அதை அத் தத்துவத்தை வைத்தல்லவா சொல்ல வேண்டும்? அதை உருவாக்கியவரின் நடத்தையை வைத்தா சொல்வது? இது எந்த விதமான தர்க்கம்? ஒரு சராசரி மனிதனின் உணர்ச்சி வயப்பட்ட தர்க்கத்திற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்? ஆனாலும் பெண்ணிய சிந்தனைக்கான ஊற்று மூலம் மார்க்ஸிய நூல்களிலேயே இருந்தது என்பதை எந்தப் பெண்ணியவாதியும் மறுக்கமாட்டார். அவை முழுமையானதாக இன்றைய பெண்ணிய சிந்தனைத் தெளிவுடன் வெளிவரவில்லை என்பது தான் அவர்களது விமர்சனமாக உள்ளது. ஆயினும் சங்கமனுக்கு மட்டரகமான தர்க்கங்களே மார்க்சியத்தை நிராகரிக்கப் போதுமாகி விடுகிறது.

இதிலே வேடிக்கை என்னவென்றால், எழுதுவது போல வாழ வேண்டுமா என்ற ஒரு தர்க்கத்தை வேறு நடாத்தி அதில், அப்படி இல்லாமல் இருக்கும் நிலைமையும் நிலவுகிறது என்று வேறு இவர் ஒரு பத்தி எழுதிவைத்திருக்கிறார். (இதழ் 138) பாவம் சங்கமன் தனது கோட்பாடுகளை ஒழுங்காக வரித்துக் கொண்டு விமர்சனம் செய்யப் புகுவதற்குப் பதில் மார்க்சிய எதிர்ப்பு என்ற நோய் பிடித்து எடுத்ததற்கெல்லாம் அதைக் காரணம் காட்டிக் கொண்டு எழுதித் தள்ளுகிறார். இவை அவர் பேசவிரும்புகிற அவரது கருத்துக்களின் வலிமையை மிக மோசமாகப் பாதித்து விடுகின்றன.

அவரது மார்க்சியம் தொடர்பான விடயங்கள் குறித்ததே இக்குறிப்பு. அவரது பிறவிடயங்கள் குறித்தும் பேசப்படுவது நல்லது. அவர் கூறும் 'அக ஆழங்களுக்குள் செல்லல்', 'கட்டற்ற சுதந்திரம்', 'விடுபட்ட பார்வை' போன்றவையும் கேள்விக்குட்படுத்தப்பட வேண்டியவை. யாராவது செய்ய வேண்டும்!

# ஈழத்துத் தமிழ் இலக்கிய சூழலின் அவலமும், தேக்கமும்: யார் பொறுப்பு?

-ஏ.எல்.ஹசீன்

''தங்களுக்குள்ளேயே சுயவழிபாடு நடாத்திக் கொண்டு தங்கள் சிருஷ்டிகளை இலக்கிய ரீதியில் ஆராயாமல் வழிபாட்டு ரீதியில் நோக்குவது தங்களைச் சேராத எவரையும் ஏற்க மறுப்பது, தங்கள் கூட்டுக்கு வெளியே பார்க்க மறுத்து தீக்கோழிப் பார்வையை வளர்ப்பது போன்றவை எல்லாம் ஆரோக்கியமான இலக்கியச் சூழலுக் குரிய பண்புகளல்ல''

நம்மிடையே வாழ்ந்து மரணித்துப்போன உயிர்ப்பினிலும் மேலான எழுத்தாளன் மு. தளையசிங்கம் அவர்களால் 1963இல் நமது ஈழத்து தமிழ் இலக்கியத்தைப் பிடித்திருக்கும் வாத நோயை தெட்டத் தெளிவாகக் காட்ட சொல்லப்பட்ட வாக்குமூலம் தான் இது.

மு. தளையசிங்கம் மரணித்து இரண்டு தசாப்தங்கள் முடிவடைந்திருக்கும் இன்றைய சூழலில் மு.த.வின் அன்றைய மதிப்பீட்டை இன்று ஒப்பிடும்போது மாற்றமுற்றுள்ளதா என்ற வினாவை எழுப்பின் - அன்று மு.த. சொன்னது இன்றும் மாறாத நோயாக ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை கபளீகரம் செய்து அதன் உயிரை அழித்துக் கொண்டிருக்கிறது என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்ல முடியும்.

இன்றைய ஈழத்துத் தமிழ் இலக்கியம் - உலக தமிழ் இலக்கியத்துடன் ஒப்பிடும் போது எங்கே நிற்கிறது? அதனுடைய சிந்தனைகள், கருத்தியல் தளம், வெளிப்பாட்டு முறைகள், அவ் இலக்கியத்தின் தாக்கம், அது சொல்லும் செய்தி போன்ற அடிப்படை அம்சங்களுடன் நமது ஈழத்து தமிழ் இலக்கியத்தை ஒப்பீடு செய்யும் போது நமது முகத்தை நாமே பார்த்து வெட்கமும்,வேதனையும் அடைகிறோம். இந்நிலைமைக்கான காரணமென்ன எனச் பார்க்கும் போது நாம் சில உண்மைகளைப் பட்டவர்த்தமாகச் சொல்லித்தான் ஆகவேண்டியிருக்கிறது.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் 60களின் வளர்ச்சி, 70களின் வளர்ச்சி, 80களின் வளர்ச்சி என நாம் பட்டியலிடும் போது ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் 20ம் நூற்றாண்டைய வளர்ச்சி என எம்மில் சுயஜீரணம் செய்து கொண்டு நெஞ்சை நிமிர்த்தி சொல்ல என்னவிருக்கிறது?

''வரலாற்று வளர்ச்சி என்பது அஞ்சலோட்டம் போன்றது. ஒருவர் கொண்டு வரும் தடியை எடுத்துக் கொண்டு தான் மற்றவர் ஓட வேண்டும். முன்னவரின் வேகத்தைவிட பின்னவரின் வேகம் அதிகமாய் இருத்தல் வேண்டும். வெற்றியில் எல்லோருக்கும் பங்குண்டு. இறுதியில் ஓடியவர் நான் தான் ஓடி முடித்தேன் எனச் சொல்ல முடியாது!'' என்கிறார் நுஃமான். *(எம்.ஏ.நுஃமான், மூன்றாவது மனிதன் , நேர்காணல் செப்டம்பர், 1996)*

நுஃமானின் கருத்தை ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு எடுகோளாகக் கொண்டு மதிப்பீடு செய்யும்போது - ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்கு அடித்தளம் இட்டவர்கள் தொடக்கம் இன்று வரை பங்காற்றுபவர்கள் உட்பட அனைவரும் பங்களித்துள்ளனர் என்பது முதலில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும்! ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை நாங்கள் தான் வளர்த்தோம் என இங்கு யாரும் தனித்து உரிமை கொண்டாட முடியாது!

பழம்பண்டிதர்களின் கையிலிருந்த ஈழத்துத் தமிழ் இலக்கியம் உலக அரசியல் இலக்கிய வளர்ச்சி மாற்றங்களினால் புதியவர்களின் கரங்களுக்குச் சென்றது. இது வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒரு விளைவும் கூட, இந்நியதியின்படி 1960, 1980 களில் ஈழத்து தமிழ் இலக்கியம் புதுச் சிந்தனை, புதுத்தளங்களின் ஊடாகத் தன்னை அடையாளப் படுத்தி உலகத் தமிழ் பரப்பில் புதிய படைப்பாளிகளை அடையாளப்படுத்தியது.

60,70களிலும் கூட ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் ஜாம்பவான்களாகக் காட்டப்பட்ட முற்போக்கு அணிசார்ந்த படைப்பாளிகள் அதிக படைப்புக்களை எழுதித் தள்ளிய போதும், இக்காலங்களில் முற்போக்கு அணிசாராத படைப்பாளிகளும் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் தங்களது அடையாளங்களை வெகு தீர்க்கமாகவே பதித்துள்ளனர்.

ஆனால், ஈழத்தைப் பொறுத்தவரை பழம்பண்டிதர்களின் கைகளிலிருந்தும் அவர்களின் ஏகபோகத்திலிருந்தும் முற்போக்கு இலக்கியக்காரர்களால் மீட்டெடுக்கப்பட்ட ஈழத்துத் தமிழ் இலக்கியம் வரலாற்று அரசியல் சிந்தனை மாற்றத்திற்கேற்ப புதியவர்களின் கைகளில் இன்னும் கையளிக்கப்படவில்லை.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் ஏகபோக உரிமையாளர்கள் தாங்கள் தான் என மார்தட்டிக் கொண்டும், அரச அதிகாரத்தினதும், அரச வெகுஜன தொடர்பு சாதனங்களினதும் துணை கொண்டு, ஈழத்துத் தமிழ் இலக்கியத்தையும் இன்றைய அதன் வீச்சையும், தரிசனத்தையும் தமிழ் உலகுக்குக் காட்டுவதில் பெரும் இருட்டடிப்பைச் செய்து வருகின்றனர். இத்தவறான போக்கு நீண்ட காலமாய் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் முகத்தை அவலட்சணப்படுத்தி விட்டிருக்கிறது.

எம்.ஏ.நுஃமானின் கூற்றின்படி வரலாற்று வளர்ச்சியில் முற்போக்குக்காரர்கள் தாங்கள் கொண்டிருந்த வரலாற்றுப் பாத்திரத்தை அதன் பின் வந்த புதிய தலைமுறையினரிடம் கையளிக்க மறுத்து நிற்கின்றனர். அதிக பிரச்சாரங்களுடனும், தொடர்புசாதன ஆதிக்க வெளிப்பாடுகளினதும், அரசின் அதிகார பொருளாதார துணையுடனும் ஈழத்து தமிழ் இலக்கிய சிம்மாசனத்தில் ராஜாக்களாக கொலுவீற்றிருக்க இன்னும் இன்னும் அதிகப்பிரயத்தனம் எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களின் இச்செயற்பாடு ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இரண்டு தசாப்தங்களாக ஆதிக்கம் செலுத்தி, அண்ணாந்து பார்க்க வேண்டிய ஈழத்துத் தமிழ் இலக்கியத்தைக் குனிந்து பார்க்க வேண்டிய தவறான ஒரு சித்திரிப்பை உருவாக்கியுள்ளது என்பது இன்று ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை ஆய்வு செய்யும் ஒருவர் அறியக் கூடிய மிகப் பெரும் உண்மையாகும். இவ் உண்மைக்கு மிகக் கிட்டிய இரண்டு விடயங்கள் உதாரணங்களாகத் தரப்படுகிறது.

1. இலங்கை அரசின் தமிழ் சாகித்திய மண்டலப் பரிசுத் தேர்வு (1997)
2. இலங்கை கலைக் கழகத்தால் வெளியிடப் பட்டுள்ள 'சுதந்திர இலங்கையின் தமிழ்ச்சிறு கதைகள்'' என்ற நூல் (1998 பெப்ரவரி)

### *இலங்க்க அரசின் தமிழ் சாகித்திய மண்டலம்*

1963 ஒக்டோபர் மாதம் 5ம்திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் சாகித்திய விழாவில் அன்று பழம் பண்டிதர்களின் குட்டைக்குள் சுற்றி வந்த




இலங்கை கலைக்கழக வெளியீடு

தமிழ் சாகித்திய விருதுகளை வெளியில் கொண்டுவர முற்போக்கு இலக்கியக்காரர்களால் முன்வைக்கப்பட்ட எதிர்க்குரல்கள் - இன்று அதே முற்போக்குக் காரர்களால் உதாசீனப்படுத்தப்பட்டு அதே பழம் பண்டிதர்களின் ''ஏகபோக'' சொத்தாக மாறிவிட்டிருக்கிறது.

தமிழ் சாகித்திய விருதுக்கு தெரிவு செய்யப்படும் நூல்கள் மதிப்பீடுகளில் மேலோங்கி இருக்கும் குழு, கருத்து சார்ந்த பார்வைகளால் தரமான படைப்புகளைத் தெரிவு செய்வதை விடுத்து ''நம்மவருக்குப் பரிசு கொடுத்தல்'' என்ற ஏகபோகம் காரணமாய் சிறந்த பல படைப்புகளும் ஈழத்தில் தேர்வுக்குட்படாமல் உரிய இடம் கிடைக்காமல் இருட்டடிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

தமிழ் சாகித்திய நூல் தெரிவுக் குழுவில் சிறந்த படைப்பிலக்கியவாதிகள், திறனாய்வாளர்கள் புறக்கணிக்கப்பட்டு வெறும் நட்பின் அடிப்படையில் இலக்கிய ஆழமில்லாத பெயர்ப் பட்டியல்களால் சாகித்திய விருதுகள் தீர்மானிக்கப்படுகிறது.

1997ம் ஆண்டின் தமிழ் சாகித்திய நூல் மதிப்பீட்டுக் குழுவில் இடம்பெற்றுள்ளோர் பட்டியல் மேல் கூறப்பட்ட என் அனுமானத்திற்கு ஓர் உதாரணமாகக் கொள்ளப்படலாம்.

#### *சிறுகதை*

டொமினிக் ஜீவா

மேமன் கவி

தெளிவத்தை ஜோசப்

#### *நாவல்*

தில்லை நடராஜா

சிவகுருநாதன்

பேராசிரியர் சந்திரசேகரம்

சோமகாந்தன்

#### *கவிதை*

வசந்தாவைத்தியநாதன்*(சமய சொற்பொழிவாளர்)*

அல் - அஷூமத்

புலவர் கனகரத்தினம் *(மொழிபெயர்ப்பாளர்)*

யதார்த்தத்தில் இப்பெயர்ப் பட்டியலைப் பார்க்கும் போது இன்றைய எமது அவலம் தெட்டத் தெளிவாக எம் கண்முன் வந்து நிற்கிறது. சமகால ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை மதிப்பீடு செய்து அத்துறைகள் தொடர்பாக சிறந்த படைப்புகளை தேர்வுக்குட்படுத்தி அவற்றை தேர்ந்தெடுக்கக் கூடிய தகுதி, ஆற்றல் மேற்சொன்ன பட்டியலில் எத்தனை பேருக்கு உண்டு என்பதை நான் விவரிக்க வேண்டியதில்லை.

இன்றைய எமது நவீன தமிழ் சிறுகதை, நாவல், கவிதை போன்றவற்றுடன் மேற்சொன்ன பட்டியல்களில் உள்ளோரில் பெரும்பாலானோர் எந்தளவிற்கு பரிச்சயத்தினைக் கொண்டிருக்கிறார்கள்? இவர்களின் பார்வை என்ன? இவர்களின் படைப்பு முயற்சிகள் இன்றைய நவீன இலக்கிய சிந்தனைகள் வெளிப்பாடுகளுடன் எங்கே நிற்கிறது? என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

மேமன்கவி சிறுகதையைத் தெரிவுசெய்வதும், பேராசிரியர் சந்திரசேகரம் நாவலைத் தெரிவு செய்வதும், வசந்தா வைத்தியநாதன் கவிதையைத் தெரிவு செய்வதும் ஒரு ஆரோக்கியமான முன்மாதிரியா? இது எமது இன்றைய ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை எங்கே கொண்டு நிறுத்தும்? இக்கேள்விகள் எழுப்பப்பட்டு தீவிரமாக எமது இலக்கியம் தொடர்பான தரிசனங்களுக்காக நாம் உழைக்க வேண்டியவர்களாயுள்ளோம்!

டொமினிக் ஜீவா போன்றவர்கள் என்ன நினைத்துக் கொண்டு வார்த்தை ஜம்பம் காட்டுகிறார்கள். தமிழ் சாகித்திய குழு என்ன இவர்களின் ஏகபோகமா? இதில் இன்னுமொரு முக்கிய அம்சம், ஏற்கெனவே தேர்வுக்குழுவில் பரிசீலனைக்குள்ளாக்கப்படும் நூல்களின் வெளியீட்டாளர்களோ படைப்பாளர்களோ தேர்வுக் குழுவில் இடம்பெற முடியாது! (இது சாதாரமான உண்மையும் கூட) டொமினிக் ஜீவாவின் 5 தொகுப்புகளும் 1997ம் ஆண்டின் தெரிவுக்கு வந்துள்ளது. உதாரணமாக ஜீவாவின் படைப்பான ''டொமினிக் ஜீவாவின் முன்னுரைகள்'', ''டொமினிக் ஜீவாவின் சிறுகதைகள்.'' விதிகளையும், நியதிகளையும், தீர்ப்புக்களையும், வரலாற்றில் தங்களுக்குச் சாதகமாக எழுதிக் கொண்டிருக்க நாம் இவர்களைத் தொடர்ந்தும் அனுமதித்தால் நமது இலக்கியத்தின் கதி என்னவாவது? இந்த அடிப்படை விதிகளைக் கூட உதாசீனம் செய்து ஜீவா எப்படி அங்கீகாரம் பற்றிப் பேசமுடியும்? நாம் 21ம் நூற்றாண்டை நோக்கி எமது இலக்கியத்தை வளர்த்தெடுக்க வேண்டாமா?

தமிழ் சாகித்திய மண்டல ஏனைய துறைகளான மொழிபெயர்ப்பு, நாடகம், இலக்கியம், சிறுவர் பிற துறைகளுக்கான தேர்வுக்குழுவும் மேற்சொன்னதைவிட ஒன்றும் குறைந்ததல்ல. நாங்கள் இப்படைப்புக்களை தெரிவு செய்வதற்கு தகுதியானவர்கள் இல்லையென பேராசிரியர் சந்திரசேகரம் தொடக்கம் அனைவரும் தங்கள் மனச்சாட்சியின்படி ஒதுங்கிக் கொள்ள வேண்டும்.

டொமினிக் ஜீவா தொடர்ந்தும் இத்தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்பாரேயானால் சட்டரீதியாக 1997ம் ஆண்டின் தமிழ் சாகித்திய தேர்வு செல்லுபடியற்றதென நீதிமன்றம் செல்ல நாம் ஆயத்தமாய் உள்ளோம். 1963களில் கூழ்முட்டை அடித்து எதிர்ப்புக்குரல் காட்டியவர்களுக்கு உண்மைகளையும், நியதிகளையும் புரியவைக்க நீதிமன்றம் சென்று நியாயம் கேட்பது இன்று உடனடியாகச் செய்யப்பட வேண்டிய தேவைகளில் ஒன்றாகவுள்ளது.

### *சுதந்திர இலங்கையின் தமிழ் சிறுகதைகள் தொகுதி (1998)*

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நாம் நிற்கிறோம். ஈழத்துத் தமிழ் சிறுகதைகள் தொடர்பான ஒரு காத்திரமான தெரிவு நமக்கு அவசியமாகிறது. ஆனால், இத்தெரிவின் ஊடாக காட்டப்படும் எமது ஈழத்துத் தமிழ் இலக்கிய முன்னுதாரணங்கள் துலாம்பரமாக எமது ஆரம்பம் தொட்டு பல்வேறு காலகட்டங்களில் ஏற்பட்ட வளர்ச்சி, மாற்றம், தளங்கள் தொடர்பான செயன்முறையான வரலாற்று வளர்ச்சிக்கு ஆதாரமாக செய்யப்பட்ட வேண்டிய ஒரு பணி.

நம்மைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கும் ''குருட்டுப் பார்வைகள்'' இப்பணியைக் காத்திரமாகச் செய்யாது தடுத்து விட்டிருக்கிறது என்பதற்கு ''சுதந்திர இலங்கையின் சிறுகதை'' என்ற தொகுதி உதாரணமாகும். இத்தொகுதியில் 50 படைப்பாளிகளின் சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. 1932 தொடக்கம் 1955 வரை ஈழத்துத் தமிழ் சிறுகதைகளுக்கு பங்களிப்பாற்றிய இலங்கையர்கோன், சம்பந்தன், வைத்தியலிங்கம், சிவபாதசுந்தரம் போன்ற ஈழத்து தமிழ் சிறுகதைகளுக்கான அடையாளமும், தொடக்கமும் தந்தவர்களின் படைப்புகள் ஏன் இத் தொகுதியில் உள்ளடக்கப்படவில்லை. ஜீவாவின் ''முற்றவெளி'' என்ற 1960களில் பிரசுரிக்கப்பட்ட கதையே இத்தொகுப்பில் முதல் கதையாகச் சேர்க்கப் பட்டுள்ளது.

இத்தொகுதிக்கான சிறுகதைகளை தெரிவு செய்த தேர்வுக்குழுவில் முன்னாள் தினகரன் ஆசிரியர் ஆர். சிவகுருநாதன், டொமினிக் ஜீவா, தெளிவத்தை ஜோசப், திக்வெல்லை கமால், மேமன் கவி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

கலைக்கழகக் குழுவிலோ ஆர். சிவகுருநாதன், டொமினிக் ஜீவா, பா.வயிரவாதன், எம்.ஏ. நுஃமான், கே.எஸ். சோமசுந்தரம், எம்.ரவீந்திரன், சற்சொரூபவதிநாதன், வசந்தா வைத்தியநாதன், க.நாகேஸ்வரன், என்.கே.யோகராஜா, வித்துவான் க.ந.வேலன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இதில் வித்துவான் க.ந.வேலன் ராஜினாமாச் செய்ததால் அவ்விடத்திற்கு சோமகாந்தன் நியமிக்கப் பட்டதாகவும் அறிய முடிகிறது.

* எந்த அடிப்படையில் இக் கதைகள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது?
* இச்சிறுகதைத் தொகுதிப்பினூடாக அடையாளம் காட்ட விரும்பிய ஈழத்து இலக்கியத்தின் தன்மைகள் என்ன? (வெறும் பெயர்ப் பட்டிலா? அல்லது சுதந்திரத்திற்குப் பின்னரான ஈழத்து தமிழ் சிறுகதைகளின் வளர்ச்சியா?
* இலங்கையர்கோன், சம்பந்தன், வைத்தியலிங்கம், சிவபாதசுந்தரம் தொடக்கம் யேசுராசா, உமா வரதராஜன், கவிதா, சண்முகம் சிவலிங்கம், சட்டநாதன், எம்.எல்.எம்.மன்சூர், அ.ரவி, ரஞ்சகுமார், ஒட்டமாவடி அறபாத் போன்ற முக்கிய தளங்களில் உரத்துப் பேசப்பட்ட ஈழத்துத் தமிழ் சிறுகதைகளின் அடையாளங்கள் ஏன் புறக்கணிக்கப் பட்டன?

-ப16

கடந்து செல்லும் இந்த நிமிடம் வரை ஒன்றாய் ஒட்டிக் கொண்டது, வெட்டிக் கொண்டு பிரிந்தது. நிறைந்த முரண்பாடு களுடன் மீண்டுமொரு முறையேனும் சந்தித்துக் கொள்ளாதபடி வெட்டிக் கொண்டது. ஆனாலும் எதன் எதன் பெயராலோ ஒன்றி நிற்கும் அல்லது வெட்டி நிற்பதற்க்குள் தான்...

சந்திக்கலாம், கண்களிலிருந்து புறப்படும் ஒளியின் வீச்சில் தீப்பிளம்பு கிளர்ந்தெழுந்து அனைத்தும் தூள்தூளாக சிதறடிக்கப்படும். சமநிலை குலைந்து இயற்கை அனைத்தும் வெட்கித் தலை குனியும். ஆனாலும் பின்னர் சமநிலையொன்று உருவாகும். தப்பிப் பிழைத்தவையும், சமரசம் செய்தவையும் மிதக்கும். காற்றின் தென்றலை, உஸ்ணத்தை இரசிக்கும்.

அருவருப்பும், பீதியும், பயமும், குழப்பமும் ஏற்படுத்தியவையும் மிதந்து கொண்டிருந்தது. இயற்கை கூட எவ்வளவு கொடியது?

பாவம்பழி சுமத்தப்பட்டு தூள், தூளாக சிதறடிக்கப்பட்டவை நம்பிக்கைகளைக் கட்டிக்கொள்ளப் போராடிக் கொண்டிருந்தன. வீணாக ஏமாந்து கொண்டதை எண்ணி தனக்குள்ளே செத்துக் கொண்டிருந்தது.

நினைத்துப் பார்க்கவே முடியாதபடி! நடந்து முடிந்த, அழிந்து போனதைப் போல பன்மடங்கு நடந்திருக்கும்! தலையோடு போக வேண்டியது தலைமயிரோடு போனதையிட்டு அமைதியடைவதா? நினைத்த மாத்திரத்தி லேயே சீவன் போய் வரும், கட்டையில் வேகும் காலம் வரை!

காலமும், காற்றும் பொறுத்துக் கொண்டி ருக்கவில்லை. அசைந்தன. அசைந்தசைந்து அசையத் தொடங்கின. அசைத்தன.

ஆனால், நியாயமற்ற நியாயம், பிரளயத்தை உண்டாக்கி மிதந்து கொண்டிருந்தது, வெட்கமில்லாமல். எவ்வாறு தான் முடிந்ததோ தெரியவில்லை! சரிசரியெனச் சமாதானம் சொல்லிவிடக்கூடியதாகவா அந்த நாய் நடந்தது!

'அந்த நாயக் கண்டனான்'

'எங்க'

'பள்ளிக் கூடத்துக்குப் போகேக்க'

'உன்னக் காணேல்லையே'

'கண்டிருக்கும்'

'கழுத்தில 'செயின்' இருந்ததோ'

'இல்லாம'

'வெள்ளையா'

'நான் பாக்கேக்க வெள்ளையாத் தான் இருந்தது'

'அது மணிச் செயின் தான்'

'கொஞ்சம் வடிவாப் பாத்தா, அது பூசியிருக்கும் சாயம் தெரியும்'

'என்னெண்டு தான் வெளுக்காமல் இருக்கோ'

'ஏன் வெளுக்கேல்ல? எங்களிட்ட வெளுத்துப் போச்சே'

'வாய வச்ச பிறகு தானேடி தெரிஞ்சுது விசர் நாயெண்டு'

'ஆள் தப்பினதே பெரிய காரியம்'

'உதுக்குத் தான் சொல்லுறவ 'நாயக் குளிப்பாட்டி நடுவீட்டுக்க வைக்கக் கூடா தென்று'

'நாயே... விசரே! நரகல்'

'சனியன்ர கதய விடு! வயித்தப் பிரட்டுது'

ஏழாவது கிரகத்திலிருந்து அதொன்றும் தோன்றவில்லை. பொக்குள் கொடியறுத்து நிலத்தில் விழுந்து விளைந்தது தான்.

சமதர்மத்தின் நாயகன், தன் சக்தியை இயற்கையின் ஒவ்வொரு படைப்புக்களுக்கும் சமமாகப் பகிர்ந்தளித்துக் கொண்டிருந்தான் சூரியன்.

புழுதியும், காற்றும் கைகோர்த்துக் கொண்டு சுற்றிச் சுற்றி உலா வந்தது. எங்கிருந்தோ 'சுப்பசொனிக்' போல இறக்கை விரித்து நிலத்தை நோக்கி வந்த செம்பகம் நெளிந்து கொண்டிருந்த மசுக்குட்டியை கோதிக் கொண்டு வேலியிலிருந்து காலுக்கிடையில் சொருகி சொண்டால் இரு கூறாகக் கிழித்து 'லபக்' கென விழுங்கிக் கொண்டது.


ஏன் அப்படி?

ஓ... கொன்றால் பாவம் திண்டால் போச்சோ!

எல்லோருடைய குழந்தைகளும், கிணற்றுக் கட்டில தான் கிடத்திக் கிடக்கோ தெரியவில்லை. ஆத்துப் பறந்து கொண்டிருந்தார்கள்.

ஏன் ஓடுகிறார்கள்? இவர்களை மிஞ்சிய சக்தி ஆட்டிப் படைக்கிறதா இருக்குமோ? அவர்களை மீறிய சக்தி எவ்வாறு அவர்களை ஆட்டிப்படைக்க முடியும்? ஆனாலும் ஆட்டிப் படைக்கப்பட்டனர்.

கடல், கரையை மீறி எல்லாவற்றையும் விழுங்கிக் கொண்டிருப்பதாக வந்த செய்தியைக் கேட்டு அலறிப் பிடைத்துக் கொண்டு மேட்டுப்பக்கமாக ஓடினார்கள். மேட்டுப்பக்கம் காடாக இருந்தது.



'வானுக்கும் மண்ணுக்கும் அணை எழுப்புவதாக, செம்மனச் செல்விக்கு கயிறு விட்ட எம்பெருமான் எங்க?'

'ஆரக் கேக்கிறா?'

'பிரம்பு கொண்டடிக்க ஐஞ்சாறு குறுமன்னரிருந்தும்! ... ம்... அன்றொரு நாள் சுட்டவெடி, சுட்டதென...'

'சடப் யுவ டேட்டி மவுத்! ஃலோமீ'

'இல்லயண்ண, சும்மாயிருந்தவன ஏனண்ண சுட...!'

'டே'

சபதத்தை விட்டுக் கொடுக்கவில்லை. காட்டுக்குள்ளாவது அது தொடரும். அவ் அணைகட்டலுக்காக ஒவ்வொரு அணிலும் மயிரானது. ஒவ்வொரு புனிலும் புல்லானது.

பாம்புகள் தான் செட்டை கழட்டும் என்று அறிந்திருந்தார்கள். இப்போது தான் இவர்களும் கழற்றுகிறார்கள் தமது ஆத்மாவுடன் ஒட்டிக் கொண்ட தசைகளை யும், என்புகளையும். கழற்றியிருக்கிறார்கள். பீதியடைந்து கண்கள் கழன்று நின்றவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

'உலகத்தில் இதொன்றும் நடக்காமலில்லை. இங்கே முதன் முதலாக நடந்திருப்பதால் பயந்திருக்கிறார்கள். போகப் போக புரியும்'

போகப் போகவென்ன? அன்றே புரிந்தது. சிலர் புரிந்தனர். பலர் புரிய மறுத்தனர். கைமேல் பலனை ஏற்க வேண்டியதாயிற்று.

வேதனையின் கனல்கள் கண்களால் கழன்று கொண்டிருந்தன. காட்டின் பெரிய மரத்தின் கீழ் அவர்கள் தஞ்சம் கொண்டார்கள்.

பறக்க வேண்டிய அவசரத்தில் கை, கால்களில் தட்டுப்பட்டதைக் கொத்திக் கொண்டு பறந்தது தானே!

தாகமும், பசியும் யார் வல்லவர் என்று ஓடிய ஒட்டத்தில் கொத்திக் கொண்டு வந்தது அனைத்தும் தீர்ந்தது. ஓடிய ஓட்டமும் ஓய்ந்தபாடில்லை.

பால் போன்ற நிலவு. அடர்ந்த காட்டில் மரம், செடி கொடிகளோடு நிலவொளி விடை பெற்றுக் கொண்டதால் 'கும்' இருட்டாக மண் பரப்பு விரிந்திருந்தது.

மரத்தின் கீழ் எண்ணெயின்றி கழிவிரக்கத்தில் திரி எரிந்துகொண்டிருந்தது. அவ்வொளியின் நம்பிக்கையில் நீர் தேடிப் போனார்கள்.

கால்கள் புதைந்தன. சலசலத்தது. நீரும் மண்ணும் இரண்டறக் கலந்திருந்தன. சேலைத் தலைப்பை அதன் மேல் வைத்து அமத்திய போது நீர் மெல்லக் கசிந்தது. 'நா' வால் நக்கிக் குடித்தார்கள். பலூன் மாதிரி வயிறு வீங்கியது.

மீண்டும் மரத்தடியில் கால்களையும், கைகளையும் எறிந்து விட்டுத் தூங்கினார்கள்.

வெக்கித்த பெருமூச்சு நெஞ்சடைத்தது. கண்களிலிருந்து கசிந்த கண்ணீர் கன்னங்களில் தீக் கோடிட்டது.

பசிமெல்ல முனகியது. கண்களை நித்திரை விட்டு எழுப்பியது. பசி அடங்கப் போவ தில்லை என்று அடம்பிடித்தது. மூன்று நாட்கள் சமரசம் செய்ய முடிந்த பசி இன்று இரண்டில் ஒன்று என்று அடம்பிடித்தது.

மரத்தடியிலிருந்த சருகுகள் தூள்களாகின. அதைக் கைகளால் ஒன்று சேர்த்தார்கள். மிஞ்சியிருந்த சீனியைக் கலந்து கொஞ்சத் தண்ணீரும் விட்டுக் கல்க்கினார்கள். அழகான கழியாக அது திரண்டது. அதை வாயில் போட்டு மென்ற போது தான் அவலம் உச்சிக்கேறியது.

பசியை அடக்கிவிடும் தர்மத்தில், அதர்மத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

கசிந்து கொண்டிருந்த வெளிச்சத்திலிருந்து எதிரொலித்தன இன்னும் இரண்டு வட்ட வடிவமான வெளிச்சம்.

'ஐயோ நரி'

'எங்க'

'அங்க'

அலறி அடித்ததில் அது எழுந்து நின்று வாலை ஆட்டியது.

'அது நரியில்ல நாய்'

'காட்டுக்க எங்க நாய், அது நரி'

'நாய்தான் வாலை ஆட்டுது'

'நரிக்கும் வால் இருக்கு'

'சரியாக மெலிஞ்சு போய்...'

'நாங்கள் சாப்பிட்டதில கொஞ்சம் வைப்பம் பாவம்'

வழித்துத் துடைத்து உருட்டி, ஒரு திரளையை வைத்தார்கள். ஒரு கவ்வலில் எந்தவிதமான அவலமுமின்றி தொண்டைக்குள்ளால் வயிற்றுக்குள் இறங்கியது. இவர்கள் வியந்து நின்றார்கள்.

தன் நன்றிக்காக வாலை ஆட்டி, ஆட்டி சுற்றிச் சுற்றி நடனமாடியது.

ஆச்சரியத்தால் இவர்களின் கண்கள் விரிந்தன. மெல்ல மகிழ்ச்சி எட்டிப் பார்த்தது.

'நாய் தான்'

இரண்டு கால்களில் எழுந்து நின்றது. முன்னம் நெற்றியில் விழுந்திருந்த தலைமயிரை சரிசெய்தது. சுதாகரித்துக் கொண்டு நடனமாடியது.

வானத்தை அண்ணாந்து ஊளையிடத் தொடங்கியது.

'நரி தான்'

'நாயும் ஊளையிடும்'

'சும்மா இருங்கோ பாப்பம். அது நரியுமில்ல. நாயுமில்ல அது நல்லாயிருக்கு'

கவிதை நயமும் சந்த ஓசையும் மிக அழகாக இருந்தது. அதன் கதையில் ஒரு கவர்ச்சி இருந்தது. அதன் இலட்சியக் கோட்பாடு இவர்களுக்கு அபூர்வமாகத் தெரிந்தது. கண்களின் காந்தம் கட்டிப்போட்டு விடக்கூடியது. மெலிதான அதன் உடலைப் பார்க்க மேலும் மேலும் அதன் மேல் இரக்கம் பிறந்தது. அதை நினைத்து நினைத்து அயர்ந்து போனார்கள்.

இனிமையான காலைக்குயிலின் கூவலில் கண்கள் நித்திரை விட்டு, எழுந்தன. இனிமையான குயிலின் பாட்டும், குருவிகளின் இன்னிசையும் தேனாமிர்தமாக இருந்தது. மெய்மறந்து பொய்க்கும் துன்பத்திலிருந்து கற்பனையான விடுதலை அரங்கு.

ஆனால், பசி நிஜ அரங்குக்கு இழுத்து வந்தது. ஒருவர் மீது ஒருவருக்கு பொறாமை பிறந்தது. வேட்டைப்பற்கள் துருதுருத்தன. கன்னங்க ளின் உட்புறத்தில் உமிழ்நீர் சுரந்தது. எதிர்படும் ஒவ்வொன்றும் இரையாகும் மனவேட்கை. நெருக்குண்ட மனங்கள் நொறுக்குண்டு கிடந்தன.

காட்டின் பற்றைக்குள்ளிருந்து அது வெளிப்பட்டது. வாயில் முயலுடன் அதைக் கீழேபோட்டு பின்நோக்கி நகர்ந்தது. அதன் வாயில் இரத்தக் கறைகள் எதுவுமில்லை. ஆனால், மோவாய் ஈரமாக இருந்தது.

அதுவா இப்ப முக்கியம். பசியாற முயல் கிடைத்ததே பெரும் காரியம்.

கறிசமைத்து நிறைவாக, இனிமையாக உண்டார்கள். பொழுது கழிய குயிலின் பாடலும், குருவிகளின் இன்னிசையும் இருந்தன. மிஞ்சிப் போனால் அதன் நடனமிருந்தது. கவிதை, கதை, இலட்சியம், கோட்பாடு என்று ஏராளமிருந்தது.

காலம் கரைந்தொழுக ...

அதுவும் அவர்களில் ஒன்றாகிவிட்டது.

உரிமையோடு பழகியது.

→

துடிப்புள்ள தாய் அதன் பரிவும், அவர்களின் அன்பும்.

சலசலத்தோடும் நீளமான நீல நதியை அது - அவர்களுக்குக் காட்டிற்று.

'தாங்ஸ்'

'தாங்ஸ் எ லொட்'

தனக்குள் சிரித்தபடி, அலட்சியமாக விலகிச் சென்றது.

கண்களை அவர்களால் நம்பமுடியவில்லை. ஊதல் காற்று ஊத சலசலவென நதி நடைபயின்றது. கண்கள் குளிர்ச்சியால் சிரித்து மகிழ்ந்தன. மீன்கள் கரையொதுங்கி 'குசலம்' விசாரித்தன. கண்கள் பனித்தன.

மனவேட்கையையும், தேகத்தின் சூட்டையும் தணித்துக்கொள்வதற்காக அவர்கள் நதியில் இறங்கத் துடித்தார்கள். மீன்களைப் போல பரிநிர்வாணமாய்! சுற்றும் முற்றும் பார்த்த போது அது அங்கு நிற்கவில்லை. ஏகப்பட்ட சந்தோசம்.

அது தன் நாகரிகத்தைக் காட்டியதில் இவர்களுக்கு அதன் மேல் ஏகப்பட்ட மரியாதை பிறந்தது.


நீச்சல் கற்றுக் கொடுத்தன மீன்கள். மூச்சையும் அடக்கப் பழகிக் கொண்டார்கள்.

மீனைத் தூக்கி தரையில் போட்டார்கள். துடிதுடித்து இறக்கும் அழகை ரசித்தார்கள். வெந்தணலில் இட்டார்கள். அதன் கலையை மெச்சினார்கள். சிலர் தூற்றினார்கள். பின்னர் தூக்கி நாவிலிட்டார்கள். அதன் ருசி, ஆகா ஓகோ...

பெரும்பாலானவர்கள் மௌனமாக இருந்தார்கள். ஒரு சிலர் மட்டும் தம் எதிர்ப்பைக் காட்டினார்கள். துடிதுடித்த மீனை மீண்டும் நதிக்குள் அனுப்பியவர்களை நதியினுள் தூக்கி அமுக்கிய போது துடிதுடித்து இறந்தவர்களை அடித்துச் சென்றது நதி.

மீண்டும் தோற்றுப் போனார்கள். கண்களிடம், கண்ணுக்கெட்டிய தொலைவு மட்டும் பூக்காடு. சுவாசத்தை நிறைத்த சுகந்தம், இனிமையாகப் பிறந்தது.

வானத்தில் வட்டமிட்டு சிறகடித்துப் பறந்தன குருவிகள். கேட்பாரின்றி கனிகள் கனிந்தன. பூக்களிலிருந்து தேன் வடிந்து கொண்டிருந்தது. தேனுண்ட நிறைவில் வண்ணாத்துப்பூச்சிகள் இறக்கை விரித்து அழகு காட்டியன. அவ்வழகில் மயங்கி அதனைச் சிறைப்பிடித்து வயிற்றில் நூலைக்கட்டி 'விடுதலை' செய்தார்கள். அது மிகவும் அவதிப்பட்டுப் பறந்து போனது. அவ்வழகை வைத்துக்




கவிதை பாடினார்கள். கதை சொன்னார்கள். ஆய்வு செய்தார்கள். பொற்கிளிப் பரிசுக்காக தங்களைச் சிபார்சு செய்தார்கள்.

இதயம் கனத்தவர்கள் மட்டும் முணுமுணுத்தார்கள். ஒரு சிலர் தம்மை ஒழித்து வைத்துவிட்டுப் புனல் வாதம் செய்தார்கள்.

முட்கள் நிறைந்த ஓரத்தில் முணுமுணுத்தவர்களையும், இட்டுத் தீ வைத்தனர். முட்கள் கருகி எரிந்தன. சுவாசத்தை திக்குமுக்காடச் செய்த சுகந்தம் அவர்களைக் கிறுங்க வைத்தது.

இவர்களுக்கும் அதுக்கும் இவை பற்றிய வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. ஆழங்களை நோக்கிச் செல்லும் அதன் கண்களை ஆவலோடும், அதியமாகவும் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அது இவர்களுக்கு மேலும் மேலும் மனவலைச்சலைக் கூட்டிற்று.

இலட்சியங்களையும், கோட்பாடுகளையும் நாசூக்காக அது இவர்கள் முன் வைக்கும். இவர்கள் தங்கள் அனுபவத்தையும் இழந்தவற்றையும், இழந்தவர்களையும் சொல்லி அழுதார்கள்.

துயரம் தோய்ந்து தலையைத் தொங்கப் போட்டப்படி அது கேட்டுக் கொண்டிருக்கும். நுனி மூக்கின் கறுப்பு விரிந்து, சுருங்கும். மோப்பம் பிடிப்பதாக இருக்கும்.

அதுவும் துயரம் நிறைந்த கதைகளைச் சொல்லிக் கொள்ளும். ஒருவர் பால் ஒருவருக்கு ஆறுதல் பிறந்தது. அதன் தலையைத் தடவிக் கொடுத்தார்கள். வாலைக்கீழே போட்டுவிட்டு பௌவ்வியமாக அது நிற்கும்.

தருணம் பார்த்திருந்து அதுவும் தடவிக் கொடுக்கும். காலின் நகங்கள் பட்டுவிடாதபடி மடக்கி வைத்துக் கொண்டு அது தடவும். கிடைக்கும் தருணமெல்லாம் அது முந்திக் கொள்ளும். தருணங்களை ஏற்படுத்திக் கொள்ளவும் அது தயங்கியதில்லை.

அவர்கள் உசாரானார்களோ இல்லையோ அதற்குரிய தருணம் தவறித்தன்னும் ஏற்படாமல் போயிற்று. அவர்களுக்கிடையேயான இடைவெளி விடை பெற்ற வேகத்திலேயே திரும்பியது.

ஆயிரத்தொன்பது காரணமிருக்கலாம். ஆனாலும் வழமை போலவே அவர்களை மலர்வனத்திற்கும், நீல நிற நதிக்கரைக்கும் அழைத்துச் சென்றது.

நீறுபூத்த வெண்மையோடு அவர்களோடு அது. இவர்கள் அதனோடு உலாவந்தனர்.

ஒருநாள் அதற்கு ஊறலெடுத்தது.

தென்றலின் உஸ்ணத்தில் தென்றல் கைகளை விரித்து மேகங்களை அழைத்து விளையாடியது. மகிழ்ந்து குதூகலித்தது.

மெல்ல அருகில் சென்றது. 'எங்களது தானே' என்று அதன் மேல் ஏறிப் பாய்ந்தும் விளையாடிக் கொண்டிருந்தது தென்றல்.

அதற்கு மனம் உதறலெடுத்தது. அதற்குள் உறங்கிய 'அது', மெல்லத் தலையைச் சிலிர்த்து எழுந்தது. கொள்கை கோட்பாடு எல்லாவற்றையும் போட்டடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தது அது.

இது
முடிய வேண்டிய
கதை
ஆனால்...
?

தருணம் இதுவென அதற்கு எச்சிலூறியது. நாவை வெளித்தள்ளி வாய் வைத்தது.

திடுக்குற்றது தென்றல்! நதி! பூக்காடு! பயத்தில் விழிகள் உதறலெடுத்தன.

எல்லாம் இருண்டது. தலை சுற்றியது. அது எப்படி இப்படிச் செய்யும்? அதன் மேல் வைத்த நம்பிக்கையெல்லாம் வியர்த்து விறுவித்து நெறுக்குண்டு தூள்தூளாகச் சிதறியது.

வாலைக் கவட்டுக்குள் வைத்துக் கொண்டு ஓடியது, ஓடியது தான்.

'சனியன் போகுது'

'இதாலயோ'

'நல்லாத் தான் இதால போகும்'

'வெட்கமில்லை'

'வெட்கமிருந்தால் அதேன் இப்பிடிச் செய்யுது. சகோதரம் மாதிரிப் பழகிப் போட்டு'

'வால் நிமிந்திட்டுதே'

'சீ... அதுக்கென்ன அது நிமிரும்'

'சனியனுகள் ஏன் தான் உயிரோடு இருக்குதுகளோ தெரியேல்ல!'

இது முடிய வேண்டிய கதை. ஆனால், முடிக்க முடியாத கதை. வாழ்வின் எங்கோவொரு மூலையில் எப்பவோ ஒரு நாள் அதன் ரணங்கள் நிரம்பிய நிழலில் இருந்து சீழ் வடியும்.

மனம் அமைதிகொள்ளும்படியாக எதையும் செய்துவிட முடியாத பொறி. காலைச் சுற்றி சுற்றி வந்ததே!

அது பொறி பின்னிய விதம் அப்படி!

ஓரடியில கொன்று போட்டிருக்கலாம். பாவம் தப்பிப் போகட்டும்.

'சனியன் இன்னும் எத்தின பேரில வாய் வைக்கப் போகுதோ'

மனவுலைச்சலின் ஆட்டம் பழகிப் போனது. அவ்வாட்டம் தடைப்பட்டால் மனம் நெக்கித் தாண்டு போகும். கதை முடியும்.

கதையை முடிக்கும் தறுவாய். சந்திக்கவே கூடாது என்ற மனத்துடிப்பை சந்திக்க வேண்டும் என்ற மனத்துடிப்பு வென்றது. மரத்தடியைத் தேடிப் போனேன்.

காலை நீட்டிக் கண்களை மூடித் தென்றலை ரசித்துக் கொண்டிருந்தாள்.

என் நாற்றமோ என்னவோ அவளின் ரசனையை முற்றாகவே அழித்து விட்டது. விழித்து கால்களை உள்ளிழுத்து மறைத்துக் கொள்ளப் போராடினாள். அருகே இடமிருந்த போதும் எதிரே உட்காரச் செய்தாள்.

'நன்றி' சொல்ல என்னிடம் நா இல்லை.

'என்ன' என்று கேட்கக் கூட அவளுக்கு மனம் இல்லை.

காலில் விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும்.

கேட்டுமென்ன பட்ட அவமானம் சரியாகிவிடுமா? அல்லது நினைவழிந்து தான் போகுமா?

அவளுடைய விழிகளும் மனமும் தணலில் விழுந்த புழுவின் கதியெனத் துவண்டெழுந்தன.

என் இறுதி ஆசை நிறைவேறியது. விடை பெறாமல் 'இன்னும் ஒரு நிமிடம் மட்டும் இரன்' என இரு அந்தலையில் இரு உயிர்கள் முளைத்தன. உச்சியிலிருந்த அவதி மேலும் உச்சிக்கேறிப் பிய்த்தெறிந்தது.

'அம்மா'

தென்றலோடு குழைந்து தென்றலாய் ஓடிவந்த அந்தச் சின்னஞ்சிறு ஜீவனை மார்போடு அள்ளி அணைத்துக் கொண்டாள்.

என் கால்கள் திடீரென்று விறைப்புக் கொண்டு எழுந்து நின்றன. விழிகள் கழன்று விழுந்தது மணலில் துவண்டன. அவளின் கண்களை. மீண்டுமொரு முறையேனும் காணும் மன அவதியில் அகன்று கொண்டிருந்தேன்.

'என்பக்கம் திரும்பிவிடக் கூடாது' என அச்சின்னஞ்சிறு ஜீவனுக்கு தூரத்தில் பறந்து கொண்டிருந்த சிட்டைக் காட்டினாள்.

மனதில் கிளர்ந்தெழுந்த தீச்சுவாலை எனைச் சுட்டெரிக்க.

தன்னை வெட்டிப் போட்டாலும் தாங்கிக் கொள்ளும் மண்போல் அவள்.

அவள் தாய்.

கள்ளம் கபடமற்று, அன்பு கொண்டெழும் தென்றலாய் குழந்தை.

குழந்தை கண்ணிரண்டின் பாவை.

எனக்கு எப்படி?

கண்ணிரண்டின் பாவை!

## உதிரும் இலைக் கனவு

உன் பெயரை உச்சரிப்பதில்தான்
என் உணர்ச்சிகள் மெய்ப்படுகின்றன.
சிறிது உன்னை நினைக்கிறேன்
பிறகு அழுகிறேன்
என் ஆத்மார்த்தமான காதல்
நீ புரியாதது
இப்போது நீ இல்லை
ஆன போதும் நான் நேசிக்கிறேன்
அதைப் புரியாமலே நீ போய் விட்டாய்

என் ஆசைகளும் நினைவுகளும் வெடித்து
கண்களிலிருந்து
கண்ணீர்க் கோடுகள் துளிகளாய் வீழ்ந்தாலும்
என் உணர்வுகளை நிறுத்த முடியவில்லை
இப்போதும் நான் வாழ்கிறேன்
மௌனம் நிறைந்தவளாய்
இனி நான் பேசப்போவதில்லை
உன் நினைவுகள் எனை விட்டு நீங்கும் வரை
அன்று என் நினைவுகளும்
என்னோடேயே இருக்குமா என்ன ?

நான் உன்னைக் காதலித்தேன்
என் உணர்வுகளைக் கடந்து
உன்னைக் காணுகையில்
அதி வேகமாகத் துடித்த என் இதயம்
இன்று மிக மென்மையானதாக
இதமும் உன் நினைவுகளும் நிறைந்ததாக

எவ்விதம் இனி நான்
என் கணங்களைக் கழிப்பது
எனைச் சூழ்ந்திருந்த நீயும் அகன்று போன பின்
உன்னை
உன் பிரிவை
நான் உணர்கிற போது
ஒருவரும் இல்லாத தனி வீதியில்
ஒரு மஞ்சள் விளக்குக் கம்பத்தின் கீழ்
மெல்லிய மழைத்துளியில் நனைய நான்
என் கண்களில் நீ
நினைவுகளாய் ஈரலிக்க
நான் மட்டும்


அழவேண்டும்
என் உணர்ச்சிகளைக் கொட்டி
என் இதயம் கனக்கிறது
ஏதோ ஒன்று மனதில்
பாரம்போல் உணர்கிறேன்
அது உன் நினைவின் துயரா அன்பே
எனக்கு இது பிடித்திருக்கிறது
உன் நினைவில் அமிழ்வது
அழிவது....

என் உயிர் உன்னது
அதை நான் சுமக்க விட்டு
எங்கு போய்ப் போனாய் போ
உன்னுடைய என் பெயரையும்
எடுத்துச் செல்க
செல்க

என் கைகளில் கண்ணீர் வீழ்ந்து உடைகிறது
இனி எதிலும்
ஈடுபாடு இருக்கப் போவதில்லை
என்ற போதும்
ஓர் மௌன ஜீவனாய்....
இன்னும் உனக்காகவே....
நீ எனக்குள் உயிர்க்கிறாய்
என் மனதில் துளிர்க்கும்
நினைவின் குருத்துகளாயென....

பெண்ணியா
13.02.97

# விளிம்பு நிலையில் மையம் கொள்ளும் இருள்வெளி




புலம்பெயர்ந்து வாழும் ஈழத்து இளந்தலைமுறையினர் இன்று பலவித முற்போக்கான செயல்களின் மூலம் தம் இருப்பை வெளிக்காட்டி தம்பால் கவனத்தை ஈர்ப்பவராய் உள்ளனர்.

அவ்வகையான முயற்சிகளில் ஒன்றாகவே அவர்களின் கலை இலக்கிய முனைப்புகள் அமைந்துள்ளன. காலம், பாலம், பார்வை, தூண்டில், மனிதம், சமர், எக்ஸில், சக்தி, புலம், என்று அவ்வப்போது இவர்களால் வெளியிடப்பட்டு வரும் சஞ்சிகைகள் இவற்றின் வெளிக்காட்டல்களே எனலாம். இவை நீங்கலாக ஆண்டுக்கொருமுறை, லண்டனில் இருந்து தமிழர் நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையோடு பத்மநாப ஐயரால் வெளியிடப்பட்ட ஆண்டு மலர், கிழக்கும் மேற்கும், "இன்னுமொரு காலடி" போன்றவை இவ்வழியில் வந்த காத்திரமான அறுவடைகள் எனலாம். இவற்றின் அருட்டலில் பிரான்ஸில் இருந்து வெளிவந்த "இனியும் சூல்கொள்" அதைத் தொடர்ந்து தற்போது வெளிவந்துள்ள "இருள்வெளி" போன்ற இதழ்கள் மேலும் புலம்பெயர் இலக்கியத்துக்கு வளமூட்டி நிற்கின்றன.

மேலே நாம் குறிப்பிட்ட கிழக்கும் மேற்கும், இன்னுமொரு காலடி, இனியும் சூல்கொள் என்பவற்றைவிட தற்போது வெளிவந்துள்ள இருள்வெளி தன்னை வித்தியாசப்படுத்திய தன்மையோடு வெளிவந்துள்ளது. அந்த வித்தியாசப்படுத்தல் அதன் கோட்பாட்டு ரீதியான வெளிக்காட்டலால் ஏற்பட்டுள்ளது என்றே கூற வேண்டும்.

புகலிட வாழ்வு, பெண்ணியம், விளிம்பு நிலை மாந்தர், தமிழ் அரசியல் குறித்த பின் நவீனத்துவப் படைப்புகளைத் தாங்கிய ஒரு புகலிடத் தொகுப்பு என அதன் தொகுப்பாசிரியர் சுகன் குறிப்பிடுகிறார். இக்கூற்றுக்கு ஏற்பவே இதன் படைப்புகள் வெளிவந்துள்ளன என்பதும் கவனித்திற்கொள்ளற்பாலது.

வழமையாக புகலிடத்தில் வாழும் புத்திஜீவிகளில் அனேகமானோர் "புலிஎதிர்ப்பு" என்பதை முதன்மைப்படுத்துபவராக இருக்கின்றனர். இதற்குக் காரணமும் உண்டு. பல இளைஞர்கள் வேறு இயக்கங்களில் இருந்து புலிகளால் துன்புறுத்தபட்ட அனுபவங்களை "விழுப்புண்களாக" இன்றும் காண்பவர்கள். அந்த அனுபவச் சூடு ஏற்றும் ஆத்திரத்தில் புலிகளின் சில கொள்கைகளைத் தமிழ்த் தேசியத்தோடு போட்டுப் பிணைபவராகவும் உள்ளனர். தமிழ்த் தேசியம் என்பது இன்றைய globalisation போக்கில் அடிபட்டு போகப் போகும் ஒன்றாகவே இவர்கள் கருத்தியல் விரியுமானால் அதையொட்டிய விமர்சனங்களுக்கு அந்தத்தேசியமும் முன் நிற்க முடியாது. ஆனால் இடைப்பட்ட நிலையைப் பேண முற்படும் போதே சிக்கல் எழுவதாய் உள்ளது. இது கத்தியில் நடக்கும் தன்மையை ஒத்தது.

"இருள்வெளி" யில் வெளியாகியுள்ள ஜோர்ஜ் இ. குருஷேவ் என்பவரால் எழுதப்பட்டுள்ள "வாக்களிக்கப்பட்ட பூமிக்கு---" என்ற முதல் கட்டுரை நான் மேலே குறிப்பிட்டவாறு நம் உள்ளூர் அரசியலை அதாவது புலிகளின் நிலைப்பாடு அவர்களுக்கெதிரான சக்திகள் சிங்கள அரசின் போக்கு - அலசுவதாக உள்ளது. கூடவே புலிகளுக்குச் சார்பாக புலம் பெயர்ந்து வாழும் இடங்களில் இருப்பவர்களையும், புலிகளுக்கு எதிராக இயங்குபவர்களின் கருத்துச் சுதந்திரத்தைப் பிரயோகிப்பவர்களைப் பற்றியும் இக்கட்டுரையாளர் அங்கதப் பாணியில் சாடுகிறார்.

"வெளிநாடுகளில் பாதுகாப்பாக இருந்துகொண்டு அங்கில்லாமல் சுதந்திரம் இல்லை என்று அவ்வப்போது நடக்கும் 'வெற்றிகரமான' தாக்குதல்களைக் கண்டு புல்லரிப்பவர்கள்" என்று அவர் கூறுவதில் நியாயத்தன்மை உண்டு. ஆனால் அதைத் தொடர்ந்து அவர் கூறும் "சமூகப் பொறுப்புடனும் சமாதான நோக்குடனும் ஈடுபடுபவர்களுக்குக் கூட பல்வேறு தாக்கங்கள். இதற்குள் பல்வேறு குழுக்கள், பல்வேறு முகாம்கள் படைப்பாளிகளை விட அதிகமான விமர்சகர்கள். படைப்புகள் கூட முகாம் சார்ந்ததாய் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும்-படைக்கும் படைப்பாளிகள்-விமர்சகர்கள், புலிகள் தேசியப் போராட்டம் நடத்துபவர்கள் என்பவர்கள் முதற் புலிகள் பாசிச வாதிகளே என்பவர்கள் வரை ஒன்று பட்டுச் செயற்பட வேண்டிய நிலை, தனி மனிதக் கோளாறுகள். எல்லாவற்றுக்கும் மேலாக சிந்தனைப் போக்கில் ஏற்பட வேண்டிய மாற்றம் குறித்து அக்கறையில்லாத மக்கள் கூட்டம்" எனும் கூற்றுக்குள் அவரும் சிறைப்பட்டவரே! இதை அவர் சிறிது சிந்திக்க வேண்டும்.

இந்த நிலையை நினைக்கும் போது எனக்கு ஆக்கிமிடிஸ் என்ற பழைய விஞ்ஞானியின் கூற்றுத் தான் நினைவுக்கு வருகிறது. அவரிடம் ஒருவர் "இந்த உலகத்தை உன்னால் கிண்டி எடுத்துத்தர முடியுமா?" என்று கேட்டபோது அவர் அதற்கு "அதைக் கிண்டி எடுப்பதற்குரிய அலவாங்கும் பிககானும் நான் உலகுக்கு வெளியே நிற்பதற்குரிய இடமும் தந்தால் செய்து தருவேன் என்றார்."

இது தான் நமது பிரச்சினையும் பாசிசவாதியாகவும் புலி எதிர்ப்பாளனாகவும் இருந்து கொண்டு தான் நமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். இதற்கு ஆதாரமாக குருஷேவ் மேற்கோள் காட்டும் பின்வருவன நிற்கின்றன.

"உலக நாடுகள் எங்கும் சிதறிப் போனாலும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்தாலும் தங்கள் மொழியையும் தாய் நாட்டையும் மறக்காமல், 'அடுத்த பாஸ்கா ஜெருசலேமில்' என்று பாடிக்கொண்டே யூதர்கள் வாழ்ந்தார்கள். வெறும் கோஷங்களோடு மட்டும் நிற்காமல் பொருளாதார ரீதியில் பலம் பெற்றதால், இன்று தங்கள் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப உலக அரசியல் போக்கிலும் அவர்களால் அழுத்தம் கொடுக்க முடிகிறது. (தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை மனதில் கொள்ளாமல் பாலஸ்தீனர்களின் உரிமைகளை மறுப்பது இன்னொரு விடயம்)

வேடிக்கை என்னவென்றால், குருஷேவால் 'புனித'மானதாக மேற்கோள் காட்டப்படும் யூதர்களின் பலஸ்தீனத்தின் ஆக்கிரமிப்பானது எத்தகைய அசிங்கமானதும் அவலமானதுமான பாசிசக் கூறுகளைக் கொண்டிருந்தது என்பதை அவர் அறியவில்லை போலும்! theives in the night என்ற நாவலைப் படித்தால் அதன் ஓரளவு சுவை தெரியும். இன்றும் அதே குரூரக் கட்டவிழ்ப்பே பலஸ்தீனத்துக்கு எதிராக நடைபெறுகின்றது. வரலாறு ஆகிவிடுபவை புனிதமாகி விடுமா? அப்படியானால் எங்களுக்கும் பொருந்தும். எது எவ்வாறாயிருப்பினும் குருஷேவ் 'இருள்வெளி' இதழின் அரசியல் பிரகடனத்தில் குறிப்பிடும் படைப்பாளிகளின் ஒன்றுபட்ட இயக்கம் போன்ற ஒன்றின் மூலம் புது விழிப்பைச் சாதிக்கலாம் என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

பின் நவீனத்துவப் போக்கிற்கு ஏற்ப 'இருள்வெளி' விரிவதால் அதன் படைப்புகள் அனைத்தும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்களைச் சுற்றியே மையம் கொள்வதைக் காண்கிறோம். கட்டுரை, கதை, கவிதை என்ற மூன்று பகுதிகளாக இதழ் விரிக்கும் இதன் ஒவ்வொரு பகுதியிலும் தரமானவைக்குப் பஞ்சமே இல்லை. ஆனால் கட்டுரைகளினதும் கதைகளினதும் தரத்திற்கு கவிதைகள் எழவில்லை என்பதைக் கூறியே ஆக வேண்டும்.

"தலித் பெண்ணியம்:ஒரு விவாதத்திற்கான முன் வரைவு" என்று அ. மார்க்ஸ் அவர்களால் எழுதபட்ட கட்டுரை மிகக்காத்திரமான ஒன்றாகும். 'பெண்ணியங்களில் பலவகைகள் என்பது தவிர்க்க முடியாதது. இவற்றில் 'உண்மையான' பெண்ணியத்தைத் தேடுவதென்பது கேலிக்குரியது' என்ற மேற்கோளை நியாயப்படுத்தும் விதத்தில் தலித்தியத்தில் பெண்ணியம் ஆராயப்படுகிறது. பல்வகைப் பெண்ணிய நோக்கை அழுத்துவதால் மட்டுமே, இன்று பெண்ணியம் முகம் கொடுக்க வேண்டிய பிரச்சனைகளுக்குத் தீர்வு காணலாம் என்பது சரியே. ஆயினும் தத்துவார்த்த ரீதியில் ஆண்-பெண் இருமைக்குரிய பெண்ணிய நோக்கு எதிர்காலத்தில் ஏற்படாமல் போகுமா என்பதும் சிந்திக்க வேண்டியதே. இலங்கை வாழ் 'ரொடி' களின் கதையும், 'சிந்து-ரோமா' க்களின் கதையும் துயரம் தரும் வரலாறாகவே உள்ளன.

கதைகளைப் பொறுத்தவரை றொனா போலின் 'சூலிக்குக்'கதை சொன்ன சூல்களின் கதை ஷோபா சக்தியின் 6874307-d584 ட 836753' இரண்டும் பரீட்சார்த்த ரீதியில் எழுதப்பட்டு ஓரளவு வெற்றியடைந்த கதைகளெனச் சொல்லலாம். மரபு ரீதியில் எழுதப்பட்டு கலா ரீதியாக வெற்றியடைந்த கதையாக வேட்டையைக் குறிப்பிடலாம் ஒடுக்கபட்ட மக்கள் ஒடுக்குமுறைக் கெதிராக தம் மரபு வழிவந்த மடங்குகளையே கவசங்களாகப் பாவிப்பதை கதை மிக நேர்த்தியாக முன்வைக்கிறது. கௌரி மனோகரனின் எல்லோரும் மௌனமா' என்னும் கதை தனது பின்னணியை இன்னும் விழித்திருந்தால் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் கதையாக அமைந்திருக்கும். மேலும் இக்கதை ஈழத்து எழுத்தாளர் ஒருவரின் ஏற்கனவே வெளிவந்த கதையை நினைவூட்டுவதாகவும் உள்ளது. 'ஒரு பூனை சகுனம் பார்க்கிறது' அல்லது 'ஒரு பேனா மையை இழக்கிறது' என்னும் கதை அவ்வளவு எழுதப்பட்டும் கதை வெற்றி பெறவில்லை.

கவிதைகள் எதுவும் மனதில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாய் அமையவில்லை. பெத்தோல்ட் பிறக்ற்றின் மொழி பெயர்ப்பான 6தர5 கவிதையும் கற்சுறா எழுதிய் மரநாயும்' நன்றாக வெளிவந்துள்ளன. மொத்தத்தில் இருள்வெளி இலக்கிய ரீதியாக ஒரு வெற்றி பெற்ற சாதனையே. ஆனால் "கிழக்கும் மேற்கும்", "இன்னுமொரு காலடி", "இனியும் சூல் கொள்" போன்று பன்முகபட்ட எழுத்தாளர்களையும் உள்வாங்கியிருந்தால் பெரும் இலக்கைச் சென்றடைந்ததாக இருக்கும். இவ்விதழின் சிறப்பை கெடுப்பதாக அமைந்துள்ள விஷயம் இது வெளியிடப்பட்டுள்ள தமிழ்த்தாய் நாட் காட்டி பற்றிய விமர்சனமே.

இந்த நாட்காட்டி பற்றிய விமர்சனத்தில் ஹிட்லரின் படத்தையும் பிரபாகரனின் படத்தையும் அருகருகே போட்டு இருவரும் ஒத்த தன்மையுடையவர்கள், பாஸிஸவாதிகள் எனக்காட்டப்படுள்ளது உண்மையில் ஹிட்லரையும் பிரபாகரனையும் ஒரே வரிசையில் வைத்து எடைபோடுவது சரியா? தனக்கென பெரும் நாடு, வளம், சுதந்திரம் அனைத்தும் இருக்கக் கூடியதாக எந்தவித தேவையும் அற்று ஜேர்மனியர் தான் உலகிலேயே சிறந்த ஆரிய இனம் (Kultur Race) மற்ற இனம் அனைத்தும் அவர்களுக்கு அடிமையாக இருக்க வேண்டும் என்று உலகை ஆக்கிரமித்த ஹிட்லரை, சிங்களப் போனவாதிகளின் பிடியிலிருந்து தன் இனம், நிலம், மொழி கலாசாரம் அனைத்தையும் தக்க வைப்பதற்காக (எத்தனை தான் குறை இருந்தாலும்) போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் பிரபாரகரனோடு ஒப்பிடுவது ஒரு விதமானக் கோளாறென்றே கருத வாய்ப்புண்டு. மேலும் ஹிட்லர் பற்றிக் குறிப்பிடப்படும் கலன்டர் வாக்கியங்களில் "பலவீனப்படுத்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்டிருந்த ஜேர்மானிய தேசத்தை உலகின் பலமான நாடாக மாற்றியவர் ஹிட்லர். இதன் மூலம் உலகை வெல்வதே இவரது லட்சியம். அதன் பொருட்டு இரண்டாவது உலகப் போரைத் தொடக்கி அதன் மையமாகச் செயற்பட்டார். இறுதியில் நேசநாட்டுக் கூட்டணியிடம் இராணுவத் தொல்வியைச் சந்தித்தார். 60 லட்சம் யூத மக்களைக் கொன்ற இவரது பாதகச் செயல் வரலாற்றில் கறைபடிந்ததாகவே உள்ளது." என்றுள்ளது. இதில் "60 லட்சம் யூத மக்களைக் கொன்ற" என்பதைத் தவிர அனைத்தும் ஹிட்லருக்குச் சாதகமான வார்த்தைகளே என்பதும் கவனிக்கப்பட வேண்டும். அத்தோடு புலம் பெயர்ந்து வாழும் இடங்களில் புலிச் சார்புடையோர் நடந்து கொள்ளும் போக்கை இங்கு போராடிக் கொண்டிருக்கும் புலிகளோடு ஒப்பிட்டுக் குழம்புவதிலும் அர்த்தமில்லை. மேலும் அனைத்து இயக்கங்களும் சுதந்திரமாக இங்கு நடமாடிய காலத்தில் ஒவ்வொரு இயக்கமும் நடத்திய கொலைகளையும் அடாவடித்தனங்களையும் மீட்டுப் பார்த்தால் தான் இங்கு இன்றுள்ள சுமுக நிலையும் அமைதியும் புரியும்.

**-மு.பொ.**

## தமிழ்...

கோலானது சிங்கள இனத்துக்குள் இருப்பதையும் உணர வேண்டும். தமிழ் மக்களை அடக்கியொடுக்கிக் கொண்டிருப்பதன் மூலம் சிங்கள இனம் மிக மோசமாக அடக்கியொடுக்கப்படும் இனமாக வந்து விட்டது. ஒரு இனத்தை அடக்க முற்படும் இன்னொரு இனம் ஒரு போதும் சுதந்திரமாயிருக்க முடியாது எனும் உண்மை இங்கு புலனாகிறது.

தமிழ் மக்கள் மிக மோசமாகப்பாதிக்கப்பட்டுள்ள போதும் நம்பிக்கையிழக்காமல் தமது வழமையான விடா முயற்சியையும் கைவிடாமல் எதிர்காலத்தில் மேம்பாடு அடைவதற்கான பல சாதகமான அம்சங்களைத் தம்மகத்தே கொண்டு வாழ்கின்றனர். மறுபுறத்தில் சிங்கள மக்களோ படுமோசமான நிலைக்குத் தம்மைத் தாமே இட்டுச் செல்கின்றனர். சிங்கள இனத்தின் மத்தியில் பல்வேறுபட்ட பிற்போக்கான சக்திகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இது தான் சிங்கள ஏழை எளிய மக்களின் சாபக்கேடாகும். பௌத்த உயர்பீடத்தின் அனுசரணையுடன் பேரினவாத சக்திகளின் மேலாதிக்கம் கோலோச்சும் நிலையில் உள்ளது. சிங்கள இனமானது ஒரு இழி நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அதாவது சிங்கள இனத்தின் தலையில் ஒரு கண்டி மண்ணின் சிங்கள, பௌத்த லீக்கே நிலமே ஜனாதிபதியாக சுமத்தப்படலாம். அவர் துட்டகைமுனுவின் வாரிசு என்றெல்லாம் போற்றிப் புகழ்பாடலாம். ஆனால் உண்மையில் சிங்கள மக்கள் வீரர்கள் அற்ற ஒரு இனமாகவே பரிணமித்துக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் பௌத்தமானது "ஜாதிக்க சிந்தனய" எனும் இனவாதக் கும்பலின் கையில் மிக மோட்டுத்தனம் கொண்ட ஆரிய சித்தாந்தம் என்ற "கீர்த்தி" நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது.

எனவே மனப்பக்குவத்தைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் மிகுந்த உயர்ந்த நிலையில் உள்ளனர். அதாவது அவர்கள் எத்தனை பிரச்சினை தான் வந்த போதும் எத்தனை சோதனைகளைத் சந்திக்க வேண்டியுள்ள போதும் இலட்சிய நோக்குடன் பாடுபட்டு வருகின்றனர். எனவே சிங்கள முற்போக்காளர்களுடன் பங்காளர்களாகச் செயற்படுவதன் மூலம் சிங்கள மக்களுக்கு உதவும் நிலையில் உள்ளனர்.

இறுதியாகக் கூற வேண்டியது யாதெனில் சிங்கள மக்களை தற்போதைய சிதைவு நிலையிலிருந்து விடுபட உதவுவதன் மூலம் தமிழ் மக்கள் தமது விடுதலையை அடையலாம் என்பதாகும். இது நம்ப முடியாததாகத் தோன்றலாம். வியப்பை அளிக்கலாம். ஆனால் அது தான் இன்றைய யதார்த்தமாகும்.

**விக்கரமபாகு கருணாரத்ன**

## ஈழத்து...

- ஈழத்தில் வெளிவந்த ஈழகேசரி, மறுமலர்ச்சி, அலை, திசை, சரிநிகர், அஞ்சலி, நந்தலாலா, முனைப்பு, வியூகம் போன்ற பத்திரிகை சிறுசஞ்சிகைகளில் வெளிவந்த சிறுகதைகள் இருட்டடிப்பு செய்யப்பட்டு மல்லிகையில் வெளிவந்த ஒன்பது கதைகள் சேர்க்கப்பட்டது எவ்வாறு?
- தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் உக்கிரம் பெற்ற 80களின் பின் அதைப் பின்புலமாகக் கொண்டு எழுதப்பட்ட கதைகள் எந்த அரசியல் நோக்கத்திற்காய் இப்பதிப்பில் இடம் பெறவில்லை?
- 85இன் பின்னர் ஏற்பட்ட தமிழ் முஸ்லிம் சிக்கல் களைச் சித்திரித்த கதைகள் ஏன் இதில் சேர்க்கப்படவில்லை?
- வன்னியகுலம் (ரூபவாஹினி தமிழ் நிகழ்ச்சிப் பணிப்பாளர்) இவரால் 1971இல் எழுதப்பட்ட ''இதுவும் ஒரு பிரசவம்'' என்ற கதை எப்பத்திரிகையில் பிரசுரமானது? தமிழ் நிகழ்ச்சி ரூபவாஹினி பணிப்பாளர் - என்பதற்காகவா இத்தொகுப்பில் 5வது கதையாக பிரசுரிக்கப்பட்டுள்ளது?
- 1950, 1952ல் எழுதப்பட்ட அ.ந.கந்தசாமி, பித்தன் போன்றவர்களின் கதைகள் முறையே 33வது கதையாகவும், 36 கதையாகவும் பிரசுரிக்கப்பட 1960களில் எழுதிய ஜீவாவின் கதை ஏன் முதல் கதையாகப் பிரசுரிக்கப்பட்டது. இப்படியான புனைவு உருவாக்கங்கள் எதற்காகச் செய்யப்படுகிறது?

இதுதான் இன்றைய ஈழத்துத் தமிழ் இலக்கியம் போய்க் கொண்டிருக்கும் வழி என்றால் இதன் திசையை மாற்றுவது நமது அனைவரின் பணியுமாகும். அந்தப் பணியின் தொடக்கமாக இக்கட்டுரை அமைந்தால் நான் மகிழ்வேன்.

இது ஒரு அலசல்

# இன்றைய தமிழ் இலக்கிய விமர்சனம் எப்படிப் போகிறது?

இன்றைய நம் இலக்கிய விமர்சனம் எப்படிப் போகுது? என்று என் பத்தி எழுத்தாள நண்பனைக் கேட்டேன்.

அவன் பதில் சொல்வதற்கு முன் சிரித்தான். சிரித்து விட்டுச் சொன்னான். எல்லாம் அவசரகதியில் ஆய்வில்லாமல் நடைபெறுவது போலத்தான் படுகுது. பெரிய திறனாய்வாளர்கள் என்று பேரெடுத்தவர்களே பெரிய பிழையான தகவல்களைத் தந்துள்ளனர்.

எதைப் பற்றிச் சொல்கிறாய்? கொஞ்சம் தெளிவுபடுத்த முடியுமா? - நான்.

சென்ற வாரம் மறுமலர்ச்சி சிறுகதைகள் வெளியீட்டு நிகழ்ச்சியில் உரையாற்றிய விமர்சகர் மதுசூதனன், மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் என்ற பட்டியலில் இது காலவரை அ.செ.மு., அ.ந.கந்தசாமி, சொக்கன், வ.அ.இராசரத்தினம், வரதர் என்ற பெயர்கள் தரப்பட்டு வந்துள்ளன. ஆனால், உண்மையில் அ.ந.கந்தசாமி, வ.அ.இராசரத்தினம் போன்றவர்களின் ஒரு படைப்புத்தானும் அதில் வெளிவரவில்லை. மேலும் மறுமலர்ச்சி வட்டம் உருவாக்கப்பட்ட திகதியையும் 1942எனப் பிழையாகக் கூறி வந்துள்ளனர். அது உண்மையில் 1943 -06-13ல் தான் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அத்தோடு சொக்கன் கூடத் தன்னை, மறுமலர்ச்சி எழுத்தாளர் என்று கூறாது, ஈழகேசரி எழுத்தாளர் என்றே தான் எழுதிய பிறிதொரு கட்டுரையில் குறிப்பிடுகிறார் என்று கூறினார் -அவன்.

இப்பிழையானதகவல்களை முன்வைத்தவர்யார்? நான் கேட்டேன்.

புதுமை இலக்கியம் இதழில் க.கைலாசபதி இப்பிழையான தகவல்களை முன்வைத்துள்ளார். இதை அடியொற்றி சித்திரலேகா மௌனகுரு, மௌனகுரு, எம்.ஏ. நுஃமான் ஆகியோர் தமது 20ம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி நூலிலும் குறிப்பிட்டுள்ளனர். இவர்களைப் பின்பற்றி மு.பொன்னம்பலம், செ.யோகராசா போன்றோர் தமது கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளனர்.

இவை சிறு தகவல் பிழைகள் தானே (factual mistake)? -நான்

உண்மை. ஆனால், இப்பிழைகள் ஏன் ஏற்பட்டன என்பதே கேள்வி. இப்பிழைகள் ஏற்படக் காரணம், சீரான ஆய்வு நிகழாமல், வெறும் மேலெழுந்தமான, செவிவழி வந்த தகவல் ஒப்புவிப்புகளே எனலாம். பெரிய ஆய்வாளர்கள் எனப்படுவோர், இத்தகைய பிழை விட்டால் அவர்களை நம்பி மேற்கோள் காட்ட முனைபவர்கள்பாடு அதோகதி தான்! மேலும் இது அவர்களின் எல்லா ஆய்வுகளையும் சந்தேகத்திற்குள்ளாக்கிவிடும். -அவன்.

ஆய்வுக்கும் விமர்சனத்துக்கும் என்ன வேறுபாடு? - நான்.

விமர்சனம் என்பது ஒரு கலைப் படைப்பின் வெற்றி, தோல்விகளுக்கான காரணிகளை விசாரணை செய்து தர்க்க ரீதியாகக் காட்ட முயல்வதாகும். ஆய்வு சற்று வித்தியாசமானது. உதாரணமாகச் சங்க காலத்தில் இன்றைய பெண்ணியக் கூறுகள் இருந்தனவா? என்ற ஒரு கேள்வி எழுப்பினால், அதற்குரிய சான்றுகளை ஆய்வு செய்து காட்டுவது அல்லது அவ் ஆய்வுகளை ஆதாரம் காட்டி நிராகரிப்பது ஆய்வாகும். அவன்.

க.கைலாசபதி, சிவத்தம்பி போன்றவர்கள் விமர்சகர்களா, ஆய்வாளர்களா? - நான்.

அவர்கள் இரண்டும் செய்துள்ளனர். பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் என்பது க.கைலாசபதி செய்த ஆய்வாகும். கவிஞர் சுபத்திரன் பற்றி அவர் எழுதியவை விமர்சனமாகும். Sri Lankan Tamil Society and Politics என்ற நூல் சிவத்தம்பியின் ஆய்வாகும். அவர் ரஞ்சகுமார், கவியுவன் பற்றி எழுதியவை விமர்சனமாகும். -அவன்.

பத்தி எழுத்து எத்தகையது? -நான்.

பத்தி எழுத்தில் பலதரப்பட்ட விஷயங்கள் அலசப்படலாம். அதில் இலக்கியம் சம்பந்தப்பட்ட விஷயமும் ஒன்று. ஒரு இலக்கிய நூல்பற்றிய அறிமுகம் என்று வரும்போது அதன் ஆசிரியர், அதன் பின்னணி என்பவற்றோடு லேசான விமர்சனமும் அடங்கும். இவ்வகை எழுத்துக்களை கே.எஸ்.சிவகுமாரன் உரியமுறையில் செய்துள்ளார். -அவன்.

அண்மையில் சிவகுமாரனின் நூல் வெளியீட்டு விழாவில், விமர்சன உரை வழங்கிய வன்னியகுலம், கைலாசபதியின் ஆய்வுகளோடு சிவகுமாரனின் பத்தி எழுத்துக்களை ஒப்பிட்டு, சிவகுமாரன், கைலாசபதியின் தரத்துக்கு எழவில்லை என்று கூறினார். இது பற்றி நீ என்ன சொல்கிறாய்? நான்

இந்த விமர்சனத்தைக் கேட்கும் போது, எனக்கு இப்படித்தான் நினைக்க வேண்டும் போல் இருக்கிறது. ஒரு நாடகத்தில் பின்னணி வாத்தியக் காரனைப் பார்த்து, அந்த நாடகத்தில் உன் நடிப்பு, என் நண்பனுடையதைவிட மட்டரகமானது என்று இல்லாத ஒன்றோடு தான் எண்ணியதை ஒப்பிட்ட தர்க்கம் வழுவுக்குரியதாகும். விமர்சனம் என்பது ஒவ்வொரு ஆக்கம் பற்றிய பூரண தெளிவோடு, அவையொத்த பிறவற்றோடு ஒப்பிட்டுப் பார்த்தலாகும். இவைபோல் இன்னும் விவகாரங்கள் உண்டு -அவன்.

அவை பற்றியும் சொல்லு -நான் தூண்டினேன்.

தனக்குப் பிடித்தவரை ஆதாரமற்றுப் போற்றுதல், தனக்குப் பிடிக்காதவரை ஆதாரமற்று ஒதுக்குதல். இதற்கு உதாரணமாக அண்மையில் நட்சத்திரன் செவ்விந்தியன், அஸ்வகோஸின் வனத்தின் அழைப்பு பற்றி எழுதிய போது குறிப்பிட்ட பின்வருவனவற்றைக் காட்டலாம். அஸ்வகோஸ் எந்தக் கருத்தியல் தேக்கங்களுக்குள்ளும் தங்கிவிடாது உலகப் பார்வையையும், சிந்தனைத் தளத்தையும் விரித்துக் கொள்ள வேண்டும். தொண்ணூறுகளில் வெளிவந்த மு.பொன்னம்பலம், சு.வில்வரத்தினம், சோலைக்கிளி முதலியவர்களின் தொகுதிகள் தோல்வியடைந்ததற்கு மேற்கூறியதே காரணம். மு.பொவும், சுவியும், முதவின் மெய்முதல்வாதக் கருத்தியலுக்குள் தேங்கிவிட்டனர்... மறு பக்கத்தில் சிவசேகரம், வ.ஐ.ச.ஜெயபாலன், சண்முகம் சிவலிங்கம், சேரன் முதலியவர்கள் சிந்தனைத் தளத்தை விரிக்க உழைக்கிற போது சிறந்த கவிதைகளை எழுத முடிகிறது. நட்சத்திரன் செவ்விந்தியனின் இக் கூற்று பல ஆதாரங்களை வேண்டி நிற்கிறது -அவன்.

என்ன ஆதாரங்கள்? -நான்.

சிவசேகரம், ஜெயபாலன், ச.சி, சேரன் போன்றவர்கள் முன்னவர்களை விட எவ்வாறு சிந்தனைத் தளத்தை விரிக்கின்றனர் என்பதற்கு உதாரணம் தேவை. வில்வரத்தினத்தின் எந்தத் தொகுப்பு மெய்முதல்வாதத்திற்குள் தேங்கியது? மேலும் சிந்தனைத் தளத்தின் விரிவு, ஒடுக்கம் என்பது கருத்தியல் கோடொன்றினால் மட்டுமே அளக்கக் கூடியது. இது இல்லாத சிந்தனை விரிவு விரிவல்ல, வெறும் சிதறல்களே என்பது ந.செக்குத் தெரிய வேண்டும். -அவன் கூறிவிட்டு லேசாகச் சிரித்தான். சிரித்துவிட்டு இன்னும் பலவகையறாக்கள் உண்டு என்று விட்டு என்னைப் பார்த்தான்.

வேறு என்ன வகை? -நான்.

தர்க்க ரீதியான விமர்சனங்களைச் சிலருக்குச் சந்திக்க முடியாது போகும் போது, உட்குரோதம் கொண்ட காழ்ப்பில் அடிதடியில் இறுங்குவது. இதைத் தர்க்கவியலாளர் argumentum ad baculum என்பார்கள். இதுவும் ஒருவகை விமர்சனந்தான்.

இந்தவகை விமர்சனங்கள் தமிழ்இலக்கிய உலகில் உண்டா? -நான்.

உண்டு. முன்னர் அறுபதுகளில். இதனால் தான் முற்போக்கு எழுத்தாளர்கள் முட்டை எறிந்து கூட்டங்களைக் குழப்பினார்கள். இப்பொழுதும் இந்த விமர்சனங்கள் உண்டு. அண்மையில் அ.இரவி, யார் இந்தச் சங்கமன்? என்று கேட்டு ஆக்ரோஷம் கொண்டு எழுதிவிட்டு, ஓர் இடத்தில் எனக்குக் கடும் வார்த்தைகள் வருகின்றன என்று பல்லை நெரிப்பது தெரிகிறது. சங்கமன் எதிரே நின்றிருந்தால் ஒரு விளாசு விளாசியிருப்பார்.

அவர் என்ன சொல்கிறார்? -நான்.

கால் மார்க்சைக் (சங்கமன்) கொச்சைப் படுத்தி ஆரம்பத்தில் எழுதியிருந்தார். கால் மார்க்ஸ் எங்களுக்குக் கடவுளல்ல. ஒருதத்துவ மேதை அவ்வளவு தான். கால் மார்க்ஸ் தவறு விடச் சந்தர்ப்பம் இருந்திருக்கலாம். முக்கியமான தத்துவத்தைத் தந்தார் என்பதற்காக, அவர் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவரல்லர். என்று இரவி சொல்கிறார்.

மார்க்ஸ் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவரல்லர் என்று அவரே கூறிவிட்டுப் பின்னரேன் விமர்சனத்தைக் கண்டு குதிக்கிறார்? - நான்.

இதுதான் ஒரு கருத்தை, எதிர்க் கருத்தால் சந்திக்க முடியாது போகும் போது வரும் அடிதடி விமர்சனம் -அவன் சிரித்தான்.

*- சங்கமன்*

# தமிழ் மக்களின் சுயநிர்ணயம் இடதுசாரி ஐக்கியத்துக்கு முன் நிபந்தனை

சரிநிகர் 149ம் இதழில் வந்துள்ள சில விடயங்கள் பழைய பல குறைபாடுகளை மீளவும் வலியுறுத்துகின்றதாகச் சுட்டிக்காட்டுவது எனது பொறுப்பு என நினைக்கிறேன்.

1. புதிய இடதுசாரி முன்னணியின் தோற்றத்திற்கான அறிகுறி 1997 மேதினத்தில் தென்பட்ட போதே, மனம் புண்பட்ட ஒருவர் சரிநிகரில் அதை இழிவுபடுத்தும் முனைப்புடன் எழுதினார். இவ்வருடம் அந்த முன்னணி யதார்த்தமாகி விட்டது. ஆயினும், அதில் உள்ள ஒரு முக்கியமான கட்சிமீது குறைகூறும் பாங்கிலும் இடதுசாரி ஐக்கியம் பற்றியே தவறான கண்ணோட்டத்தை ஏற்படுத்தும் முறையிலும், வழமைபோல, புனைபேரின் பின்னால் மறைந்திருந்து வேறு ஒருவர் எழுதியுள்ளார். கட்டுரைத் தலைப்பும் அவரது குறைபாடான பார்வையையே சுட்டிக் காட்டுகிறது. அதைவிட முக்கியமாகக் கட்டுரையாளர் தன்னைச் சரிநிகர் ஆசிரிய பீடத்திற்கு நெருக்கமானவர் எனவும் கட்டுரையுள் அடையாளங் காட்டியுள்ளார். இவ்வகையில் இக்கட்டுரைக்கு ஆசிரியர் குழுவே பொறுப்பேற்க வேண்டுமா என்ற கேள்வியும் எழுகிறது.

கட்டுரையில் புதிய ஜனநாயகக் கட்சி வலிந்து தாக்கப்பட்டுள்ளது. பு.ஜ.க. ஏன் மே 22ம் திகதிக் கூட்டத்திற் பங்குபற்றத் தவறியது என்பதற்கான விளக்கத்தை ஜே.வி.பியிடம் மட்டுமே பெற்ற கட்டுரையாளர் (அல்லது சரிநிகர்?) பு.ஜ.கட்சியினரையும் விசாரிக்க முடியவில்லையா?

ஜே.வி.பி.தன்னை இடதுசாரிக்கட்சி என்று கூறி கொண்டாலும், 1969 தொட்டு ஒரு இனவாதக் கட்சியாகவே செயற்பட்டு வந்துள்ளது. 1987ல் கூட இனவாதமே அவர்களது முக்கியமான அரசியற் கோஷமாக இருந்தது. ஜே.வி.பியுடன் இடதுசாரிக் கூட்டணி அமைப்பதெனில், தேசிய இனப்பிரச்சினை தொடர்பான ஒரு தெளிவான நிலைப்பாடு இல்லாது அது சாத்தியமில்லை. இன்றுவரை வடக்கு - கிழக்கு இணைப்பு, சுயநிர்ணயம், போர் நிறுத்தம் பிரதேச சுயாட்சி போன்ற விடயங்களில் சிங்களப் பேரினவாதத்தின் நிலைப்பாட்டில், ஐ.தே.கவை விடவுங்கூடத் தீவிரமாகவே ஜே.வி.பி. இருந்து வந்துள்ளது. (விஜேவீரவின் 1982 தேர்தல் திருகுதாளம் பற்றிச் சில வாரங்கள் முன்பு எழுதினேன்.) **தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையையும் வடக்கு - கிழக்கு இணைப்பையும் சுயாட்சியையும் புதிய இடதுசாரி முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் ஏற்கின்றன.** ஜூன் மாத முற்பகுதியில் இக்கூட்டணியிற் பங்குபற்றும் ஒரு அமைப்பின் சந்திப்பு ஒன்றிற்கும் போயிருந்தேன். அங்கு ஜே.வி.பியுடன் ந.ச.ச.கட்சியின் பேச்சுவார்த்தைகள் பற்றி அதன் சிங்கள உறுப்பினர்கள் பலரும் தமது உடன்பாட்டின்மையையே தெரிவித்தனர். அவர்களைப் பொறுத்தவரை தமிழ்மக்களது சுயநிர்ணயம் பற்றிய உறுதியான நிலைப்பாடு, இடதுசாரி ஐக்கியத்திற்கு ஒரு அதிமுக்கிய முன் நிபந்தனையாகும். இது ஒரு புறமிருக்க, கூட்டணிகள் பற்றிக் கட்டுரையாளர் கணிசமான குழப்பத்தில் உள்ளதாகத் தெரிகிறது.

**ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில்** பிரதான எதிரிக்கு மாறாக, இன்னொருவருக்கு **ஆதரவு தருவதும் கூட்டணியும் ஒன்றல்ல.** பு.ஜ.கட்சி 1994ல் முன்னதைச் செய்தது. ஐ.தே.க. ஆட்சி தொடர்ந்தும் நீடிப்பதை விரும்பியவர்கள், இது பற்றிக் கடுமையாக இன்னமும் ஆட்சேபிக்கலாம். ஐ.தே.கவுக்கும் அன்று தேர்தலில் பல வாக்குறுதிகளை முன்வைத்த பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் பு.ஜ.கட்சியின் தெரிவு பின்னையோரது வாக்குறுதிகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதை விட, ஐ.தே.கவின் அரசியலுக்கு அவர்களது எதிர்ப்பும் முக்கியமானது.

இவற்றுக்கும் மேலாக எந்த வகையான விசேடமான உறவையோ பிரதிபலனையோ எதிர்பாராமல் வழங்கப்பட்ட ஆதரவு பற்றி மிகவும் சினந்தவர்களது யோக்கியம் பற்றிக் கட்டுரையாசிரியரும் அறியக்கூடும். **தேர்தல் தவிர்ப்பு உடன்படிக்கை** என்பது **மேற்கூறியதற்கும் மேலான ஒரு புரிந்துணர்வு.**

1956ல் பண்டாராநாயக்காவின் ம.ஐ.முன்னணிக்கும் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கட்கும் இத்தகைய புரிந்துணர்வு இருந்தது. தந்திரோபாயமான தேர்தல் ஆதரவும் இவ்வகைப்பட்டது. (1989ல் ஜனாதிபதித் தேர்தலின் போது தெற்கில் மிரட்டல் மூலம் தேர்தலில் மக்கள் பங்கேற்பதைத் தடுத்தோர் பிரேமதாசவுக்கே உதவினார்கள். வடக்கில் 1982ல் த.வி.கூட்டணி யாருக்கு உதவியது என்றும் நாம் அறிவோம். இவை மறைமுக ஆதரவின் வகைப்பட்டது.)

**பொதுவேலைத்திட்டமொன்றுக்காக பல சக்திகள் இணைவது** பல தளங்களில் நிகழலாம். **இதுவே கூட்டணி** எனப்படும். இணையும் சக்திகளிடையிலான நெருக்கம் அவற்றின் வேலைத்திட்டத்தின் தன்மையையும் நோக்கங்களுக்கிடையிலான உடன்பாட்டையும் பொறுத்தது. புதிய இடதுசாரி முன்னணியை இவ்வாறே நான் காண்கிறேன்.

இன்று இலங்கையின் அதி முக்கியமான பிரச்சினை தேசிய இனப்பிரச்சினை. அதன் தீர்வைத் தவிர்த்து விடும் எந்தவித இடதுசாரி அரசியல் வேலைத் திட்டமும் அர்த்தமற்ற ஒன்றாகும். ஜே.வி.பிக்கு எதிரான அரச வன்முறையை பு.ஜ.கட்சியோ பிற புதிய இடதுசாரி முன்னணியினரோ கண்டிக்கத் தவறியதில்லை. ஆயினும், ஜே.வி.பி., ஐ.தே.கவுடன் இணைந்து பல முற்போக்குச் சக்திகளைத் தாக்கி அழிக்க முற்பட்ட வன்முறையின் கதையை நாம் மறக்க முடியாது. எனவே தான், ஜே.வி.பியுடனான உடன்பாடு, ஜே.வி.பி. ஒரு நேர்மையான, நியாயமான நிலைப்பாட்டை எடுக்கும் வரை இயலுமானதல்ல. அதோடு அவ்வாறான நிலைப்பாடில்லாத உடன்பாடு சந்தர்ப்பவாதமாகும்.

புதிய ஜனநாயகக் கட்சி பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியை எந்தத் தவற்றுக்காக கண்டிக்கவும், விமர்சிக்கவும் தவறியது என்று கட்டுரையாளர் கூறாமல், பு.ஜ.க. ஆட்சியாளரை ஆதரிக்கின்றது என்ற படிமத்தைக் கட்டியெழுப்ப முயல்வது பழைய விளையாட்டுத் தான்.

ஒரு கூட்டணி என்பது ஒரு வேலைத்திட்ட அடிப்படையிலானது. வேலைத்திட்டத்தை ஏற்கும் எவருடனும், அவர் அதை ஏற்று நடக்கும் காலம் வரை ஒருங்கிணைந்து செயற்பட முடியும். சமகால அரசியலில் எது முக்கியமான பிரச்சினையாகி நிற்கிறதோ, அதிற்கூட அடிப்படையான நியாயமான நிலைப்பாட்டை எடுக்க இயலாத ஒரு கூட்டத்துடன் ஐக்கிய முன்னணி அமைப்பதைக் கட்டுரையாளர் விரும்புகிறாரா?

ஜே.வி.பி. தலைமையின் சந்தர்ப்பவாதத்துக்கு 30 வருட வரலாறு உண்டு. ஆயினும், இந்த நாட்டின் பல நல்ல இளம், சந்ததிகள், இடதுசாரி இயக்கத்தில் ஏற்பட்ட தவறுகளால் அந்தத் தலைமையின் கீழ்ப் போயினர். சமுதாய மாற்றத்துக்கு இவர்களது பங்களிப்பின் முக்கியத்தை நான் பெரிதும் மதிக்கிறேன். அதைச் சாத்தியப்படுத்துவதாயின்

(19 ம் பக்கம் பார்க்க)

# மனநோய் என்றால் என்ன? தோற்றுவாய்க்கான காரணங்கள் எவை?

இப்பொழுதெல்லாம் மருத்துவ ரீதியாக மனநோயும் இதர நோய்களைப் போலவே ஒரு வியாதியாகவே கருதப்படுகிறது. ஏனெனில், இந்நோயைச் சிகிச்சை மூலமாகக் குணப்படுத்தக்கூடும். சில சந்தர்ப்பங்களில் பூரணமாகக் குணப்படுத்தவும் முடியும்.

மனநோய் வெட்கப்பட வேண்டிய ஒன்றானதாகவோ, குழப்பத்தையும், திகைப்பையும் உண்டு பண்ணக் கூடியதாகவோ தற்காலத்தில் எண்ணப்படுவதில்லை. மேலும் ஆபத்தைத் தருவது, தீராதது, சமூகத்தின் பார்வையிலிருந்து மறைத்து வைக்கப்பட வேண்டிய நோய் மனநோய் என்பதும் உண்மையன்று.

சமூகத்தில் மனநோயைப் பற்றிய அபிப்பிராயங்கள் பொதுவாக மாறிக் கொண்டு வந்தாலும், மக்கள் மனநோயாளரோடு உறவாடுவதில் பயமும், பீதியும், சங்கடமும் கொள்கிறார்கள். இதன் காரணமாக, மனநோயாளர்கள் சொல்லொணாத் துயர் அடைகிறார்கள். இந்தச் சமூகத்தின் உதாசீனமும், வெறுப்பும் அவர்களுக்கு நோயை விடக் கொடுமையானதாக இருக்கிறது.

### மனநோய் என்பது யாது?

சரீர இயக்கங்களில், சிக்கல்கள் ஏற்படுவதால் எவ்வாறு உடல் நோய்கள் தோன்றுகின்றனவோ, அதே போன்று மன இயக்கத்தில் மாறுபாடு ஏற்படுவதை மனநோய் என்று சொல்லுகிறோம்.

முக்கியமான மனநோய்களை இரு பெரும் கூறுகளாகக் கொள்ளலாம். ஒன்று சைக்கோசிஸ் (Psychosis) என்னும் கடுமையான மனநோய். மற்றொன்று நீரோசீஸ் எனப்படும் (Neurosis) நரம்புத் தளர்ச்சி நோய்.

நாம் யாவரும் ஒரிரு சமயங்களில் மிகுதியான துயர உணர்ச்சிகளுக்கு உள்ளாகிறோம். கவலையால் அவதிப்படுகிறோம். வீண்பீதியும், மனவாட்டமும் நம்மைப் பாதிக்கின்றன. நரம்புத் தளர்ச்சி நோயில் இந்த மாதிரி உணர்ச்சிகள் யாவும் பெரிதும் மிகைப்படுத்தப்பட்டுப் பெரிதாகித் தொல்லை தருகின்றன.

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களது அன்றாடக் கடமைகளைச் செம்மையாய் செய்ய முடிவதில்லை. வேலைக்குப் போவது, தனித்திருந்து இன்புறுவது, மறுபடி குடும்பத்தாரோடு, நண்பர்களோடு சேர்ந்து அளவளாவுதல் போன்ற காரியங்களை நல்ல முறையில் செயல்படுத்த முடிவதில்லை.

இவ்வகை நரம்புத் தளர்ச்சி நோய்களுக்கு உதாரணமாய் இருப்பவை கீழ் கண்ட கோளாறுகளாகும்; காரணமற்ற பதட்டம், (Anxiety), காரணமில்லாமல் பயம், போபியா (Phobi), கட்டாயமாய் செய்ததையே செய்யத் தூண்டும் உணர்வு (Obsessive Compulsive Neurosis), மனச்சோர்வு, (Deperssion) போன்றவைகளாகும்.

### சைக்கோசிஸ் (Psychosis) கடுமையான நோயா?

மனநோய்களில் இந்தப் பிரிவைச் சேர்ந்த பைத்திய நோய்கள் கடுமையான வியாதிகளாகக் கருதப்படுகின்றன. இம் மனநோயாளிகள் தங்களது கற்பனைகளால் ஆக்கப்பட்ட தனி உலகில் வாழ்பவர்களாகக் காணப்படுகிறார்கள். இந்நிலையில் அவர்களை, உண்மை உலகின் தொடர்பு அற்றவர்களாகவே மதிக்க வேண்டியுள்ளது. மற்றவர்கள் தங்களுக்குத் தீங்கு செய்ய முயற்சிப்பதாக அவர்கள் நம்பலாம். தங்களை விஷம் வைத்துக் கொல்லப் போவதாகவும், தங்களைப் பின்பற்றி, விடாது தொடர்வதாகவும் எண்ணலாம். இதேபோன்று தன்னைப் பற்றிய மிகப் பெருமிதமான நினைப்பில் உன்னதமான எண்ணங்களில் மயங்கி இருக்கலாம். இப்படிப்பட்ட அவர்களது நம்பிக்கைகள் எல்லாம் சற்றும் உண்மையே இல்லாதவை எனினும், அவர்களது மனதில் உறுதியாக இடம்பெற்றவை. பகுத்தறிவு வாதத்தால் நீக்க முடியாதவை.

இன்னும் சிலர் இல்லாதவற்றைப் பார்க்கிறார்கள். அவற்றைச் செவிமடுக்கிறார்கள், நுகர்கிறார்கள், தொடுகிறார்கள். இல்லாதவற்றைப் புலனுணர்வு அனுபவங் கொண்டதாக மயங்குகிறார்கள். (Hallucinations) இல்பொருள் உணர்வுகள் அவர்களைத் தாக்குகின்றன. இவ்வகை நோயால் பாதிக்கப்பட்ட வியாதியஸ்தர்களுக்கு மயக்க உணர்வு அனுபவங்கள் மிகவும் ஸ்கிசோபிரன்யா, (Schizphernia) உண்மையானதாகவே படுவதனால் அந்தப் பொய் அனுபவங்களுக்கு ஏற்ப அவர்கள் நடத்தையும், செயல்களும் மாறுதல் அடைகின்றன. இத்தகைய கடுமையான மனநோய்களின் உதாரணங்கள் பின்வருமாறு:-

ஸ்கிசோபிரண்யா (Schizophernia), என்னும் மனமுறிவு நோய், ஸைக்கட்டிக்டிப்ரஸன் (Phychotic Depression), ஸைக்கட்டிக் எக்ஸ்ஜட் மெண்ட் (Psychotic Excitement) மனவெழுச்சி முதலியவையாம்.

### மனநோய் தோற்றுவாய்க்கு காரணங்கள் யாவை?

பல தரப்பட்ட காரணங்களால் மனநோய் உண்டாகிறது. பாரம்பரியம், பிறப்பு மூல இயலியல் சிக்கல், குடும்பச்சூழ்நிலை, மூளைத் திரவங்களில் இரசாயன மாறுபாடு, உடல் செயலாற்றத்தில் மாறுதல், நாகரீக பண்பாட்டு வகை பின்னணியில் வித்தியாசங்கள், வாழ்க்கைப் போராட்டக் கஷ்டங்கள், உடல் நோய்கள் போன்றவை காரணங்களில் சிலவாகும்.

மனச்சிதைவு (Schizophernia), மனவெழுச்சி வாட்ட நோய் (Manic - Depressive Psychosis) போன்ற சில மனநோய்கள் சிற்சில குடும்பங்களில் அதிகமாகத் தோன்றுவதைக் காண்கிறோம். இதற்குக் காரணம் பாரம்பரியக் கோளாறு எனக் கொள்ளலாகும். நோய்த் தோற்றுவாய்க்குப் பாரம்பரியம் ஒரு ஏதுவாக இருப்பினும் மற்றப் பல காரணங்களும் நோய் வளர்வதற்கு உறுதுணையாக நிற்கின்றன எனலாம்.


### மனநோயையும், அறிவுத்திறன் குறைவையும் ஒன்று எனக் கொள்ளலாமா?

மனநோயும், அறிவுத்திறன் குறைவும் ஒன்றேயல்ல. அவை வேறு வேறானவை. அறிவுத்திறன் குறைந்தவர்களிடையேயும், சில மனநோய்கள் ஏற்படுவதுண்டு. ஆனால், மனநோய் உள்ளவர்கள் யாவரும் அறிவுத்திறன் குன்றியவர்கள் ஆகமாட்டார்கள். அறிவுத்திறன் குன்றியவர்கள் கற்றுக் கொள்வதிலே சிரமமும், தாமதமும் உள்ளவர்களாயிருப்பர். பொதுவாகவே குழந்தைப் பருவத்திலேயே இந்தக் கோளாறு இருப்பதைக் கண்டறியக்கூடும். இது மிகவும் கடுமையானதாகவும் அல்லது மத்திய தரமானதாகவும் அல்லது கடுமையில்லாது சாதாரணமானதாகவும் இருக்கக்கூடும். இந்தக் கோளாறுக்குக் காரணங்கள் மூளை பாதிக்கப்படுதல், சினை அணுக்களில் சீரழிவு முதலியனவாகும். ஆரம்பத்திலேயே அறிவுத்திறன் அளவை நிச்சயித்தவுடன், அதற்குத் தகுந்த, உரிய பயிற்சிகள் தருவதன் மூலம் அறிவு நிலை குன்றியோர் வாழ்வில், நல்ல தொரு திருப்பமும், மாற்றமும் கொண்டு வரமுடியும்.

சில வகையான மனநோய்கள், உதாரணமாக மனமுறி நோய், மனஎழுச்சி நோய் போன்றவை சில குடும்பங்களில் அதிகமாய்த் தோன்றிப் பாதிக்கின்றன. பாரம்பரியக் கோளாறே இந்நிலைக்கு அடிப்படையாய் ஆதாரவாய் இருக்கிறது எனக் கூறலாம்.

பாரம்பரியத்தில் வரும் தீங்கு என்ன வென்றால் மனநோய்த் தோற்றுவாய்க்கு எளிதில் ஆளாக்கும் தன்மையை உற்பத்தியாக்குவதே யாம். எனினும், மற்றப் பல காரணங்களும் நோய் விளைவுக்கு அவசியமாயிருப்பதனாலே ஓரிருவரைத் தவிர, அக்குடும்பத்தைச் சேர்ந்த பெரும்பாலானோர் இந்த நோயால் தாக்கப்படுவதில்லை.

மனநோய் தொற்றுநோய் அல்ல. அம்மை நோய், தட்டம்மை போன்று ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குத் தொற்றிப் பரவும் நோய், மனநோய் அல்ல.



### மனநோயாளர்கள் பாலுணர்வால் அதிகம் பாதிக்கப்படுகிறார்களா?

இல்லையென்றே பதிலளிக்கலாம். ஏனெனில், மனநோயால் வருந்துபவர்களில் பெரும்பாலானோர் பாலுணர்வு சம்பந்தப்பட்ட குற்றங்களில் ஈடுபடுவதில்லை. மனநோய் பாதிப்புள்ளவர்களில் பலருக்கு சிற்றின்பத்தில் ஈடுபாடு குறைந்தும் காணப்படுகிறது. பால் உணர்வுக் குற்றங்களைப் புரிபவர்கள் பெரும்பாலும் மனநோயால் அவதியுறுபவர்கள் அல்ல.

### மனநோயாளர்கள் கோபாவேச வன்முறையாளர்களா?

சமூகத்தில் உள்ள பெரும்பாலானோரை விட மனநோயால் பாதிக்கப்பட்டவர் வன்முறைகளைக் கையாளுபவர் எனக் கொள்ளுதல் சரியானதாகாது. எனினும், மனநோயாளர் அச்சமும், ஐயுறவும் கொண்டிருப்பதாலேயே குழப்பத்தோடு பயத்திற்கேற்ப சமூகத்தைப் பாதிக்கும் செயல்கள் ஆற்றுகிறார்கள் எனக் கொள்ளலாம். அப்பேற்பட்ட சந்தர்ப்பங்களில் சமூகப் பாதுகாப்பிற்காகவும், நோயாளியின் நலனையும் கருதி அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியமேற்படுகிறது.

### மனநோயாளிகளின் நலனைக் கருதி அவர்களைப் பூட்டிப் பாதுகாப்பில் வைக்க வேண்டுமா?

பெரும்பாலான மனநோயாளிகள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படாமலேயே வெற்றிகரமாய் குணப்படுத்துகிறார்கள். அதனால் அநேகருக்கு மருத்துவமனையில் சேர்க்கப்பட வேண்டிய அவசியமில்லாமல் போய் விடுகிறது. எனினும், ஒரு சிலர் நோயின் கொடுமையினால், மிகவும் பாதிக்கப்படுவதின் நிமித்தம், மருத்துவமனையில் சேர்ந்து தீவிர சிகிச்சையும், ஆதரவும் பெற வேண்டியிருக்கிறது. என்றாலும், பெரும்பாலோர் முரட்டுத்தனமாக இருப்பதில்லை. அவர்களைப் பூட்டி வைக்கவும் தேவையில்லை. மனநோய் மருத்து மனையில் பெரும்பாலான அறைகள், பகுதிகள் பூட்டி வைக்கப்படுவதில்லை. மிகச் சிலரையே சமூகப் பாதுகாப்பிற்காகப் பூட்டி வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

### மனச் சிதைவு நோய் என்பதென்ன?

இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனப்பாங்கு (Mood) மிகவும் சீர்குலைந்திருக்கிறது. மூளையில் ஏற்படுகிற இரசாயன மாறுபாடும் இதற்கு ஒரு காரணமாயிருக்கலாம். இந்த நோயில் ஏற்படுகிற மனப்பாங்கின் மாறுபாடுகள் இரண்டு; ஒன்று மன ஒடுக்கம்; வருத்தம், விரக்தி, இன்னொன்று மனவெழுச்சி நிலை. மன ஒடுக்க நிலையில் நோயாளி வருத்தத்தோடு காணப்படுகிறார். தன்னம்பிக்கை குறைந்திருக்கிறது, உற்சாகம் குறைந்து மந்தமாய் இருக்கிறார், சில சமயங்களில் குற்றம் செய்து விட்ட உணர்ச்சிகள் மிகுந்து நிலவ, தற்கொலை செய்யும் முயற்சிகளையும் இவர்கள் மேற் கொள்ளலாகும்.

ஆனால், மனவெழுச்சி நிலையில் இதற்கு நேர்மாறாக நிகழ்கிறது. இந்நோயினால் பாதிக்கப்பட்டோர், தங்களது யதார்த்தமான நிலையில் இருக்க வேண்டியதைவிட அதிகமான ஆனந்தம் கொள்கிறார்கள். அவர்களது தன்னம்பிக்கை அதீதமாயிருக்கிறது. மிகுதியான, அனாவசியமான செய்கைகளும், அதிகமான பேச்சும், வீணான செலவுகளும் உள்ளன. மேலும் விரைவில் கோபம் கொள்கிறார்கள். இதோடு தங்களுக்கு உன்னத சக்திகளும், வலிமைகளும் இருப்பதாக நம்புகிறார்கள். இம்மாதிரியான மனப்பாங்கின் மாறுதல்கள் சாதாரணமாயிருக்கலாம் அல்லது கடுமையானதாக இருக்கலாம். குறுகிய அல்லது நீண்டகால அளவில் நிகழலாம். மாறி, மாறி நீண்ட இடைவெளியோடும், இம்மாறுபாடு தோன்றலாம். தற்கால மருத்துவ விஞ்ஞானம், பல சக்திவாய்ந்த குணந்தரும் மருந்துகளைக் கையாண்டு நோயின் கடுமையைக் குறைக்கவும், பின்னர் வராது தடுக்கவும் கூடிய நிலையை உருவாக்கி வருகிறது.

### மன அழிவு டிமன்சியா (Dementia) என்றால் என்ன?

மூளை செயல் இழக்கக் காரணமான பல வகை நிலைகள் அல்லது நோய்களைக் குறிப்பது மன அழிவு என்னும் நோய்த் தன்மை. இந்த அமைவு நிலை அல்லது நோய் தலையில், மண்டையில் ஏற்படும் காயங்களால் உண்டாகலாம். வெவ்வேறான நோய்களின் அடிப்படையிலும் நேரலாம். அல்லது முதுமையில் ஏற்படும் கோளாறுகளும் இதை உண்டு பண்ணக் கூடும். இந்த நோயின் அறிகுறிகள் வெளிப்பட்டவுடன் வைத்திய ரீதியான பரிசோதனைகள் செய்வது மிகவும் அவசியம்.

### மனநோய்ச் சிகிச்சை பற்றிய பல பொருத்தமில்லாக் கருத்துக்கள் உள்ளனவே!

மன நோய்களைப் பற்றிய மூட நம்பிக்கைகளும், தவறான கருத்துக்களும் பொதுமக்களிடையே மலிந்து கிடக்கக் காண்கிறோம். தெய்வ கோபத்தால் மனநோய் தோன்றுவதாகச் சிலர் நம்புகிறார்கள். பேய், பிசாசு போன்றவை பிடிப்பதாலும், சாத்தானின் சதியாலும் மனநோய்கள் மக்களைத் தாக்கித் துன்புறுத்துவதாகப் பலர் எண்ணுவதோடு, பிறருக்கும் எடுத்துரைக்கிறார்கள். ஏவல், பில்லி, சூனியம், கிரக தோஷங்கள் போன்றவைகளும் மனநோய்க்கு முக்கிய காரணங்களாக நம்பப்படுகின்றன. இதன் விளைவாக மனநோய் சிகிச்சைக்காக, பாமர மக்களும், மற்றவர்களும், வைத்தியக் கல்வியோ, அனுபவமோ ஏதுமில்லாத பூசாரிகளையும், மந்திரவாதிகளையும், வேஷதார ஏமாற்றுக்காரர்களையும் அணுகி அவதிப்படும் அவல நிலை ஏற்படுகிறது. இவை மாறி மனநோய்க்குத் தகுந்த சிகிச்சை உண்டு என்பதைப் பொதுவாக மக்கள் உணர வேண்டும்.

நோயாளிகள் வியாதியின் இயல்புக் கேற்பவும், அவரது வயது, உடல், ஆரோக்கிய நிலை முதலியவற்றைப் பொறுத்தும் சிகிசையின் முறை அமையும்.

### மனோதத்துவ முறையிலான சிகிச்சை:

இதை அறிவுரைச் சிகிச்சை என்வும் கூறலாம்.

இந்த வகைச் சிகிச்சையின் வழியாக மருத்துவர், பேச்சுவாதத்தால், ஆய்வு

(19ம் பக்கம் பார்க்க)

## பேனாப் பயங்கரவாதி...

(10 ம் பக்கத் தொடர்ச்சி)

அறிந்து வெகு தொலைவில் லண்டனில் இருந்து கொண்டு, மிகவும் துரிதமாகச் செயற்பட்ட சந்தேசியவைச் சேர்ந்த எனது நண்பராகிய பண்டார, தமிழ் மொழிப்பிரிவின் தயாரிப்பாளராகிய ஆர்.மகாதேவன் அண்ணா ஆகியோரை என்னால் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

இதேபோல, கொழும்பில் உள்ள பல்வேறு தொடர்புத் துறைசார்ந்த அமைப்புக்களும் மட்டக்களப்பில் உள்ள கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கமும், அப்பகுதியைச் சேர்ந்த இரண்டு பிரதேச சபைகளும் மற்றும் முக்கியஸ்தர்களும், மிகுந்த அக்கறையோடு செயற்பட்டு அறிக்கைகளையும் வெளியிட்டிருந்தார்கள். வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கம் உட்பட சில முக்கிய அமைப்புக்களைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள், எனது மனைவி என்னை நேரடியாக வந்து சந்திக்கும் வரையும், பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் உயரதிகாரிகளைத் தொலைபேசியின் ஊடாகத் தொடர்ச்சியாகத் தொடர்பு கொண்டு, எனது நலன்கள், நிலைமைகளை அறிந்து கொள்வதற்காகச் செயற்பட்டார்கள். இதே போல பிரான்ஸ் நாட்டின் செய்தித் துறை சார்ந்த முக்கியமான அமைப்பு ஒன்றும், அவுஸ்திரேலியாவில் உள்ள MEAA என்ற செய்தி ஊடகத்துறை சார்ந்த அமைப்பும், எனது கைது தொடர்பாக தமது கண்டனத்தைத் தெரிவித்து, உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என கோரியிருந்ததுடன் நின்று விடாமல், எனது கைது தொடர்பாக அமைச்சர் மங்கள சமரவீரவுடன் நேரடியாகப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தன.

இதே போல, பாராளுமன்ற உறுப்பினர்களாகிய த.சித்தார்த்தன், அஸ்வர், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரும் பாராளுமன்றத்தில், ஸ்ரீகஜன் உட்பட கைது செய்யப்பட்ட பத்திரிகைத் துறை சார்ந்தவர்களுக்காக உரத்துக் குரல் எழுப்பியிருந்ததை நான் பின்னர் அறிந்து கொண்டேன். பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் பாராளுமன்றத்தில் எனது கைது தொடர்பாக ஆட்சேபம் தெரிவித்து, உண்மையான நிலைமை குறித்து அடித்துக் கூறியிருந்த கருத்துக்களை எனது மனைவியின் மூலமாக, நான் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதே அறிந்து கொண்டேன். இதே போல. ஏனைய அரசியல் கட்சிகளைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய பலரும் நேரடியாகவும் பின்னணியிலும், பத்திரிகையாளர்களுக்காகக் குரல் எழுப்பிச் செயற்பட்ட தன்மை பத்திரிகைத் துறை சார்ந்த அனைவராலும் மீட்டுப் பார்க்கத் தக்கது என்றே எண்ணுகின்றேன்.

ஏற்கெனவே குறிப்பிட்டது போல, குறிப்பிட்ட ஒரு முக்கியமான சம்பவம் தொடர்பாக பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் நடத்தி வந்த விசாரணையின் போது, முக்கியமான ஒரு சந்தேக நபர் எழுதியிருந்த கடிதம் ஒன்றில் வீரகேசரி மாணிக்கவாசகர் என்று குறிப்பிடப்பட்டிருந்த சம்பந்தம் தொடர்பாகவே என்னைக் கைது செய்து விசாரணைக்கு உள்ளாக்கியிருந்தார்கள். ஆயினும், குறிப்பிட்ட சந்தேக நபருடைய டயறியில் என்னுடைய பெயரும், தொலைபேசி இலக்கமும் இருந்ததாகக் கதைவிட்டு, அழகாகச் சோடனையிட்டு, முந்திரிக் கொட்டையைப் போலவும் ஏதோ முழு விடயங்களையும் உடனிருந்து அறிந்தது போலவும் கட்டுரைகளும், ஆசிரியத் தலையங்கமும் எழுதிய ஆங்கிலப் பத்திரிகைகள் பற்றி, விசாரணை முடிந்து நான் விடுதலையாகி வந்திருக்கின்ற நிலைமையில் எதையும் தெரிவிக்க வேண்டும் என்ற அவசியமில்லை என்றே கருதுகின்றேன்.

மொத்தத்தில், பயங்கரவாதம் தொடர்பாக, ஸ்ரீ கஜன், நான் உட்பட செய்தித்துறை சார்ந்த நான்கு பேர் திடீரென கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமையானது, இலங்கையின் செய்தித் துறையைச் சார்ந்த அனைவரையும், தம்மை ஒரு சுய தேடலுக்கு உட்படுத்துவதற்குரிய ஒரு கட்டாயத்தை ஏற்படுத்தி விட்டது என்று நினைக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இலங்கையின் செய்தித்துறையில், மாகாணத்தில் உள்ள செய்தியாளர்களும் முக்கியத்துவம் மிக்கவர்களே என்ற யதார்த்தம் மிகத் தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது. அலுவலகங்களில் இருந்து கொண்டு, வெறும் அறிக்கைகளையும், செய்தியாளர் மாநாடுகளில், வழங்கப்படுகின்ற பிரசுரங்களையும், அவை தொடர்பாக எழுகின்ற சந்தேகங்களுக்கு அளிக்கப்படுகின்ற டெக்னிக்கல் முறையிலான பதில்களையுமே வேத வாக்காகவும், உண்மையான நிலைமைகள் எனவும் திருப்தி கொண்டு செய்திகளையும், விமர்சனங்களையும், ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதுகின்ற பத்திரிகையாளர்கள் மத்தியில், ஸ்தலத்தில் இருந்து சம்பவங்களையும், உண்மைகளையும், தரிசித்து எழுதுகின்ற மாகாண பத்திரிகையாளர்களும் முக்கியமானவர்களே என்பதை நாடளாவிய ரீதியில் உணர்த்தியுள்ளது என கருதுகின்றேன். பல சிரமங்களுக்கும், கஷ்டங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் உள்ளாகிய நிலையில் இந்த மாகாண பத்திரிகையாளர்கள் செயற்பட்டு வருகின்றார்கள் என்ற அறியப்பட வேண்டிய உண்மையையும் அனைவருக்கும் தெளிவுபடுத்தி உள்ளது.

பத்திரிகையாளர்கள் கைது தொடர்பாக, கடந்த கால சம்பவங்களை இரை மீட்டு, கைது செய்யப்படுபவர்களுக்கு எமது நாட்டில் மிகச் சாதாரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் பற்றி அச்சம் தெரிவித்து, அதற்காக உறுதியோடு குரல் கொடுக்க வேண்டியதைத் தெளிவாக இடித்துரைத்த சரிநிகரின் சரியான செயற்பாட்டை, ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் நான் நன்றியறிதலோடு நினைவு கூர்கின்றேன். இந்த விடயம் தொடர்பாக நிதானமாகச் சிந்தித்து, தமிழ்ப் பத்திரிகையாளர்களின் அவல நிலைமைகள் பற்றியும், அவர்களது நலன்கள் குறித்து இயல்பாகவே செயற்படத் தவறியவர்களையும், தமிழ்ப்பத்திரிகையாளர்கள் என்ற ஒரே காரணத்திற்காக நினைத்ததையெல்லாம், அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படத்தக்க வகையில் எழுதலாம் என்று எழுதிய ஆங்கிலப் பத்திரிகைச் செய்தியாளர்களையும், நேர்மைத் திறத்துடன் உலகத்திற்குத் தோலுரித்துக் காட்டியுள்ள சரிநிகரின் சரியான செயற்பாடு, இனிமேலாவது, செய்தித்துறை சார்ந்த அனைவருக்கும், ஒரு முன்மாதிரியாகக் கொள்ளப்பட வேண்டும் என்று விரும்புகின்றேன்.

மொத்தத்தில், பத்திரிகையாளர்களைப் பயங்கரவாதத்துடன் தொடர்பு படுத்திக் கைது செய்து, பொலிசார் விசாரணைக்கு உள்ளாக்கியதன் மூலம், இலங்கையின் பத்திரிகைத் துறையானது, தன்னைச் சரியான முறையில் இனம் காட்டிக் கொண்டுள்ளது. செய்தியாளர்கள் மீது தமிழ் மக்களும் சமூகப் பெரியார்களும், நாடளாவிய ரீதியில் மட்டுமல்லாமல், உலகளாவிய ரீதியில் கொண்டுள்ள பரிவும் பற்றும் வெளிப்படுவதற்குரிய ஒரு நல்ல சந்தர்ப்பமாக இது அமைந்து விட்டது எனக் கூறினால் அது தவறாகாது என்றே எண்ணுகின்றேன். அது மட்டுமல்லாமல், பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டமையானது, பல்வேறு நிலைகளிலும், பத்திரிகையாளர்கள் கௌரவத்துடன் நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளதுடன், பத்திரிகைத் துறையானது இதன் மூலம் தன்னையே மேன்மைப்படுத்திக் கொண்டுள்ளது என்றே கருதுகின்றேன்.

## மனநோய்க்கு....

(18ம் பக்கத் தொடர்ச்சி)

ரையால், கலந்துரையாடல் போன்ற வகைகளில் நோயாளியிடம் பேசிப்பேசி, மெதுவாய்ப் பிரச்சினைகள் என்னவென்று தெளிவுபடுத்தி அவற்றைத் தக்க முறையில் கையாளவும் உதவுதலாகும். இம்முறை சிகிச்சையைத் தனிப்பட்டவருக்கோ அல்லது ஒரே சமயத்தில் சிலருக்கோ தரலாம்.

***நடத்தை மாற்றுச் சிகிச்சை முறை . பிஹேவியர் சிகிச்சை:***

இதன் மூலமாக நோயாளியின் தினசரி வாழ்க்கை நடைமுறைகளையும், சிந்திக்கும் முறைகளையும் மாற்றி நோய்குறிகளைக் குறைப்பதாகும்.

***மருந்து மூலம் சிகிச்சை***

மருந்துகள் வாயிலாக மனநோய்களின் இயல்பை மாற்றிடவும், படபடப்பைக் கட்டுப்படுத்தவும், வருத்தத்தை மனச்சோர்வைப் போக்கவும் சிகிச்சை தரப்படுகிறது.

***மின்சாரச் சிகிச்சை:***

இது பெரும்பாலும் கடுமையான மனச்சோர்வு நோயில் மிக நல்ல பயனைத் தரும் வகையில் உபயோகப்படுத்தப்படுகிறது. மருந்துகளினால் முன்னேற்றங் காணாத சந்தர்ப்பங்களில் மின்சாரச் சிகிச்சை நல்ல பலனைத் தர வல்லது.

***கலந்து பேசுதல் முறை:***

பயிற்சி பெற்ற அறிவுரை கூறுபவர் மூலம், மனநோயாளி கலந்துரையாடல் சிகிச்சை ஏற்பது, சிகிச்சையின் முக்கிய அம்சமாகும். கணவன் - மனைவியருக்குள் ஏற்படும் பூசல் தீரக் கூறும் அறிவுரை, அதே போன்று குடும்பத்திற்கு, தனிப்பட்ட நபர்களுக்கு ஏற்படும் சிக்கல்கள் நீங்க வழிகாட்டல், நெருக்கடி சமாளித்தல், தொழிலாளி - முதலாளி உறவில் சமாதான உதவி போன்ற மற்றப் பல வகைகளும் இந்த அறிவுரை முறை சிகிச்சையில் இடம்பெறுவன.

## சோஷலிச....

கவும், வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து படையினரை வாபஸ் பெறும்படியும், தொடர்ந்து குரலெழுப்பி வரும் சோ.ச.க.-யினருக்கு எதிரான இந்த நடவடிக்கை கடந்த காலங்களில் மாற்று சக்திகளுக்கு வடக்கில் புலிகளால் நேர்ந்த நிலைமைகளை மீண்டும் ஞாபகத்துக்குக் கொண்டு வருகின்றன. ஏனைய தமிழ் இயக்கங்கள், பெரும்பாலானவை இன்று அரசாங்கத்துடன் இருக்கின்ற போதும் அந்த நிலைமைக்கு தள்ளியதில், புலிகளின் சகோதரப் படுகொலைகளுக்கும், வேட்டையாடல்களுக்கும் குறிப்பிட்டளவு பாத்திரமுண்டு என்றால் அது மிகையாகாது. இனி மேலும் எந்த மாற்று சக்திக்கும் வடக்கில் இடமில்லை என்பதற்கான சமிக்ஞையை புலிகள் காட்டுகின்றார்களா என்ற கேள்வியை எழுப்பத் தோன்றுகிறது.

அதே வேளை சோ.ச.க.வினர் ஆயுதந் தாங்காத-நிராயுத பாணிகளாக அங்கு வெகுஜன மட்டத்திலான வேலைகளிலேயே ஈடுபட்டு வரும் ஒரு கட்சி என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் இந்தக் கைதினை வெறும் கைதாகப் பார்க்காமல் கம்யூனிஸ்டுகளுக்கெதிரான புலிகளின் போக்கின் ஒரு பகுதியாகவும் காண வேண்டியுள்ளது.

புலிகளின் இந்த நடவடிக்கைக்கு எதிராகச் சோ.ச.க.வினர் அனைத்துலக மட்டத்தில் பிரச்சாரத்தை ஆரம்பித்தமை தவிர்க்க முடியாது. இது சர்வதேச மட்டத்தில் போராட்டத்தின் மீதான ஆதரவைப் பலவீனப்படுத்தவும் செய்யும் என்பதையும் புலிகள் கவனத்திற் கொள்ள வேண்டும். இந்தப் போக்குகள் புலிகளின் முன்னைய ஜனநாயக விரோத அராஜகப் போக்கை மீள உறுதி செய்கின்ற ஒரு போக்காகக் கொள்ள வாய்ப்பையும் அளித்துள்ளது என்றால் அது மிகையில்லை.

பெரும்பான்மையான தமிழ் இயக்கங்கள் மற்றும் ஏனைய சிறு இயக்கங்கள் (இவற்றுள் பல இயக்கங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவான செயற்பாட்டையே கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்-அதன் ஜனநாயக விரோத அராஜக செயற்பாடுகளைத் தவிர) பலவும் கூட இதே போன்ற அராஜக நடவடிக்கைகளின் மூலம் புலிகளால் தடை செய்யப்பட்டுக் கைது செய்யப்பட்டு அவற்றின் உறுப்பினர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டமையும், அதே போல் ந.ச.ச.க.வின் மத்திய குழு உறுப்பினரான ஏ.கே.அண்ணாமலையும் வேறு பல இடதுசாரிக் கட்சி உறுப்பினர்களும் படுகொலை செய்யப்பட்டமையும் வரலாறு.

மைக்கல் பற்குணம் படுகொலையில் தொடங்கித் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் சமாந்தரமாக வளர்ந்து வந்த இந்த மாற்றுக் கருத்துக்களை நசுக்கும் அராஜகப் போக்கானது, செடியை விழுங்கும் குருவிச்சையாக இன்று விடுதலைப் போராட்டத்தையே விழுங்கும் நிலையில் உள்ளது.

இந்த நிலைக்கு முடிவு தான் இல்லையா?

## மறக்க முடியவில்லை!

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தினர் தமது 'புதிய கண்ணோட்டம்' பத்திரிகையை விற்பதற்காக ஒரு வீட்டிற்குச் சென்றனர். வீட்டுக்காரர் தட்டிக் கழிக்கப் பார்த்தார். அப்போது ஈ.பி.ஆர்.எல்.எப்பினர் புலிகள் கொண்டு வந்தால் மட்டும் வாங்குவீர்கள். எம்மிடம் வாங்குவதற்குத் தான் உங்களுக்கு கஷ்டம், என்ன என்றார்களாம். உடனே வீட்டுக்காரர் 'அடடே நீங்களா எனக்குத் தெரியாமற் போய் விட்டது. நான் யாரோ பாடசாலை மாணவர்கள் என்று நினைத்து விட்டேன் கொண்டு வாருங்கள் பத்திரிகையை' எனக் கூறி பத்திரிகையை வாங்கினார்களாம்.

என்ன இருந்தாலும் பழைய இந்தியப்படை கால அனுபவங்களை இலேசில் மறந்து விட முடியுமா என்ன?

## தமிழ் மக்களின்....

(17ம் பக்கத் தொடர்ச்சி)

அது கொள்கை அடிப்படையிலான ஒரு ஐக்கியத்தால் இயலுமே ஒழிய, அரசியற் சந்தர்ப்பவாதத்தாலல்ல.

ஒரு கூட்டணியுடன் இணைய விரும்பும் எந்தவொரு சக்தியும் கூட்டணியை ஒரு முழு அமைப்பாகக் கொண்டே அதனுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும். தனித்தனியே பேசி எவரதும் நப்பாசையைக் கிளறிப் பிளவுபடுத்தும் முயற்சிகள் நேர்மையான உறவை விரும்பும் சக்திகள் செய்கிற காரியமல்ல.

1963ல் சிறிமா பண்டாரநாயக்காவுடன் பிலிப் குணவர்த்தன பேசியபோது மூன்று இடதுசாரிக் கட்சிகளுட்னும் உடன்பாடும் கூட்டணியும் என்று பிடிவாதமாக நின்றார். அது யோக்கியமானது. என்.எம்.பெரேரா அதற்குள்ளாகத் தான் போய் சிறிமாவுடன் பேரம் பேசி ஆட்சியில் சேர்ந்ததன் விளைவாக இடதுசாரி ஐக்கிய முன்னணி உடைந்தது மறக்கக் கூடாத ஒரு பாடம்.

சிறிமாவின் பழைய ஆட்டத்தை ஜே.வி.பி. இன்று ஆட ஒரு தடையும் இல்லை. அதற்குப் பலியாவது எவரதும் அரசியற் தலை விதியாயின் அதை வேறு எவரும் தடுக்கவும் இயலாது. ஆயினும், இப்போதைக்கு ஜே.வி.பி. தனது தேசிய இனக் கொள்கையைத் திருத்திக் கொள்ளாத வரை அதனுடன் இடதுசாரி ஐக்கியம் சாத்தியப்படாது என்றே நம்புகிறேன்.

வசந்த திசாநாயக்காவின் கூற்றில் ஒரு முக்கிய தவறுண்டு. 1963ல் பிலிப்பைத் திருப்தி செய்வதற்காக ல.ச.ச.கட்சியோ, கம்யூனிஸ்ட் கட்சியோ தமது மொழிக் கொள்கையை மாற்றவில்லை. 1956க்குப் பின்பு சிங்களம் அரச கரும மொழி என்பது நடைமுறை அரசியலில் முடிந்த முடிவாயிற்று என்பதை 1957ல் பண்டாரநாயக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்திய தமிழரசுக் கட்சியே மறைமுகமாக ஏற்றுக் கொண்டு விட்டது. கம்யூனிஸ்டுகள் அதே கால அளவில் சிங்களமே அரச கரும மொழியாக இருக்கத் தமிழ் மக்களது முழுமையான மொழியுரிமைக்காகக் குரல் கொடுத்தனர். 1960ன் தேர்தல்கள் இரண்டினதும் பின்னர் சமசமாஜக் கட்சிக்குள் சம அந்தஸ்து என்ற கோரிக்கையைக் கைவிடும் எண்ணம் ஓங்கியது. பிலிப்புக்கும், ல.ச.ச.கட்சியுள் ஏற்பட்ட மாற்றத்துக்கும் ஒரு தொடர்புமில்லை. ஆயினும், 1956ன் பின் 1970வரை மொழியை விட்டால் வேறு அரசியலையே தேர்தலிற் காணாத வடக்கில் இது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது உண்மை தான்.

1971ல் ஜே.வி.பி. அரசாங்கத்தின் மீது மட்டுமன்றி சகல இடதுசாரிகள் மீதும் தாக்குதல் தொடுத்தது. அரசாங்கத்தின் பங்காளிகளான இரண்டு இடதுசாரிக் கட்சிகளும் ஜே.வி.பியின் தொழிலாளி வர்க்க விரோத இனவாதப் 'புரட்சி'யில் இணைந்திருக்க வேண்டும் என்பது தான் கட்டுரையாளரது எண்ணமோ? அதேவேளை, (இடது) கம்யூனிஸ்டுகளும் சமசமாஜக்கட்சியின் இடதுசாரிகளும் ஜே.வி.பி. மீதான கடுமையான அடக்குமுறையைக் கண்டித்தனர். 1987 - 89ல் விக்கிரமபாகு கருணாரத்னவின் வயிற்றிற் பாய்ந்த குண்டு எவருடைய துப்பாக்கியிலிருந்து புறப்பட்டது? விஜயகுமாரணதுங்கவுடைய உயிரைப் பறித்தது யார்? பிரேமதாசவுடனும், ஐ.தே.கவுடனும் 1977 - 80 காலத்திலும் கூட, ஜே.வி.பிக்கு இருந்த உறவின் மர்மங்கள் பல. இத்தனைக்கும் ஜே.வி.பி. மீதான காட்டு மிராண்டித்தனமான அரச அடக்கு முறையைத் தயங்காது கண்டித்தவர்கள் இடதுசாரிகளே. 1987 - 88ல் அரசுடன் தோளோடு தோள் நின்ற இடதுசாரிகள் யாரென்று எனக்குத் தெரியவில்லை. தமிழ்த் தேசியக் குழுக்களாக இருக்குமா?

தென்னிலங்கை மக்கள் எதிர் நோக்குகிற பிரச்சினைகளை யுத்தத்தினின்றும் பிரித்துப் பார்க்க முடியாது. போர் நிறுத்தம் பற்றியே ஒரு தெளிவான உறுதியான நிலைப்பாடற்ற ஒரு சக்தியுடனான ஐக்கியத்தால் தென்னிலங்கையில் உள்ள பிரச்சினைகளைத் தனியே தீர்க்கவோ தணிக்கவோ இயலும் என்று நம்புவதற்கான சுதந்திரம் அரசியற் சிறுபிள்ளைகளது.

***சிவசேகரம்,***

***பேராதனை***

Registered as a newspaper in Sri Lanka


# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"

-பாரதி

இல.04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05.

தொலைபேசி : 593615, 584380

தொலைமடல் : 594229


## புதைகுழிகளைத் தோண்டி வைப்போம்!

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து நான்காண்டுகள் ஓடிவிட்டன. நான்காவது இறுதிச் சாதனையாக 'அதன்மாகாண சபைத் தேர்தலை ஒத்திப்போடும் முடிவு அறிவிக்கப்பட்டது. அதுவும் காலவரையறையற்ற ஒத்திவைப்பு!

வடக்கு-கிழக்கு, தேர்தல் பாதுகாப்புக்காக ஆயுதப் படையினரை மாகாண சபைத் தேர்தல் நடக்கும் இடங்களுக்கு கொண்டு வர முடியாதென்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை அறிவித்ததைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

யுத்தம் எப்போது முடியும் என்று சொல்ல முடியாது என்பதாலோ என்னவோ மாகாண சபைத் தேர்தலும் காலவரையறையற்று ஒத்திப் போடப்பட்டுள்ளது.

நான்கு ஆண்டுகட்கு முதல், பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்பாக, நடந்த தேர்தல் பிரச்சாரங்களில் பொ.ஐ.மு.வினர் பேசிய வார்த்தைகள் காதில் ஒலிக்கின்றன.

ஜனநாயக மீட்டெடுப்பு, சமாதான இலங்கை, வெளிப்படைத் தன்மை வாய்ந்த அரசாங்க நடவடிக்கைகள், மனித உரிமைகளைப் பேணல், சமாதானத்திற்கான பேச்சுவார்த்தை, தீர்வுப் பொதி, ஊழல் அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றை ஒழித்தல் என்று எவ்வளவு அற்புதமான வார்த்தைகள் அப்போது உதிர்க்கப்பட்டன. 17 வருட காலமாக படுகொலை ஆட்சி நடாத்திய ஐ.தே.க.வை தூக்கியெறிந்து சமாதான பெண் புறாவாக, தேசத்தின் விடிவெள்ளியாக தோன்றிய சந்திரிகாவை நோக்கி எவ்வளவு நம்பிக்கையுடன் தேசம் திரண்டது. ஜனநாயகவாதிகளும் சமாதான விரும்பிகளும் போதையேற்றப்பட்டவர்களாக சந்திரிகா மந்திரமே தாரக மந்திரம் என்று உச்சரித்துக் கொண்டிருந்தனர்.

வரலாறு காணாத பேரலையை பொ.ஐ.மு தன்பின்னால் திரட்டியது.

ஆனால் அதிகாரம் கைக்குக் கிடைத்ததும், அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் ஒவ்வொன்றாகப் பறந்தன.

இலங்கையின் அரசியல் வரலாற்றைப் புரிந்த எந்த ஒருவரும் செய்யத் துணியாத அளவுக்கு கண்மூடித்தனமாகச் சந்திரிகா தரகர்களாகிப் போன ஜனநாயகவாதிகளும் சமாதான விரும்பிகளும் தாம் நம்பியது ஒரு மண் குதிர் என்று புரிந்து கொண்டனர். ஆயினும் அண்டிப் பிழைப்பதில் சுகம் கண்டு விட்ட சிலர் இன்னமும் அரசாங்கத்தை நியாயப்படுத்தியபடி அதனைக் காப்பாற்றுவதற்கு முயன்று கொண்டிருக்கின்றனர்.

ஆனால் மக்கள் தெளிவாகவே புரிந்து கொண்டுவிட்டார்கள். சந்திரிகா என்ற பேரில் தம்முன் தோன்றிய தலைவியும், அவரது கூட்டணியும் இன்னொரு ஐ.தே.க.வே என்பதை அவர்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

ஐ.தே.க. காலத்தில் இல்லாத எந்த ஜனநாயகம் இன்று நடைமுறையில் இருக்கிறது? சமாதானம் எங்கே ஓடிவிட்டது? யுத்தம் இன்றும் உக்கிரமாக ஏன் தொடர்கிறது? மனித உரிமைகளைப் பற்றிப் பேசியவர்களே அவற்றை மீறி எப்படி நடந்து கொள்கிறார்கள்? ஊழல் அதிகார துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்தவென கொண்டுவரப்பட்ட ஆணைக்குழு இயங்கமுடியாமல் முடக்கப்பட்டிருப்பது ஏன்? அரசியற்தலைவர்களை -ஆளுங்கட்சி அரசியல்வாதிகளை - விசாரிக்க முடியாமல் அது திணறுவது ஏன்? தீர்வுப் பொதி எங்கே? போய் ஒழித்துக் கொண்டது? திரம்பவும் அவசரகாலச் சட்டம் ஏன் போடப்படுகிறது? அந்தச் சட்டத்தின் கீழ் அப்பாவிகள் ஆயிரக்கணக்கில் அள்ளிக்கொண்டு போகப்படுகிறார்களே ஏன்? பத்திரிகையாளர்கள் ஏன் மிரட்டப்படுகிறார்கள் என்ற கேள்விகள் தொடர்ந்து மக்கள் மத்தியில் கேட்கப்பட்டு வருகின்றன!

இந்த நிலையில் தான் மாகாண சபைத் தேர்தலும் ஒத்திப்போடப்பட்ட ஜனநாயக சாதனையும் நடந்துள்ளது. வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக முன் வைக்கப்பட்ட இந்த மாகாண சபைகள் வடக்கு கிழக்கில் இயங்கியது சொற்ப காலம் தான். அதுவும் இந்தியப் படையின் அனுசரணையுடன்.

இந்த மாகாண சபை ஒரு சிலருக்கு மந்திரிப் பதவிகளையும் அதிகாரத்தையும் வழங்கியதைத் தவிர தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒரு மயிரளவு பங்களிப்பையும் வழங்கியதில்லை.

முழு இலங்கையிலும் அதிகாரப் பங்கீட்டைத் தருவதாக இது கூறப்பட்ட போதும், அதிகாரங்கள் எதுவும் பங்கிடப்படவில்லை. பரவலாக்கம் என்ற பேரில் அவை மையத்தில் நாணயக் கயிற்றைக் கொடுத்துவிட்டு நடக்கவிடப்பட்டன.

ஆக, இந்த மாகாண சபைத் தேர்தல் நடப்பதால், தமிழ், முஸ்லிம் மக்களோ, சிங்கள மக்களோ எந்த அரசியல் உரிமையையும் பெற்றுவிடப் போவதில்லை. அது நடப்பதும் ஒன்று தான், நடக்காமல் இருப்பதும் ஒன்று தான். ஆனால் அரசியல் அமைப்பு ரீதியாக மக்களுக்கு வழங்கப்பட்ட ஒரு உரிமை, பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் உரிமை, ஜனநாயக மீட்பர்களால் மறக்கப்பட்டிருக்கின்றது என்பது தான் இங்கு முக்கியமாகிறது நாலாவது ஆண்டுச் சாதனையாக.

அதுவும் யுத்தத்தைக் காரணம் காட்டி!

ஐந்தாவது ஆண்டுச் சாதனைகள் எப்படி அமையப் போகின்றன என்பதற்கு இது ஒரு முன்னுரையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. யுத்தத்தைக் காரணம் காட்டி எந்தச் செயலையும் செய்யலாமென்று பார்ப்பதற்கான ஒத்திகையாக இது வந்திருக்கிறது.

யுத்தம் எப்போது முடியுமென்பது யாருக்கும் தெரியாது! பாதுகாப்பு அமைச்சருக்கு அதை முடித்து வைக்கும் திராணி இருப்பதாகவும் தெரியவில்லை!

யுத்தம், யுத்தமுனையில் தான் முடிவுக்குவருமென்பது தான் இன்றைய "யுத்தத்தை நேரடியாக வழிநடாத்தும்" ஜனாதிபதியினதும் கருத்தாக உள்ளது.

யுத்தத்தின் முடிவு சமாதான முயற்சியின் வெற்றியில் இருப்பதாக அவர் சொன்னதெல்லாம் அவருக்கு மறந்து விட்டது.

ஆக, முடிவே அற்ற யுத்தத்தைத் தொடருவது தான் அவரது முடிவும் கூட. அப்படியானால், அடுத்த ஆண்டுச் சாதனைகள் எப்படி அமையுமென்பதை யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அது ஐ.தே.க.வின் 17 வருட ஆட்சியின் சாதனைகளை ஒரே வருடத்தில் சாதித்து விடும் என்பதில் ஐயமில்லை.

அதற்கு வாழ்த்துக் கூறுவோம்!

ஜனநாயகம், சமாதானம் மனித உரிமைகள் என்பவற்றுக்காக புதைகுழிகளை வெட்டி வைப்போம்!

எதிர்காலச் சந்ததி எலும்புக் கூடுகளைக் கிண்டி எடுக்கும் வாய்ப்பு இல்லாமல் அவற்றை எரியூட்டிவிட்டு மூடிவிடத் தயாராவோம்!

வாழ்க பொ.ஐ.மு!

வாழ்க அதன் சமாதான யுத்தம்!

## வவுனியா ஹர்த்தால்: அதிகாரப் போட்டி!

ஓகஸ்ட் 13ஆம் திகதி வியாழக்கிழமை காலை வவுனியா பஸ் நிலையம்.

பரமநாதன் பெற்றோல் நிலையத்தை நோக்கி ஒரு வாகனம் விரைந்து வந்து திடீரென பிரேக் போட்டு நிற்கிறது.

வாகனம் வந்த வேகமும் நிறுத்தப்பட்ட விதமும் வவுனியா மக்களுக்குப் பரிச்சயமான ஒன்று தான். வாகனத்தில் வந்தவர்கள் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தோழர்கள்.

வழமைக்கு மாறாக பெற்றோல் நிலைய ஊழியர்கள் பவ்வியமாக வந்து எரிபொருள் நிரப்பவில்லை. மாறாக தயங்கித் த்யங்கி கூறுகிறார்கள்.

"பெர்மிட் இருக்கிறதா?" கேள்வி எரிச்சலூட்டும் கேள்வி தான் ஆயினும் வவுனியாவின் குறுநில மன்னர்களிடம் பெர்மிற் கேட்கும் துணிவு பெற்றோல் நிலைய ஊழியர்கட்கு வரக்காரணம் ஓகஸ்ட் 4ஆம் திகதி முதல் பெற்றோல் நிரப்புவதற்கு முன் பெர்மிற்றை பார்த்து அதிலுள்ள தொகைக்கு மட்டுமே பெற்றோல் வ்ழங்கப்பட வேண்டும் என வவுனியா "பாதுகாப்பு வட்டாரங்கள்" அறிவித்திருந்தது தான்.

ஆயினும் இந்த அறிவிப்பு தோழர்கட்கும் சேர்த்துத் தான் என்பது அவர்களுக்கு தெரியாமல் போய் விட்டது. 'எங்களுக்கு பெர்மிற்றா' என்ற எரிச்சலை அடக்கிக் கொண்டு பெற்றோலை நிரப்பும் ஊழியர்களை மிரட்டியிரக்கின்றனர் தோழர்கள்.

பாவம் பெற்றோல் நிலைய ஊழியர்கள். யாருடைய சட்டதிட்டத்திற்குக் கீழ்ப்படிவது என்று அவர்களுக்குப் பயம். பெற்றோல் அடிக்காவிட்டால் தோழர்கள் கோபிப்பார்கள். அடித்தால் 'பாதுகாப்புப் படை' கோவிக்கும்.

ஓரளவு துணிவை வரவழைத்துக் கொண்டு அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

'அடிக்கவா மறுக்கிறாய்... இழுத்துப் பூட்டு ஷெட்டை' என்று உத்தரவு பிறந்தது வாகனத்திலிருந்து. இந்த உத்தரவுக்கு கீழ்ப்படிந்தார்கள் ஊழியர்கள். பூட்டக் கூடாது என்று 'பாதுகாப்பு தரப்பு' உத்தரவிட்டிருக்கவில்லை.யே என்ற துணிவு. வாகனம் விர் என்று கிளம்பிச் சென்றது.

வவுனியா றம்யா ஹவுசில் நீண்ட கியூ.

தங்களது மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்கள், கார்கள் என்பவற்றுக்கு எரிபொருள் வாங்குவதற்கான பெர்மிட்டைப் பெறுவதற்காக அங்கு முண்டியடித்துக் கொண்டிருந்தது அந்தக் கியூ. தமது வாகன பதிவுப் புத்தகம் காப்புறுதிப்பத்திரம் வாகன வரி அனுமதிச் சீட்டு என்பவற்றுடன் அவர்கள் கால்கடுக்க நின்று கொண்டிருந்தனர். மோட்டார் சைக்கிளுக்கு 25 லீட்டர், ஓட்டோவுக்கும் காருக்கும் 100 லீட்டர் என்று பெர்மிட் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது.

கடந்த ஓகஸ்ட் நாலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டிருந்த இந்தப் பெர்மிட் முறை காரணமாக அங்குள்ளவர்கள் ஏற்கெனவே உள்ள கியூக்களுடன் இதுவும் ஒன்று என்ற பெருமூச்சுடன் பெர்மிட் எடுக்க கியூவில் நின்று கொண்டிருந்தார்கள். கியூவைப் பார்த்தபடி நகர்வலம் போய்க்கொண்டிருந்த எந்தப் புளொட் தோழரும் இதைப்பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. வீட்டை விட்டு வெளியேறுமாறு இறம்பைக் குளம் வாசிகட்கு உத்தரவிட்ட புளொட்டினருக்கு அரசாங்கத்தினரின் இந்த உத்தரவு உறைக்குமா என்ன?

ஆனால் இந்தப் பெர்மிட் முறை தங்களுக்கும் தான் என்று தெரிய வந்தவுடன் அவர்களுக்கு வேகம் வந்து விட்டது. இதை விடக் கூடாது என்று சூளுரைத்தார்கள். பெற்றோல் நிலையங்களை மூடுமாறு உத்தரவு பிறந்தது. இது நடந்தது. வியாழன் காலை.

மதிய வேளை இந்தத் தகவல் பாதுகாப்பு வட்டாரத்திற்கு எட்டி விட்டது. அவர்கள் நிலையங்களுக்கு போய் திறவுங்கள் என்று உத்தரவு போட்டுவிட்டுப் போய்விட்டனர்.

பெற்றோல் நிலையங்கள் திறக்கப்பட்டன.

அதிகாரம் பரிகசிப்புக்குரிய அதிகாரமாகப் போய் விட்ட அவமானம் நமது தோழர்கட்கு. உடனே அவர்களது மூளைகள் 'மக்கள் போராட்ட' உத்தியைக் கையாள முடிவு செய்தன. வீதிகளில் எந்த வாகனமும் ஓடக்கூடாது. கடைகளைப் பூட்ட வேண்டும் என்று உத்தரவு பிறந்தது. கடைகள் பூட்டப்பட்டன. வானங்கள் அற்ற வீதி வெறிச் சோடியது. பஸ்சேவை ஸ்தம்பித்தது. தோழர்கள் நிலைமையைக் காண 'பிக் அப்லில்' நகர்வலம் வந்து கொண்டிருந்தனர். இராணுவம் நகர்வலம் வந்தது. போக்குவரத்தை ஸ்தம்பிக்க விடக் கூடாது என்று அவர்கள் கூறினர். பஸ்களை இராணுவ பாதுகாப்புடன் தமது வழமையான சேவையிலீடுபடப் பணித்தனர். வாகனங்களை ஓடவிடாது. தடுத்தும் ஓடினால் கொளுத்துவோம் என்றும் அதிகாரம் பேசிய தோழர்கள் கௌரவமாகப் பின்வாங்கத் தொடங்கினர்.

ஆயினும் கடைகள் சாப்பாட்டுக் கடைகள் தவிர திறக்கப்படவில்லை. ஞாயிரன்று பூரண ஹர்த்தால் இவ்வாறு 'வெற்றிகரமாக' நடைபெற்றது. எரிபொருள் கட்டுப்பாட்டால் மக்கள் படும் கஷ்டத்தை அரசுக்கு உணர்த்தவே இந்த ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டது என்று பத்திரிகைகளுக்கு அறிவித்தது புளொட்.

நிலைமை சரிவராவிடில் ஹர்த்தால் தொடரும் என்றும் அறிவித்துள்ளார்கள் தோழர்கள். திங்களன்றும் ஹர்த்தால் தொடர்ந்தது. சைக்கிளில் அரச தனியார் ஊழியர்கள் வேலைக்கு வருவதை காணக்கூடியதாக இருந்தது. ஆயினும் தோழர்கள் மட்டும் பிக் அப்பில் வழமைபோல நகர் வலம் வந்து கொண்டிருந்தார்கள். எரிபொருள் மீது கட்டுப்பாட்டை விதிப்பது மக்களை கஷ்டத்துக்கு உள்ளாக்கிவிட்டதாக தோழர்கள் மக்களுடைய இந்தக் கஷ்டத்துக்காக ஹர்த்தால் அனுஷ்டித்து எதிர்ப்புக் காட்ட முடிவு செய்வதற்கு தமது வாகனத்தக்கு பெற்றோல் நிரப்ப மறுக்கும் வரை காத்திருந்தது ஏன் என்று தான் தெரியவில்லை. மக்கள் மீது அக்கறை இருப்பவர்கள் பேர்மிட் பற்றிய அறிவிப்பு வந்தவுடனேயே நடவடிக்கையில் இறங்கியிருக்கலாமே!

எப்படியோ மக்களுடைய பிரச்சினை இதுவென்று புரிந்துகொண்டு அதற்காகவே தாம் எதிர்ப்புப் போராட்டத்தை நடாத்துகின்றோம் என்று அறிவித்தமைக்காக அவர்களுக்கு நன்றி சொல்லுவோம். ஆனால், பெற்றோல் விடயத்தை விட பாரதூரமான பல கஷ்டங்களை அங்குள்ள மக்கள் அனுபவித்து வருகிறார்களே அதெல்லாம் இந்தத் தோழர்களுக்கு தெரியாமல் போனது எப்படி? பாசுக்காக தூங்கிக் கிடப்பதும் நலன்புரி முகாம்களில் நாயை விடக் கேவலமாக அவர்கள் "வாழ்க்கை" நடாத்துவதும் இவர்களுக்கு தெரியாமல் போனது எப்படி? தமது ஊருக்கு திரும்புவோ தாம் விரும்பிய வேறு இடத்துக்குப் போகவே உரிமையற்று தவிக்கும் இந்த மக்கள் கழகத் தோழர்களின் கண்களுக்கு படாமல் போனது ஏன்? குறைந்த பட்சம் நலன்புரி முகாம்களில் வாடும் குழந்தைகட்கும் வயோதிபர்களுக்குமாவது அவர்கள் விரும்பிய இடங்களுக்குப் போக அனுமதி வாங்கித் தர இவர்களுக்கு முடியாமல் போனது ஏன்?

ஆக இந்த ஹர்த்தால் வெறும் இராணுவத்திற்கும் தோழர்கட்கும் இடையிலான அதிகாரப் போட்டி மட்டும் தானா?

## சோஷலிச சமத்துவக் கட்சியின் உறுப்பினர்கள் புலிகளால் கைது: கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான புலிகளின் வேட்டை?

சோஷலிச சமத்துவக் கட்சியின் (சோ.ச.க.-முன்னை நாள் புரட்சிகர கம்யூனிஸ்ட் கழகம்) வன்னிப் பிராந்திய அங்கத்தவர்களான பரமு திருஞானசம்பந்தன், காசிநாதன் நகுலேஸ்வரன் ஆகியோர் யூலை 26ஆம் திகதியும், இராசேந்திரன் சுதர்சன் என்பவர் ஓகஸ்ட் 02ஆம் திகதியும் கிளிநொச்சி, தருமபுரத்தில் வைத்து விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் முதல் இருவரும் சுவரொட்டி ஒட்டும் போதும் சுதர்சன் அதற்குப் பிறகும் புலிகளின் உளவுப் பிரிவைச் சேர்ந்த தீபன் என்பவரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் உளவுப் பிரிவின் பொறுப்பாளர் பொட்டு அம்மானிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இவர்களைப் பார்வையிட இதுவரை எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. அத்துடன் இவர்கள், எங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை உறவினர்களாலும் அறிய முடியவில்லை.

ஒரு புறம் சோ.ச.க.வினர் தென்னிலங்கையில் புலிகளின் ஆயதங்களை மறைத்து வைத்திருந்தனர் (சோ.ச.க. வின் உறுப்பினரான செல்லையா இராஜேந்திரன் இப்படித்தான் கைது செய்யப்பட்டு பல மாதங்களுக்குப் பின் விடுதலை செய்யப்பட்டார்) என்ற குற்றச்சாட்டின் பேரில் அரச படைகளால் வேட்டையாடப்பட்டுக் கொண்டிருக்கும் போது மறுபுறம் தங்களுக்கு எதிரானவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இலங்கை-இந்திய அரசாங்கங்கள் புலிகள் மீது விதித்த தடையை எதிர்த்து உள்ளூரிலும், இந்தியாவிலும் சர்வதேச அளவிலும் குரலெழுப்பி வந்தவர்கள் சோ.ச.க.வினர். 6வது திருத்தச் சட்டத்துக்கு எதிராக அப்போதிருந்தே தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருபவர்கள். 80களிலேயே தமிழீழ விடுதலைக்கான தமிழ் மக்களின் போராட்டம் நியாயமானதே என்று தெற்கிலே உறுதியாகவும், துணிச்சலுடனும் குரலெழுப்பியவர்கள் அவர்கள். இந்த ஒரு காரணத்திற்காகவே அவர்கள் புலிகளின் சகாக்கள் என்ற குற்றச்சாட்டுக்குள்ளானதும், பலர் கைது செய்யப்பட்டதும் தெரி ந்ததே. தமிழீழ விடுதலையின் தலைமைத்துவம் புலிகளதே என்றும் கூட அவர்கள் அன்று கூறியிருந்தனர். அன்ரன் பாலசிங்கம் அவர்களது "தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம்" என்ற சிறு நூலைத் தமிழாக்கித் தமது "தொழிலாளர் பாதை" இதழில் 1980இலேயே வெளியிட்டவர்கள் அவர்கள். அதை ஒரு சிறு நூலாகவும் வெளியிட்டிருந்தார்கள். புலிகளின் அராஜக நடவடிக்கைகளை விமர்சித்த போதும் அவர்கள் புலிகளைத் தேசிய விடுதலைக்கான போராட்டத்தின் தலைமைச் சக்தியாகவும் குறிப்பிட்டு வந்தார்கள். அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இன்று புலிகளால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமன்றி யுத்தத்துக்கு எதிராகவும், சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவா-

(19ஆம் பக்கம் பார்க்க)